விலை ரூபா: 15.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: இருபது

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2041 மார்கழி 25 ஞாயிற்றுக்கிழமை (09.01.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 021



MADRAS CEMENTS LTD

ரா ம் கோ

RAMCO CEMENT

RAMCO

SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து


# புலிகளை தோற்கடித்தது எப்படி?

# மாநாடு கூட்டுகிறது இலங்கை அரசு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்பட்ட விதம் தொடர்பில் உலகிற்கு வெளிப்படுத்தவும், எவ்வாறு தோற்கடிக்கப்பட்டார்கள் என்பதனை எடுத்தியம்பும் சர்வதேச மாநாடொன்று இலங்கையில் நடைபெறவுள்ளது. இந்த மாநாடு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெறும். (20ஆம் பக்கம் பார்க்க)

## உரும்பிராய்க்கு வந்த துன்பம் மேலும் ஒருவரைக் காணவில்லை

(யாழ்ப்பாணம்)

உரும்பிராயில் நேற்று முன்தினம் 2.00 மணியளவில் கடைக்குச் சென்றவர் நேற்றுவரை வீடு திரும்பவில்லை என கோப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

உரும்பிராய் மேற்கு வைத்தியசாலையைச் சேர்ந்த சின்னத்துரை குகதாசன் (வயது 52) என்ற குடும்பஸ்தரே காணாமல் போயுள்ளதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த குடும்பஸ்தர் நேற்று முன்தினம் பிற்பகல் 2.00 மணிக்கு விறகு வாங்குவதற்காகச் சென்றதாகவும் நேற்றுவரை அவர் வீடு திரும்பவில்லை எனவும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

## அமெரிக்க ஜி.எஸ்.பி. பிளஸ் இலங்கைக்கு கிடைக்கும்!

இலங்கைக்கு வழங்கி வந்த அமெரிக்க ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகையை மீண்டும் புதுப்பிப்பதற்கு அமெரிக்கா நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இலங்கைக்கு இதற்கு முன்னர் அமெரிக்காவால் வழங்கப்பட்டுவந்த ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் திகதியுடன் காலாவதியானது.

இந்த நிலையில் இதனை மீண்டும் புதுப்பிக்க அமெரிக்க உயர் அதிகாரிகள் இணைந்து (20ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் நவீன துப்பாக்கி தெவிநுவர தபால் ஊழியரிடம்

(கொழும்பு)

விடுதலைப்புலிகளால் பயன்படுத்தி வந்ததாக கருதப்படும் நவீனரக ரி-56 துப்பாக்கியையும் அதற்குரிய 48 ரவைகளையும் தெவிநுவர அஞ்சல் அலுவலகத்தில் பணிபுரியும் ஊழியர் ஒருவரிடமிருந்து பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இவரின் வீட்டு மேல்மாடியில் உரப்பையினுள் வைக்கப்பட்ட நிலையில் இவை கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். மீனவர் ஒருவர் (20ஆம் பக்கம் பார்க்க)

## இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு அரசு-கூட்டமைப்பு நாளை சந்திப்பு

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பது தொடர்பாக ஆராய்வதற்காக அரசாங்கத்துக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் அமைக்கப்பட்ட பிரதிநிதிகள் குழு நாளை 10 ஆம் திகதி அலரி மாளிகையில் சந்திக்கவுள்ளது.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பது தொடர்பாக ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட, இக் குழுவை நாளைய கூட்டத்துக்கு வருமாறு ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

இக் குழுவில் அரசாங்கத்தின் சார்பில் முன்னாள் பிரதமரும் அமைச்சருமான ரட்ணசிறி விக்கிரமநாயக்க, அமைச்சர்களான ஜி.எல்.பீரிஸ், நிமல் சிறிபால டி சில்வா ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப் (20ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலை. மாணவருக்கு இராணுவப் பயிற்சியா?

### வெகுண்டெழுகிறது மாணவர் ஒன்றியம்

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களுக்கு தகுதிபெற்ற மாணவர்களுக்கு ஒழுக்கத்தை கற்பிப்பதற்காக இராணுவ முகாம்களில் பயிற்சிகளை வழங்கி பல்கலைக்கழகத்திற்கு சேர்ப்பது என தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அண்மையில் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்திருந்ததை அனைத்துப் பல்கலைக்கழக மாணவ ஒன்றியம் கண்டித்துள்ளது.

இது குறித்து (20ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளூராட்சி சபைத் தேர்தல் பணிகளில் கட்சிகள் மும்முரம்

(கொழும்பு)

உள்ளூராட்சி தேர்தல் எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ளது. அதற்கான ஆரம்ப கட்டப் பணிகளில் பிரதான எதிர்க் கட்சிகள் மும்முரமாக ஈடுபட்டுள்ளன.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் தேர்தலில் போட்டியிடும் எனவும் வேட்பாளர் தெரிவு தற்போது இடம்பெற்று வருவதாகவும் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜெயந்த தெரிவித்துள்ளார்.

அத்துடன் வடக்குக் கிழக்கில் அனைத்து உள்ளூராட்சி சபைகளிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (20ஆம் பக்கம் பார்க்க)


NIBM
BUILDING COMPETENCIES
Jaffna
யாழ்ப்பாணம்

O/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள் மற்றும்
பல்கலைக்கழக அனுமதிக்கு காத்திருக்கும் மாணவர்களுக்கான
கணனிக் கற்கை நெறிகள் விரைவில் ஆரம்பம்

A statutory Body under the Ministry of Youth Affairs & Skills Development

T.P No- 021 222 0360 / 0361 / 0362

National Institute Of Business Management
No 40 College Road (opposite to Jaffna hindu play ground)
jaffna.

union assurance
Trust in your tomorrow, today.

உடனடி வேலைவாய்ப்பு

இலங்கையில் முன்னணி காப்புறுதி நிறுவனங்களில் ஒன்றான யூனியன் அஷ்யூரன்ஸ் யாழ். மாவட்டக் கிளைக்கு பின்வரும் பதவிகளுக்கு தகுதியானவர்களுக்கு உடனடி நியமனம் வழங்கவுள்ளது.



காப்புறுதி ஆலோசகர், தனிப்பட்டோர் நிதி ஆலோசகர், சிரேஷ்ட தனிப்பட்டோர் நிதி ஆலோசகர், தனிப்பட்டோர் நிதி முகாமையாளர், சிரேஷ்ட தனிப்பட்டோர் நிதி முகாமையாளர்.

தகுதி - க/பொ/த சாதாரணதரத்தில் கணிதம் உட்பட 6 பாடங்கள் சித்தி.

நேர்முகத் தேர்வு
காலம்: 10.01.2011
நேரம்: மு.ப 9.00 மணி
இடம்: யூனியன் அஷ்யூரன்ஸ்
இல.139, ஸ்ரான்லி வீதி.யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு:
0773689309
0772247474



நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ்க் கட்சிகளை இணைக்க முயற்சி

## சிவாஜிலிங்கம் தெரிவிப்பு



எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் ஒன்றுபட்ட தமிழ்க் கட்சிகளின் கூட்டணி ஒன்றை உருவாக்கும் முயற்சியில் தமிழ் அரசியல் கட்சிகள் ஈடுபட்டு வருகின்றன.

தமிழர் தாயகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்க் கட்சிகளுக்கு இடையே இது குறித்து தொடர்ச்சியாக பேச்சுவார்த்தை இடம்பெற்று வருவதாக தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பின் செயலாளர் எம்.கே.சிவாஜிலிங்கம் உறுதிப்படுத்தியுள்ளார்.

புளொட் அமைப்பின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தனுக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜாவுக்கும் இடையிலான பேச்சுவார்த்தை ஒன்று நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது.

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஒன்றிணைந்து போட்டியிட்டு தமிழ்ப் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பது தொடர்பில் இச்சந்திப்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது. அத்துடன் தமிழ்க் கட்சிகளின் சார்பில் நியமிக்கப்பட்டுள்ள உப குழுவுக்கான கூட்டம் விரைவில் நடத்தப்பட வேண்டியதன் அவசியம் குறித்தும் பேச்சு வார்த்தை நடைபெற்றுள்ளது.

அதேவேளை தமிழர் விடுதலைக் கூட்டணி புளொட், சிறிரெலோ, தமிழ் தேசிய விடுதலைக் கூட்டமைப்பு ஆகியவற்றைச் சேர்ந்த பிரதிநிதிகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஒன்றிணைந்து போட்டியிடுவது குறித்து நேற்றுமுன்தினம் இரவு பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில் எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஒன்றிணைந்து போட்டியிடுவது குறித்து அனைத்து தமிழ்க் கட்சிகளுடனான பேச்சுவார்த்தையின் பின்னர் இறுதி முடிபு இன்னும் ஓரிருதினங்களில் எடுக்கப்படும் என சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

அதேவேளை கலைக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலுக்காக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் எதிர்வரும் 20ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரை தமது வேட்பு மனுக்களை தாக்கல் செய்ய முடியும் என தேர்தல்கள் திணைக்களத்தின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (ந-5)

# சரத் பொன்சேகாவுக்கு சுகவீனம் சிங்கப்பூர் வைத்தியர்கள் தேவை

(கொழும்பு)

சிறைத் தண்டனை அனுபவித்து வரும் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா மீண்டும் நோய் வாய்ப்பட்டுள்ளார்.

உள்ளூர் வைத்தியர்களால் அவருக்கு வழங்கப்படும் சிகிச்சைகள் எந்தப் பலனையும் அளிக்கவில்லை என்றும் அவர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அவரது தற்போதைய உடல்நிலையைக் கருத்தில் கொள்ளும்போது அவர் முழுமையான வைத்தியப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டியவராக உள்ளார் என ஜனநாயக தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் அலஸ் வெலிக்கடைச் சிறைச்சாலை நிர்வாகத்திடம் தெரிவித்துள்ளார்.

சரத் பொன்சேகா முழுமையான உடல் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டிய கட்டாய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார் என்றும் இதன் காரணமாக சிங்கப்பூரைச் சேர்ந்த விஷேட வைத்தியர் குழுவினரை இலங்கைக்கு வரவழைக்க வேண்டும் என்றும் அவர் சிறைச்சாலை நிர்வாகத்தைக் கேட்டுள்ளார். (ந-5)

# யாழ்.நகர வர்த்தகர்கள் வெளியேறும் நிலை

## யாழ்.வணிகர் கழகத் தலைவர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகர வர்த்தகர்களுக்கு ஏற்படும் இடர்பாடுகள் காரணமாக தொழிலை விட்டு வெளியேறும் நிலை ஏற்பட்டுள்ளதாக யாழ்.வணிகர் கழகத் தலைவர் ஆர்.ஜெயசேகரம் தெரிவித்துள்ளார்.

யாழ்.பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட யாழ்ப்பாண நகர அபிவிருத்தியும் ஊடகங்களின் வகிபங்கும் என்ற கருத்தரங்கு நேற்று ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

போர்க்காலச் சூழலில் தரை வழியில் போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டு கப்பல் மூலம் மக்களுக்குத் தேவையான அத்தியாவசிய உணவுப் பொருட்கள் கொண்டுவரப்பட்டு விற்பனை செய்த போது வர்த்தக சங்கத்தை பலர் விமர்சித்தமை குறிப்பிடத்தக்கது.

யாழ்.மாவட்ட வர்த்தகர்கள் கொள்ளைக்காரர்கள் போன்று தமது வர்த்தக நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர் எனப் பலரும் தெரிவித்துள்ளதை இந்த இடத்தில் தெரிவிக்க வேண்டியுள்ளது.

தரைவழிப்பாதையூடாக கொண்டு வரப்படும் பொருட்களின் விலையிலும் கப்பல் மூலம் கொண்டு வரப்படும் பொருட்களின் விலையிலும் மாற்றம் ஏற்படுவது வழமையானதே.

கப்பல் மூலம் கொண்டு வரப்பட்ட போது ஏற்றுமதிக்கென நான்கரை இலட்சம் ரூபா தேவைப்பட்டது. இத்தகைய காரணங்களினால் தான் அந்த சூழ்நிலையில் பொருட்கள் கூடிய விலையில் விற்கப்பட்டன.

எனினும் யுத்தம் நிறைவடைந்து தரைவழிப்பாதை திறந்த பிற்பாடு கொழும்பு விலையிலும் குறைவாக விலையில் தற்போது யாழ்ப்பாணத்தில் பொருட்கள் விற்கப்படுகின்றன.

இதற்கு உதாரணமாக பால்மா பெட்டி ஒன்று அதன் கொம்பனி விலையை விட குறைவாக விற்கப்படுகின்றது.

வர்த்தகர்கள் இவ்வாறு பலரது தவறான பார்வைக்குட்படுத்தப்படுகின்றனர். அண்மையில் கூட நகைக்கடைகளில் ஏற்பட்ட அசம்பாவிதங்கள் தொடர்பாக பத்திரிகைகள் வெளிப்படுத்தியிருந்தன.

வர்த்தகர்களுக்கு எதிராக பொலிஸார் அண்மையில் கெடுபிடியாக நடந்து கொண்டதையும் இங்கு குறிப்பிடத்தக்கது. வர்த்தகர்கள் எதிரிகள் போன்று ஏனையோரால் பார்க்கப்படுகின்றனர். இவ்வாறான நடவடிக்கைகள் காரணமான வர்த்தகர்கள் தொழிலைவிட்டு வெளியேறும் நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ந-6)

## விக்கிலீக்ஸ் ஆவணங்களை ஒப்படைக்க டுவிட்டருக்கு உத்தரவு

விக்கிலீக்ஸ் தொடர்பான ஆவணங்களை அமெரிக்க நீதித்துறை திணைக்களத்திடம் ஒப்படைக்குமாறு சமூக வலைத்தளமான டுவிட்டருக்கு அமெரிக்க நீதிமன்றமொன்று உத்தரவிட்டுள்ளது.

இந்த உத்தரவின்படி விக்கிலீக்ஸ் ஸ்தாபகர் ஜூலியன் அசேஞ் மற்றும் விக்கிலீக்ஸுக்கு இரகசிய ஆவணங்களை வழங்கியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள அமெரிக்க இராணுவ உத்தியோகத்தர் பிராட்லி மன்னிங் உட்பட பலரின் விபரங்களை அமெரிக்க நீதித்துறை திணைக்களத்துக்கு டுவிட்டர் இணையத்தளம் ஒப்படைக்க வேண்டும். சந்தாதாரர் பெயர்கள், பாவனையாளர் பெயர்கள், தபால் முகவரிகள், வதிவட முகவரிகள் என்பனவும் ஒப்படைக்கப்பட வேண்டிய விபரங்களில் அடங்கும் என நீதிமன்ற ஆவணங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


## யாழ்.பிராந்திய கூட்டிணைக்கப்பெற்ற பஸ் கம்பனிகளின் இணையம்



இற்றை நாள்வரை 10/2, கச்சேரி, நல்லூர் வீதியில் இயங்கி வந்த எமது காரியாலயம் நாளை 10.01.2011 திங்கட்கிழமை தொடக்கம் இல.17/3, கச்சேரி, நல்லூர் வீதி, (புகையிரதக்கடவைக்கு அண்மையில்) எனும் முகவரியில் இயங்கவுள்ளதென்பதனை தெரிவித்துக் கொள்கிறேன். - தலைவர்

(சி-2117)

## செல்லா சினிமா



பசங்க

தேசிய விருது பெற்ற படம்

காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30

## உடன் தேவை

ஓப் செற் மிசின்
(Offset)
(டேவிற்சன்)
வேலை செய்யக் கூடிய ஒருவர் உடன் தேவை
தொடர்புக்கு: (சி-2042)
0773979388

## தனி/குழு வகுப்புக்கள்

## இரசாயனவியல்

A/L-2013 பிரிவுக்குரிய வகுப்புக்கள் நீங்கள் விரும்பிய இடங்களில் ஆரம்பிக்கப்படும்.
(3391)
தொடர்புக்கு: 0776139307

# Jaffna Technical Institute

Regd. No: 15251

ACCA

## English Courses

- Spoken English & Grammer
- Preparatory Course for G.C.E.(O/L)
- Preparatory Course for English Medium Students
- Preparatory Course for Higher Studies
- Preparatory Course for General English G.C.E.(A/L)
- Preparation for Cambridge ESOL Exams (Starters, Movers, Flyers)
- IELTS
- TOEFL



## Computer Courses

- Diploma in Ms-Office
- Diploma in DTP
- Diploma in Computerized Accounting
- Diploma in Internet Technology
- Diploma in Computer Programming

## PROFESSIONAL COURSES பிரிவு II

நிதி, கணக்கீடு முகாமைத்துவ வலையமைப்புடன் நாமும் இணைவோம்

ACCA

To your future in Finance & Accounting

வங்கித்துறை உத்தியோகத்தர்களுக்கான GROUP CLASSES

CBF, DBF

(IBSL இன் அங்கீகாரம் பெற்ற கற்கைநெறி)

- உத்தியோகத்தர்களின் வசதிக்கேற்ப நேர அட்டவணை
- அனைத்து பாடங்களுக்குரிய விரிவுரைகளும் ஒழுங்கு செய்து தரப்படும்.

## Industrial Courses with Training

- Radio & TV Repairing
- Refrigeration & Air Conditioning
- Electronic Classes
- Mobile Phone Repairing

(C-2051)

புதிய பிரிவுகளிற்கான பதிவுகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன

*Interested? Talk to Us! Our friendly Staff in Jaffna will be happy to answer your questions. Call Shiyamala or Thushanthiny on 0215670345, E-mail: jtiedu@gmail.com or Visit our Office at No. 46, Clock Tower Road, Jaffna.*

Branches

| Jaffna Technical Institute | Jaffna Technical Institute | Jaffna Technical Institute |
| --- | --- | --- |
| N0.92/1, Sir Pon.Rama-nathan Rd, Thirunelvely, Jaffna. 0777111205 | Chankaththanai, Chavakachcheri. 0773358814 | Nugavil, Karaveddy South, karaveddy, 0776258034 |

Jaffna Technical Institute

No.46, மணிக்கூட்டு வீதி, (Beacon Tution முன்பாக) யாழ்ப்பாணம்.

E-mail: jtiedu@gmail.com, Website: www.accaglobal.com

# யுத்தத்தால் வாழ்வாதாரத்தை இழந்து அல்லலுறும் மீனவக் குடும்பங்கள்

(பருத்தித்துறை)

கரவெட்டிப் ப்குதியில் வீச்சு வலைமூலம் கடற்றொழில் செய்யும் 300 குடும்பங்கள் பல மாதங்களாக தமது வாழ்வாதாரத்தை இழந்து ஒரு நேர உணவுக்குக் கூட வசதியின்றி பெரும் கஷ்ட நிலையை எதிர்நோக்கியுள்ளனர்.

கரவெட்டி வடக்கு , கரவெட்டி மத்தி, கரவெட்டி மேற்கு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த குடும்பங்களே தொழில் செய்ய முடியாமல் கஷ்ட நிலையில் இருப்பதாக தெரிவித்துள்ளனர்.

இவர்கள் வல்லை, மருதங்கேணி, சுண்டிக்குளம், செம்பியன்பற்று ஆகிய கடலில் வீச்சு வலைமூலம் தொழில் செய்து வந்தவர்கள்.

நாட்டில் ஏற்பட்ட யுத்தகால நிலையை அடுத்து இவர்கள் தமது தொழிலை இழந்து தொழில் செய்யும் உபகரணங்களையும் இழந்து இன்று குடும்பத்துடன் ஜீவனோபாயத்தை செலுத்த முடியாமல் அல்லலுறுவதாக தெரிவிக்கப்படுகிறது.

எனவே உரியவர்கள் தங்கள் மீது கருணை கூர்ந்து தங்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்த தகுந்த நடவடிக்கைகளை விரைவாக எடுக்க உடன் முன்வர வேண்டும் என அப்பகுதி மீனவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ஸ்ரீ-3-10)

## யுனிசெப் நிறுவனத்தினால்

# ஆறு பாடசாலைகளுக்கு நீர்த்தாங்கிகள் அமைப்பு

(பருத்தித்துறை)

வடமராட்சி கிழக்கில் யுத்தத்தினால் சேதமடைந்த 6 பாடசாலைகளில் மாணவர்களின் நலனைக் கருத்திற்கொண்டு குடிநீர்த் தாங்கிகளை மீளப்புனரமைக்க யுனிசெப் நிறுவனம் முன்வந்துள்ளது.

அந்த வகையில் மருதங்கேணி இ.த.க. பாடசாலை, செம்பியன்பற்று அ.த.க. பாடசாலை, மாமுனை அ.த.க.பாடசாலை, தாழையடி றோ.க.த.க. பாடசாலை, உடுத்துறை மகா வித்தியாலயம், ஆழியவளை சி.சி.த.க. பாடசாலை ஆகிய பாடசாலைகளுக்கு நீர்த்தாங்கிகள் விரைவில் அமைக்கப்படவுள்ளன. (ஸ்ரீ-3-10)

# கிளி. மாவட்டத்தில் 5 தொழில் முயற்சி கூட்டுறவுச் சங்கங்கள் திறந்துவைப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் 5 தொழில் முயற்சி கூட்டுறவுச்சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில்• உள்ள கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பச்சிலைப்பள்ளி ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் இச் சங்கத்தின் கிளைகள் அமைக்கப்பட்டுள்ளன.

800 பயனாளிகளுக்கு சுயதொழில் ஊக்குவிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இதேவேளை பிரதேச செயலகங்களில் இயங்கும் தொழிற்துறை நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்கள் ஊடாக சிறுதொழில் முயற்சியாளர்கள் தமது பதிவினை மேற்கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது . (ஸ்ரீ-3-30)

# வாரம் ஒரு தகவல்

## அர்த்தமுள்ள அசைவுகள்

"என்ன சேர், உங்க பையனுக்கு முன்னால் நின்று அபிநயம் பண்ணிக் கொண்டுடிருக்கிறீங்க?"

"இது அபிநயம் இல்லை சேர், சைகை மொழி."

"ஏன், பையனுக்குக் காது கேட்காதா?"

கேட்கும் சேர், இருந்தாலும் சில விடயங்களை அவனுடைய அம்மாவுக்குத் தெரியாமல் இருப்பதற்காக இப்படி நாங்கள் பேசிக் கொள்வதுண்டு."

"அது சரி" 'சைகை'யை 'மொழி' என்று சொல்வது சரியா?"

"சைகைகள் மூலமாகப் பேசுவதும் ஒரு மொழிதான் என்பதை மொழியியல் வல்லுநர்கள் இப்பொழுது ஒப்புக்கொள்கிறார்கள். அர்த்த முள்ள தனித்தனி ஒலிகளை இணைத்து அர்த்தமுள்ள சொற்களை ஒரு மொழியில் உருவாக்குவது மாதிரியே அர்த்தமுள்ள தனித்தனி சைகைகளை இணைத்து அர்த்தமுள்ள சொற்களை சைகை மொழியில் உருவாக்குகிறோம். சைகை மொழியென்பது ஆற்றலும் மென்மையும் நுட்பமும் கொண்ட ஒரு மொழிதான்."

"அப்படியா?"

"ஆமாம், சைகை மொழியில் கவிதை பாடுவது கூட சாத்தியம் தானாம். சைகளை மாற்றிமாற்றிக் காட்டுவது மூலமாக சிலேடை மொழிகளும் பரிமாறிக்கொள்ளலாமாம். கால்லெடெட் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கிளேட்டன் லல்லி என்பவர் இதைப்பற்றி பல ஆராய்ச்சி நடத்தியிருக்கிறார்."

"அது சரி, இப்பொழுது உங்களுடைய பையனிடம் சைகை மொழியில் என்ன சொல்லிக்கொண்டிருந்தீர்கள்?"

"அம்மாவுக்குத் தெரியாமல் சினிமாவுக்குப் போயிட்டு வரலாம் வாறியா என்று கேட்டேன்."

"அதற்கு அவன் என்ன சொன்னான்?"

"உங்களுக்குத் தெரியாமல் நானும் அம்மாவும் நேற்றே அந்தப் படத்தைப் பார்த்து விட்டோம் என்கிறான்."

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# விளையாட்டுத்துறை அலுவலர்கள் நியமனம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் விளையாட்டுத் துறை அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வலைப்பந்து, கரப்பந்து , மெய்வல்லுநர் பிரிவு போன்ற விளையாட்டுகளிற்கு புதிதாக மூன்று விளையாட்டுத்துறை அலுவலர்கள் நியமிக் கப்பட்டுள்ளனர்.

இதில் கரப்பந்திற்கு எஸ். சதீஸ்குமார்; வலைப்பந்திற்கு எஸ்.அருள்நேசன், மெய்வல்லுநர் பிரிவுக்கு என்.முகுந்தன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட செயலகம் அறிவித்துள்ளது. (ஸ்ரீ-3-30)

# கோப்பாய் மத்தியில் பாதீனிய செடிகளின் பரம்பல் அதிகரிப்பு

கோப்பாய் மத்தியில் பாதீனியச் செடிகள் அதிகளவில் காணப்படுவதாகவும் இதனை உரியவர்கள் உடனடியாக அழிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோப்பாய் மத்தி விவசாய சம்மேளனம் தெரிவித்துள்ளது.

இச்செடிகள் ஒரு தோட்டச் செய்கையாளர்களுக்கு ஆபத்தானது என்றும் இதனைக் கண்டும் காணாமல் அழிக்க முற்படாமல் இருப்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இதனை அழிப்பதற்கு கால அவகாசம் வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-3-10)

# திருவாசக முற்றோதல்

வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் வீதியில் அமைந்துள்ள பரந்தாமன் ஆச்சிரமத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிதொடக்கம் 3மணிவரையும் 'திருவாசக முற்றோதல்' நடைபெறும். (ஸ்ரீ-2-9)

✠✠✠

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண கந்தர்மடம் குமாரசுவாமி வீதியில் அமைந்துள்ள வேதாந்த மடத்தில் இன்று காலை 7 மணிதொடக்கம் 'திருவாச முற்றோதல் ' ஸ்ரீலத் வேதவித்தியாசாகர சுவாமிகளின் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் அடியவர்கள் அனைவரையும் பங்குபற்றுமாறு கேட்கப்படுகிறார்கள். (ஸ்ரீ-2-9)

# இராசி பலன்

09.01.2011
(மார்கழி 25, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.25 மணிக்கு
பஞ்சமி முன்னிரவு 10.18 மணிவரை
சதயம் பிற்பகல் 12.22 மணிவரை
இராகுகாலம் 5.02-6.32 மணிவரை
சுபநேரம் 9.32-11.02 மணி வரை

**மேடம்** வருமானம் அதிகரித்து வளம் காணும் நாள், உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், பொது வாழ்வில் புகழ்கூடும், உறவினர் வருகையுண்டு.

**இடபம்** செல்வாக்கு அதிகரிக்கும் நாள், அதிகாரத்துடன் செயற்படுவீர்கள், சுபசெய்திகள் வந்து சேரும் நாள், புதிய பொருட் சேர்க்கைக்கு அஸ்திவாரமிடுவீர்கள்.

**மிதுனம்** மங்கையரால் ஏற்பட்ட மனஸ்தாபம் மாறும், விட்டுப்போன தொடர்புகள் மீண்டும் வந்துசேரும், பிரயாண நன்மையுண்டு.

**கடகம்** பிறருக்காக பொறுப்புச் சொல்வதை தவிர்ப்பது நல்லது, உடல் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை, தேவையற்ற மனஸ்தாபங்கள் ஏற்படலாம்.

**சிங்கம்** களஸ்திர சுகமுண்டு, உறவினர் வருகையால் உள்ளம் மகிழும் நாள், எடுத்த காரியம் கைகூடும், விருந்துபசாரத்தில் கலந்துகொள்ளும் வாய்ப்புண்டு.

**கன்னி** செய்தொழிலில் முன்னேற்றம் காணப்படும், பகைவர்கள் மனம் மாறுவர், கடன் சுமைகள் குறைவடையும், தொலைபேசி தகவல் நன்மை பயக்கும்.

**துலாம்** வளர்ச்சி கூடும் நாள், பொருளாதார வளர்ச்சிக்கு பெண் வழி ஆதரவு கிடைக்கும், பிள்ளைகள் வழியில் பெருமை வந்துசேரும்.

**விருச்சிகம்** பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயம் கிடைக்கலாம், உறவினர் வழி ஒத்துழைப்புக் கிடைக்கும், கூட்டாட்சி பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**தனுசு** நண்பர்கள் கடைசி நேரத்தில் கைகொடுத்து உதவுவர், வியாபார விரோதம் விலகும், உடன் பிறப்புக்களால் பாகப்பிரிவினைகள் குறையும்.

**மகரம்** மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், பணவரவு திருப்தியளிக்கும், சயனசுகக் குறைவுண்டு, வாக்கு மேன்மையுண்டு.

**கும்பம்** சிலவேலைகளை முடிக்க பல மணி நேரம் சபவல் இருக்கவேண்டி நேரிடலாம், சான்றோர்களின் ஆதரவு கிட்டும் நாள், வழிபாட்டில் இனிமை காண வேண்டிய நாள்.

**மீனம்** சுபசெலவுகள் அதிகரிக்கும் நாள், திடீர் பயணங்கள் ஏற்படலாம், உடனிருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது.

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 140 | 160 | 150 |
| உருளைக்கிழங்கு | 60 | 55 | 70 | 60 |
| பச்சைமிளகாய் | 200 | 200 | 240 | 200 |
| தக்காளி | 80 | 60 | 100 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 50 | 40 |
| கோவா | 80 | 60 | 100 | 70 |
| கரட் | 80 | 70 | 120 | 90 |
| பூசணி | 40 | 25 | 40 | 40 |
| புடோல் | 90 | 70 | 100 | 90 |
| வாழைக்காய் | 40 | 30 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 230 | 200-250 | 240 | 210 |
| பெரிய வெங்காயம் | 180 | 180 | 150 | 130 |
| பாகற்காய் | 150 | 120 | 160 | 200 |
| வெண்டிக்காய் | 70 | 70 | 100 | 50 |
| கரணைக்கிழங்கு | 50 | - | 60 | 60 |
| பயிற்றங்காய் | 200 | 160 | 200 | 180 |
| லீக்ஸ் | 120 | 180 | 140 | 100 |
| பீற்றூட் | 150 | - | 160 | - |
| கறிமிளகாய் | 250 | - | 300 | 230 |
| முருங்கைக்காய் | - | - | - | - |
| போஞ்சி | 120 | 90 | 160 | 120 |
| கத்தரி தம்புள்ள | 120 | 100 | 150 | 100 |
| கீரை - 1 பிடி | 30 | 20 | 40 | 40 |
| தேசிக்காய் | 80 | 40 | 100 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 35-50 | 50 | 45 |



சொண்ட் நிறுவனத்தினால் யாழ்.குடாநாட்டில் கற்றோர் சமூகத்தில் சிந்தனையை தூண்டவும் அபிவிருத்தியில் அவர்கள் பங்களிப்பை பெறும் பொருட்டும் மாவட்டம் தழுவிய பிரச்சினைகளைக் கருப்பொருளாகக்கொண்டு மாதாந்த ஆய்வரங்கம் இடம்பெற்றது. இதில் சொண்ட் நிறுவன நிறைவேற்றுப் பணிப்பாளர் ச.செந்துராசா தலைமை உரையாற்றுவதையும் பேராசிரியர் வேல்நம்பி ஆய்வுரையாற்றுவதையும் ஆய்வரங்கில் கலந்துகொண்ட ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

# கிழக்கில் அடைமழையால் ஆறு இலட்சம் பேர் பாதிப்பு

## இடர் முகாமைத்துவ அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

கிழக்கில் வெள்ளம் காரணமாக சுமார் 6 இலட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ அமைச்சு அறிவித்துள்ளது.

மட்டு,அம்பாறை ஆகிய மாவட்டங்களே கூடுதலாகப் பாதிக்கப்பட்டுள்ளன. மட்டக்களப்பு மாவட்டத்தில் 95 ஆயிரத்து 376 குடும்பங்களைச் சேர்ந்த 3 இலட்சத்து 58 ஆயிரத்து 366 பேரும் அம்பாறை மாவட்டத்தில் 62 ஆயிரத்து 362 குடும்பங்களைச் சேர்ந்த 2 இலட்சத்து 29 ஆயிரத்து 548 பேரும் பாதிக்கப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ நிலையப் பிரதிப் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி கூறினார்.

வெள்ளம் காரணமாக ஒரு இலட்சத்து 57 ஆயிரத்து 738 குடும்பங்களைச் சேர்ந்த 5 இலட்சத்து 88 ஆயிரத்து 014 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வெள்ளத்தினால் இதுவரை 669 வீடுகள் முற்றாக சேதமடைந்துள்ளதோடு 2 ஆயிரத்து 631 வீடுகள் பாதியளவு சேதமடைந்துள்ளன. பாதிக்கப்பட்ட மக்கள் 18 முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். மட்டக்களப்பில் 3 ஆயிரத்து 558 பேரும் அம்பாறையில் ஆயிரத்து 127 பேரும் முகாம்களில் தங்கியுள்ளனர்.

இதேவேளை மழையுடன் கூடிய காலநிலை இன்னும் சில தினங்கள் தொடரும் என காலநிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது. நேற்று முன்தினம் காலையுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் பதுளையில் 55 மி.மீற்றர் மழை பெய்துள்ளது.

இதேவேளை தொடர்மழை காரணமாக 59 பிரதான குளங்களில் 36 குளங்கள் பெருக்கெடுத்துள்ளதாக நீர்வள முகாமைத்துவப் பிரதிப் பணிப்பாளர் ஜானகி மீகஸ் தென்ன கூறினார்.

அனுராதபுரத்தில் 7 குளங்கள் பெருக்கெடுத்துள்ளதோடு பதவிய மற்றும் ராஜாங்கனை குளங்களின் தலா இரு வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.மட்டக்களப்பில் 4 குளங்கள் பெருக்கெடுத்துள்ளன. உருகாமம் குளத்தின் இரு வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

அம்பாந்தோட்டையில் 8 குளங்களும் குருநாகலில் 5 குளங்களும் திருகோணமலையில் 2 குளங்களும் மன்னாரில் கட்டுக்கரை குளமும் பெருக்கெடுத்துள்ளதாக அவர் கூறினார். வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ அமைச்சு கூறியது.

(ஸ்ரீ-2)

# கூடைப்பந்தாட்ட இறுதிப்போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கத்தினால் கூடைப்பந்தாட்ட இறுதிப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 4 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா,சிறப்பு விருந்தினராக யாழ். ரில்கோ விடுதி பொது முகாமையாளர் ரி.ராஜ்குமார் ,இ.எஸ்.பி. நிறுவன உரிமையாளர் இ.எஸ்.பி.நாகரத்தினம் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

(ஸ்ரீ-2-9)

# வருடாந்த பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணிக்கு இலக்கம் 56,முதலாம் குறுக்குத்தெரு,யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள போட் விருந்தினர் விடுதியில் நடைபெறும்.

எனவே இக்கூட்டத்திற்கு பதிவு மேற்கொண்ட அனைத்துக் கழகங்களையும் கலந்து கொள்ளுமாறு இச்சங்கத்தின் யாழ். மாவட்ட செயலாளர் அறிவித்துள்ளார்.

(ஸ்ரீ-2)

# திரிபோசா தொழிற்சாலை சுகாதார அமைச்சின் கீழ்

ஜாஎல கப்பவெத்த பகுதியில் உள்ள திரிபோசா தொழிற்சாலை சுகாதார அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. இதற்கு முன்னர் இந்தத் திரிபோசா தொழிற்சாலை இலங்கை புகையிலை நிறுவனத்தின் கீழ் இயங்கி வந்ததாக தெரிவிக்கப்படுகிறது. சுகாதார அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ள இந்தத் தொழிற்சாலையின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன திரிபோசா உற்பத்தியின் அளவை உயர்த்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. நாட்டில் உள்ள கர்ப்பிணிப்பெண்கள் மற்றும் குழந்தைகள் உட்பட்ட நான்கரை இலட்சம் பேருக்காக மாதாந்தம் 15ஆயிரம் திரிபோசா பைக்கற்றுக்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

இந்த உற்பத்தி நடவடிக்கைக்காக பத்தாயிரம் மெற்றிக்தொன் சோளம் ,8ஆயிரம் மெற்றிக்தொன் சோயா அவரையும் பயன்படுத் தப்படுவதுடன் திரிபோசா உற்பத்திக்காக அரசாங்கம் வருடாந்தம் 1250 மில்லியன் ரூபாவை செலவிடுவதாக அமைச்சு குறிப்பிடுகிறது.

(ஸ்ரீ-4-9)

# தேசிய சேமிப்பு வங்கியின் பாடசாலைக் கிளை திறப்பு

(கிளிநொச்சி)

தேசிய சேமிப்பு வங்கியின் பாடசாலை கிளை ஒன்று நேற்று முன்தினம் காலை 10.15 மணிக்கு கிளிநொச்சி இந்துக்கல்லூரியில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கல்லூரி அதிபர் ச. பாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் பாடசாலை கிளையினை தேசிய சேமிப்பு வங்கியின் வட பிராந்திய முகாமையாளர் திறந்து வைத்தார். இதன் போது பாடசாலை மாணவர்களினால் புதிய சேமிப்பு கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் பாடசாலை சமூகத்தினர், தேசிய சேமிப்பு வங்கியின் ஊழியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(ஸ்ரீ-3-30)

# ஊடகவியலாளர் மீதான தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்து ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

அம்பாறை மாவட்டத்தில் வெள்ளம் தொடர்பான செய்திகளைச் சேகரிக்கச் சென்ற பிராந்திய ஊடகவியலாளர் ரி.எம். ஏ.காதர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கல்முனை மாநகரசபை உறுப்பினர் அமீர் குறித்த ஊடகவியளலாளர் மீது இத் தாக்குதல் மேற்கொண்டுள்ளார்.

இதனையடுத்து இம் மாவட்ட ஊடகவியலாளர் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் நேற்றைய தினம் கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இவ் ஆர்ப்பாட்டத்திற்கு பெரும் எண்ணிக்கையிலான தமிழ், சிங்கள, முஸ்லிம் ஊடகவியலாளர்கள் கலந்து கொண்டுள்ளதுடன் எதிர்ப்பு கோஷங்களையும் எழுப்பியுள்ளனர்.

ஊடகவியலாளர்களுக்கு எதிரான வன்முறையை நிறுத்த முஸ்லிம் காங்கிரசே கல்முனை மாநகர சபை உறுப்பினர் அமீர் மீது நடவடிக்கை எடு, மாநகர சபை உறுப்பினர் அமீரின் காடைத் தனத்தை கண்டிக்கிறோம் போன்ற கோஷங்களை ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட ஊடகவியலாளர்கள் எழுப்பி தமது கண்டனத்தை வெளிப்படுத்தினர்.



இவ் ஆர்ப்பாட்டமானது கல்முனை மாநகர சபைக்கு முன்பாக ஆரம்பித்து இறுதியாக கல்முனை பொலிஸ் நிலையம் வரை நீடித்துள்ளதுடன் அங்கு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டுள்ளது.

(ஸ்ரீ-2)

# நாடளாவிய ரீதியில் ஆயிரம் சேதனப் பசளை உற்பத்தி நிலையங்களை அமைக்கத் திட்டம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு உட்பட நாடளாவிய ரீதியில் ஆயிரம் சேதன பசளை உற்பத்தி நிலையங்களை அமைக்க கமநல சேவைகள் அமைச்சு திட்டமிட்டுள்ளதாக கமநல சேவை ஆணையாளர் நாயகம் ரவீந்திர ஹேவாவிதாரண தெரிவித்தார்.

விவசாயிகளின் இரசாயன உரப்பாவனையை குறைத்து சேதனைப்பசளைப் பாவனையை அதிகரிக்கும் நோக்கில் உள்ளூராட்சி சபைகளின் ஒத்துழைப்புடன் இச் சேதனைப் பசளை நிலையங்கள் அமைக்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இரசாயன உரவகை இறக்குமதிக்கென அரசாங்கங்கள் வருடாந்தம் 30 பில்லியன் ரூபாய்களை செலவு செய்கிறது.

இதனை இவ்வாண்டில் 5 பில்லியன் ரூபாயினாலும் எதிர்வரும் 2012ஆம் ஆண்டில் 10 பில்லியன் ரூபாவினாலும் குறைக்க திட்டமிட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ஸ்ரீ-2)



336 தமிழ் பேசும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் நேற்று முன்தினம் களுத்துறைப் பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சியினை முடித்து வெளியேறினர். இந்நிகழ்வில் கலந்துகொண்ட பொலிஸ்மா அதிபர் மகிந்த பாலசூரிய அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொள்வதையும் பயிற்சியை முடித்து வெளியேறிய பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரின் உறவினர்கள் உரையாடுவதையும் படங்களில் காணலாம்.

## இராசபாதை வீதி பழையசந்தியில் ஹயஸ்வான் -மோட்டார்சைக்கிள் விபத்து

## தம்பதியர் மயிரிழையில் தப்பினர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண இராசபாதை வீதி பழைய சந்தியில் ஹயஸ் வானும் மோட்டார் சைக்கிலும் விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த தம்பதியர் மயிரிழையில் உயிர் தப்பினர்.

இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த வல்வெட்டித்துறையைச் சேர்ந்த வே.விமலநாதன் (வயது 58), வி.அனுசியா (வயது 53) ஆகியோர் காயங்களுக்குள்ளாகினர். இவர்கள் அருகில் இருந்த தனியார் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.



இச்சம்பவம் நேற்று நண்பகல் 12 மணியளவில் குறித்த இடத்தில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

ஆடியபாதம் வீதியில் இருந்து திருநெல்வேலி நோக்கி வேகமாகச் சென்ற ஹயஸ்வானும் இராசவீதியில் இருந்து நல்லூர் நோக்கி வந்த மோட்டார் சைக்கிளும் மோதியுள்ளன.

சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். ஹயஸ் உரிமையாளரும் மோட்டார் சைக்கிள் உரிமையாளரும் தாம் சமாதானமாகச் செல்வதற்கு தீர்மானித்திருந்தனர்.

இவ்விபத்தில் காயமுற்றவர்கள் தலைக் கவசம் அணிந்திருந்தமையே இவ்விபத்தில் உயிர் தப்பியதற்கு காரணம் என காயமுற்ற தம்பதியினர் தெரிவிக்கின்றனர்.

(ஸ்ரீ-2)

## கிளிநொச்சி கோணாவில் பகுதியிலுள்ள வீடொன்றில் பணம்,நகைகள் கொள்ளை

## 3 திருடர்கள் மடக்கிப்பிடிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கோணாவில் பகுதியிலுள்ள வீடொன்றில் 20 ஆயிரம் ரூபா பணம் மற்றும் 10 பவுணுக்கு மேற்பட்ட நகைகளும் கொள்ளையிடப்பட்டுள்ளன.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு 2 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது,

தம்மை புலனாய்வு பரிவினர் எனக்கூறி கோணாவில் றாயன் குடியிருப்பு பகுதியிலுள்ள வீடொன்றுக்குள் நுழைந்த ஐவர் அடங்கிய குழுவினர் வீட்டு உரிமையாளரையும் அவரது சகோதரரையும் கைகளை கட்டி முழங்காலில் இருத்திவிட்டு உரிமையாளரின் மனைவி மற்றும் பிள்ளைகளை வீட்டு முற்றத்தில் இருத்தி விட்டு வீட்டை சல்லடை போட்டு தேடி மேற்படி பொருட்களை திருடியுள்ளனர்.

இதேவேளை வீட்டிலுள்ளோர் கூக்குரலிட்ட வேளை அங்கு விரைந்து வந்த அயலவர்களினால் மேற்படி 5 திருடர்களில் 3 பேர் மடக்கிப் பிடிக்கப்பட்டதோடு மற்றைய இரு திருடர்களும் பணம், நகை என்பவற்றுடன் தப்பியோடியுள்ளனர்.

மடக்கிப் பிடிக்கப்பட்ட மூன்று திருடர்களும் இராணுவத்தின் உதவியுடன் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி சம்பவத்தில் 5 ஆம் வாய்க்கால் கிளிநொச்சியைச் சோந்த ரவி ராஜேந்திரன் (வயது33),முதலாம் கட்டை 10ஆம் வீதி பரந்தனைச் சேர்ந்த கந்தையா கதிரேசு(வயது31), மருதநகர் கிளிநொச்சியைச் சேர்ந்த செல்வராசா தர்ஷன்( வயது18) ஆகிய மூவருமே கையும் மெய்யுமாக பிடிக்கப்பட்டதுடன் தினேஷ் மற்றும் நிஷாந்தன் ஆகிய இருவருமே தப்பி ஓடியுள்ளனர்.

இதேவேளை நேற்றுமுன்தினம் புதுமுறிப்பு பகுதியிலும் சோலைநகர் பகுதியிலும் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-3-30)

## மன்னார் மாவட்டத்தில் 5 சபைகளுக்கு 46 பேர் தெரிவு செய்யப்படவுள்ளனர்

(கொழும்பு)

மன்னார் மாவட்டத்தில் ஒரு நகர சபை மற்றும் நான்கு பிரதேச சபைகளுக்கு எதிர் வரும் மார்ச் மாதம் தேர்தல் நடைபெறவுள்ளது.

46 உறுப்பினர்களை தெரிவு செய்ய 88 ஆயிரத்து 916 பேர் 5 சபைகளுக்கும் வாக்களிக்கவுள்ளனர்.

மன்னார் நகர சபை தேர்தலுக்காக ஒரு கட்சியில் 9 பேர் போட்டியிட்டு இதில் 7 பேர் தெரிவு செய்யப்படுவர். இதில் 4 இளைஞர்களும் ஏனையோர் 5 பெரும் போட்டியிடுவர். நகர சபைக்கு 5 ஆயிரத்து 979 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

மன்னார் பிரதேச சபை தேர்தலில் இளைஞர் 5 பெரும் ஏனைய 7 பேருமாக 12 பேர் ஒரு கட்சியில் போட்டியிடலாம். இதில் 9 பேர் தெரிவு செய்யப்படுவர். இந்த பிரதேச சபையில் 24 ஆயிரத்து 658 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

நானாட்டன் பிரதேசசபைக்கு ஒரு கட்சியில் 12 பேர் வீதம் போட்டியிடவுள்ளனர். இதில் 5 பேர் இளைஞர்களாகவும் ஏனையோர் 7 பேராகவும் இருப்பர். இப்பிரதேச சபைக்கு 9 பேர் தெரிவு செய்யப்படுவர். இப்பிரதேசத்துக்குள் 16 ஆயிரத்து 421 பேர் வாக்களிக்கவுள்ளனர்.

முசலி பிரதேச சபைக்கான தேர்தலில் வேட்பாளர்கள் போட்டியிடலாம். இதில் 5 இளைஞர்களும் 7 பேர் ஏனையோராகவும் இருக்க வேண்டும்.

இப்பிரதேசத்தில் 13 ஆயிரத்து 151 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். இங்கு 9 பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுவர்.

மாந்தை மேற்கு பிரதேச சபைக்கு ஒரு கட்சியில் தலா 16 பேர் போட்டியிடவுள்ளனர். இதில் 6 பேர் இளைஞர்களாகவும் ஏனையோர் 10 பேரும் அடங்குவர். இதில் 12 பேர் தெரிவு செய்யப்படுவர் . பிரதேசத்தில் 18 ஆயிரத்து 707 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். (ஸ்ரீ-4)

## இலங்கையில் வேலையற்றோரின் வீதம் 4.9 சதவீதமாக குறைவடைந்துள்ளது

### குடிசன மதிப்பீட்டு திணைக்களம் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் வேலையற்றோரின் எண்ணிக்கை 4.9 சதவீதமாக குறைவடைந்துள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள பாரிய அபிவிருத்தியே இதற்குக் காரணம் என குடிசன மதிப்பீட்டு திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

5.7 வீதமாக இருந்த வேலையற்றோரின் வீதம் 4.9 சதவீதமாக குறைவடைந்துள்ளதாகவும் இது எதிர்கால அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் வலுவான நிலையை எடுத்துக்காட்டியுள்ளதாகவும் அத்திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது குறித்து அத்திணைக்களம் வெளியிட்டுள்ள புதிய புள்ளி விபரங்களுக்கு அமைய நாட்டின் மனித வள சக்தி 8 மில்லியன்களாக அதிகரித்துள்ளது. 66.8 சதவீதமானவை ஆண்களைச் சார்ந்தவையாகும். 33.2 சதவீதம் பெண்களாகும். 8 இலட்சம் பேரில் 44.3 சதவீதத்தினர் சேவைகள் பிரிவைச் சேர்ந்த தொழில்களில் ஈடுபட்டுள்ளனர்.

விவசாயத்துறையில் 31.2 வீதத்தினரும் கைத்தொழில் துறையில் 24.4 சதவீதத்தினரும் ஈடுபட்டுள்ளனர்.

2010ஆம் ஆண்டு 2ஆம் காலாண்டுப்பகுதியில் தெளிவான முன்னேற்றம் காட்டப்பட்டுள்ளது என்றும் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது. (ஸ்ரீ-9)

Study in UK
Apply Now! Intakes Feb/Mar 2011
IELTS இன்றி செல்ல இறுதிச் சந்தர்ப்பம்.....
A தரத்திலான மற்றும் Highly Trusted கல்லூரிகளில் இருந்து அனுமதி
அடிப்படை தகமை G.C.E.(O/L)
இலவச ஆலோசனைகள்
Sponsor வசதிகள்
The leading visa consultant in Sri Lanka
Hotline : 0777113777
IBt
INSTITUTE OF BRITISH TECHNOLOGY (PVT) LTD
No:538-3/1, Galle Road, Colombo - 03, Sri Lanka. | Branch: Kalmunai
E-mail: info@ibtedu.lk | academics@ibtedu.lk
Web: www.visa.ibtedu.lk | www.ibtedu.lk
We raise the limits to your Success.....

# இந்தியா, நோர்வே நாடுகளாலும் அரச சார்பற்ற நிறுவனங்களின் சூழ்ச்சிகளாலுமே யுத்தம் நீடித்தது

## அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு

(கொழும்பு)

இந்தியா, நோர்வே போன்ற நாடுகளும் அரசசார்பற்ற நிறுவனங்களும் மேற்கொண்ட சூழ்ச்சிகள் காரணமாக இலங்கையில் யுத்தம் நீண்ட காலமாக நீடித்து வந்ததாக ஜாதிக ஹெல உறுமயவின் கொள்கை வகுப்பாளரும் அமைச்சருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவில் சாட்சியமளிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இலங்கையிலிருந்த இந்திய வம்சாவளி தமிழர்களுக்கு முன்னர் ஆட்சி செய்த அரசாங்கங்கள் குடியுரிமை வழங்கின.


தமிழர் புனர்வாழ்வுக்கழகம் உள்ளிட்ட அரச சார்பற்ற நிறுவனங்கள் இந்த மக்களை வன்னியில் குடியேற்றின. விடுதலைப்புலிகளின் பயங்கரவாத நடவடிக்கைகளில் இவர்கள் பெருமளவில் ஈடுபட்டனர்.

தற்போது இராணுவத்திடம் சரணடைந்துள்ள விடுதலைப்புலிகளின் ஆயிரக்கணக்கான உறுப்பினர்களின் பெரும்பாலானவர்களின் பெற்றோர் நுவரெலியா, பதுளை, பண்டாரவளை பிரதேசங்களில் வசித்து வருகின்றனர். இவர்கள் இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப்படவிருந்தவர்கள்.

வன்னியில் இறுதிக்கட்டப் போரில் உயிரிழந்த அனைவரும் விடுதலைப்புலிகளின் உறுப்பினர்கள், விடுதலைப்புலிகள் அமைப்பில் இணைந்து கொண்டவர்கள். இவர்கள் வெளியில் திருமணம் செய்ய அனுமதிக்கப்படவில்லை. இதனால் புலிகளின் உறுப்பினர்களையே அவர்கள் திருமணம் செய்து கொண்டனர்.

அவர்களின் குடும்பங்களைச் சேர்ந்த அனைவரையும் பயங்கரவாதச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தினர். புலி கள் ஆயுதங்களை ஏந்தி பயங்கரவாத செயற்பாடுகளில் ஈடுப்பட்டதால், அவர்கள் தாமே அழிவைத் தேடிக் கொண்டனர்.

கடந்த 1971 ஆம் ஆண்டு கிளர்ச்சியின் பின்னர், பல்கலைக்கழக வெட்டுப்புள்ளிகள்



அறிமுகப்படுத்தப்பட்டன. இதனால் தமிழில் பயின்ற மாணவர்களுக்கு எந்த அநீதியும் இழைக்கப்படவில்லை. தமிழர்களின் தலைவர்கள் வரலாற்றுக் காலம் முதல் பிரிந்து செல்லவே முயற்சித்தனர் என்பதை வரலாற்றை நோக்கும்போது அறிந்து கொள்ள முடியும் எனவும் சம்பிக்க ரணவக்க குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

## முருகைக்கற்களுடன் மோதுண்டு மீனவப்படகு சேதம்

(பருத்தித்துறை)

வடமராட்சியில் வியாபாரி மூலை கடற்பகுதியில் கடற்றொழிலுக்குச் சென்ற மீனவப் படகு ஒன்று முருகைக் கற்களுடன் மோதுண்டு சேதமடைந்துள்ளது.

இப்படகில் கடலுக்குச் சென்ற மூன்று மீனவர்கள் மயிரிழையில் உயிர் தப்பியுள்ளனர். நேற்று முன்தினம் மாலை படகில் கடலுக்குச் சென்றிருந்த மேற்படி மீனவர்கள் திரும்பி வந்துகொண்டிருந்த போதே இச்சம்பவம் இடம்பெற்றது.

கடலில் காணப்பட்ட கடும்காற்று, கடலலை காரணமாக படகு, கடலில் காணப் பட்ட முருகைக் கற்களுடன் மோதுண்டு சேதமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-3-10)

## அடையாள அட்டை கண்டெடுப்பு

வத்தல் பொல, பாணந்துறை என்னும் முகவரியைச் சேர்ந்த நைனா மொகமது சுணபர் என்பவருடைய 493534491V என்னும் இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு வலம்புரிக் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

எனவே உரியவர்கள் அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-4)

## எயிட்ஸ் நோயை குணப்படுத்த புதிய மருந்து கண்டுபிடிப்பு

(கொழும்பு)

எயிட்ஸ் நோயை குணப்படுத்த புதிய மருத்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அது பெண் குரங்குகள் மூலம் பரிசோதிக்கப்பட்டது.

உலகை உலுக்கி வரும் எய்ட்ஸ் ஒரு உயிர் கொல்லி நோய். இது எச்.ஐ.வி. வைரஸ் கிருமிகளால் ஏற்படுகிறது.

தற்போது உலகம் முழுவதும் 3 கோடியே 30 இலட்சம் பேர் எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நோய்க்கு 2 கோடியே 50 இலட்சம் பேர் பலியாகி உள்ளனர் எனவே இந்த நோயை குணப்படுத்த பல மருந்துகளை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். ஆனால் அந்த நோயை முற்றிலும் குணப்படுத்த முடியவில்லை.

இந்த நிலையில் தற்போது ஒரு புதிய மருந்தை கண்டுபிடித்துள்ளனர். ஏற்கனவே உள்ள எய்ட்ஸ் மருந்துடன் துத்த நாகம் இரசாயன கலவையுடன் ஜெல் உருவாக்கினர்.

பின் அந்த ஜெல் மருந்தை எய்ட்ஸ் நோயை உருவாக்கும் எச்.ஐ.வி. வைரஸ் கிருமி பாதித்த விலங்குகளிடம் பரிசோதித்து பார்த்தனர். இறுதியில் எச்.ஐ.வி. வைரஸ் பாதித்த பெண் குரங்கிடம் பரிசோதித்தனர்.

2 வாரங்கள் தொடர்ந்து இந்த மருந்தை அவற்றின் உடலில் செலுத்தினர். அதைத் தொடர்ந்து எச்.ஐ.வி.வைரஸ் கிருமிகளின் பாதிப்பு பெருமளவில் குறைந்தது. அதே முறையில் மனித உடலிலும் சோதனை நடத்தி பார்க்கப்பட்டது.

எச்.ஐ.வி.வைரஸ் கிருமிகள் பாதித்த பெண்களிடம் பயன்படுத்தப்பட்டது. 2 ஆண்டுகளில் 39 சதவீதம் நோய்குணமானது. இந்த சோதனையை அமெரிக்க விஞ்ஞானிகள் தேசிய புற்றுநோய் நிறுவனத்துடன் இணைந்து நடத்தி வெற்றி பெற்றுள்ளனர்.

இந்த மருந்து மிகவும் பாதுகாப்பானது. விலை குறைவானது. எனவே இந்த மருந்து எய்ட்ஸ் நோயாளிகளுக்கு வரப்பிரசாதமாக கிடைத்துள்ளது என நியூயோர்க் பொது மக்கள் சபை மகிழ்ச்சி தெரிவித்துள்ளது. (ஸ்ரீ-2)

## உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடவடிக்கைகள் தீவிரம்

(கொழும்பு)

உள்ளூராட்சி சபைத் தேர்தல் தினம் நெருக்கி வரும் நிலையில் அதன் அரசியல் துறை செயற்பாடுகள் தீவிரமடைந்து வருகின்றன.

இதனடிப்பண்டயில் தற்போது அனைத்து கட்சிகளும் வேட்பாளர் பட்டியல். தயாரிப்பு பணிகளில் கூடிய கவனம் செலுத்தி வருகின்றன.

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் வேட்பாளர் தெரிவு மற்றும் வேட்பு மனு திட்டமிடல் என்பன தற்போது இடம்பெற்று வருவதாக அதன் பொது செயலாளர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார்.

அதேவேளை உள்ளூராட்சி தேர்தல் வேட்பாளர் நேர்முகப் பரீட்சைகள் தற்போது இடம்பெற்று வருவதாக ஐக்கிய தேசிய கட்சித் தவிசாளர் காமினி ஜயவிக்கிரம பெரேரா குறிப் பிட்டார்.

இது தவிர ஜே.வி.பியும் தமது தேர்தல் ஏற்பாடுகளை துரிதமாக மேற்கொண்டு வருவதாக அதன் பொது செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## இப்படியும் ஒரு திருடன்

(கொழும்பு)

எதையெல்லாம் திருடுவது என்பது குறித்து விவஸ்தையே இல்லாமல் போய்விட்டது.

பத்திரிகையின் சில பக்கங்களை திருடிய நபர் கையும் களவுமாக பிடிபட்ட சம்பவமொன்று கொழும்பில் இடம்பெற்றுள்ளது.

இலவசமாக பத்திரிகை வாசிக்க கிடைக்கும் ஒரு வியாபார ஸ்தலத்தில் தினமும் குறிப்பிட்ட ஒரு பக்கம் காணாமல் போவதை அவதானித்த அந்த நிறுவனத்தின் உரிமையாளர் அதனை கையும் களவுமாக கண்டு பிடிக்க முடிபு செய்தார்.

நிறுவனத்துக்கு வரும் வாடிக்கையாளர்களில் தினமும் காணாமல் போகும் அப்பகுதியினை வாசிப்பது யார் என அவதானித்து வந்தார்.

அன்றைய தினம் சந்தேகத்தில் குறிப்பிட்ட ஒரு நபரின் பையினை சோதனையிட்ட போது தினமும் காணாமல் போகும் அன்றைய தினத்துக்கான பக்கம் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது.

அதனால் வெட்கமடைந்த அந்த நபர் அன்றிலிருந்து குறித்த நிறுவனத்திற்கு பத்திகை வாசிக்க வருவதேயில்லை. (ஸ்ரீ-2)

## தொடர்மழை காரணமாக பூநகரி- பரந்தன் வீதி கடும் சேதம்

### விபத்துச் சம்பவங்கள் அதிகரிப்பு

மழைகாலம் ஆரம்பிப்பதற்கு முன்பாகவே பல இடங்களில் மதகுகள் சேதமடைந்திருந்த பூநகரி - பரந்தன் வீதி தொடர்ந்து பெரும் மழையினால் கடும் சேதத்துக்குள்ளாகியுள்ளது. 10இற்கு மேற்பட்ட இடங்களில் வீதிக்கு மேலாக தொடர்ந்து வெள்ளம் பாய்ந்த நிலையில் வீதி அரிக்கப்பட்டுக் காணப்படுகிறது.

இதனால் முழுவீதியும் குன்றும் குழியுமாக இருப்பதால் வாகன சாரதி தமது வாகனங்களை சீராக செலுத்தமுடியாமல் இருப்பதாக விசனம் தெரிவித்துள்ளனர்.

அத்தோடு கிளிநொச்சி வைத்தியசாலைக்குச் செல்லும் கர்ப்பிணிகளும் நோயாளிகளும் சொல்லொணாத் துன்பத்திற்கு ஆளாகின்றனர்.

கடந்தவாரம் குஞ்சுப் பரந்தனில் சேதமடைந்திருந்த மதகின் ஓரத்தால் 40 இற்கும் மேற்பட்ட பயணிகளுடன் சென்ற பஸ் மதகினுள் வீழ்ந்து பஸ்ஸின் முன்பகுதி சேதமடைந்ததுடன் பயணிகள் பீதியடைந்து பெருஞ் சிரமத்துக்குள்ளாகினர். ஆனால் பயணம் செய்த மக்களுக்கு எதுவித பாதிப்பும் ஏற்படவில்லை எனக் குறித்த பஸ் சாரதி தெரிவித்தார்.

திருத்தப்படவேண்டிய பல மதகுகளில் உரிய பகுதியினரால் சிவப்புக்கொடி நாட்டப்பட்டிருப்பதையும் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

எனவே இம்மதகுகளை புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் இது போன்ற பல அசம்பாவிதங்கள் நிகழலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-3-84)





கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றம், நீதவான் நீதிமன்றம் என்பன புனரமைப்பு செய்யப்பட்டு வருகின்றன. புனரமைப்பு செய்யப்படும் நீதிமன்ற கட்டடத்தினை படத்தில் காணலாம். (படம்:- கிளிநொச்சி செய்தியாளர்)

# மன்மதன் அம்பு

திரை விமர்சனம்






நடிகை த்ரிஷாவும் தொழிலதிபர் மாதவனுக்கும் காதல். மாதவன் சந்தேகப் பேர்வழி. காதலி மற்ற நடிகர்களுடன் தொடர்பு வைத்திருக்கிறாரே என்று சதா சந்தேகம். வெளிநாட்டுக்கு தன் தோழி சங்கீதாவுடன் சுற்றுலா செல்லும் த்ரிஷாவை துப்பறிய தனியார் டிடெக்டிவ் ஏஜென்ட் கமலை அனுப்பி வைக்கிறார். மருத்துவமனையில் உயிருக்கு போராடும் தன் நண்பனை காப்பாற்ற பணம் தேவைப்படுவதால் இந்தப் பணியை ஏற்று வெளிநாட்டுக்குச் செல்கிறார் கமல்.

த்ரிஷவை துப்பறிந்து அவர் நல்லவர் என்று தகவல் சொல்கிறார். ஆனால் பேசியபடி பணத்தை கொடுக்க மாதவன் மறுக்க, த்ரிஷாவுக்கு ஒரு காதலன் இருப்பதாகப் பொய் சொல்கிறார். தொடர்ந்து அவளை துப்பறியச் சொல்லும் மாதவன் பேசிய பணத்தை கொடுக்கிறார். அந்த கற்பனை காதலனாக தன்னையே மாற்றிக் கொள்கிறார். எதிர்பாராமல் அமைகின்ற சந்திப்புகளால் த்ரிஷாவும் கமலும் நண்பர்களாகின்றனர். கமலின் மனைவி சாவுக்கு ஒரு வகையில் த்ரிஷா தான் காரணம் என்று தெரியவர, கமல் மேல் ஏற்படும் பரிதாபமே காதலாக மாறுகிறது. இந்த நிலையில் திடீரென்று சென்னையிலிருந்து புறப்பட்டு வந்து நிற்கிறார் மாதவன். அதன் பின்னர் என்ன நடக்கிறது என்பது மீதி கலகல கலாட்டா.

"அவ்வை சண்முகி", 'தெனாலி', 'பஞ்சதந்திரம்' வரிசையில் கமல்-கே.எஸ்.ரவிக்குமார் கூட்டணியில் வெளிவந்திருக்கும் காமெடி கலாட்டா. ஒரே வித்தியாசம் முந்தைய படங்களில் இல்லாத அளவுக்கு இதில் பிரேமுக்கு பிரேம் பிரமாண்டம். துப்பறியும் ஏஜெண்டாக கமல். அதென்னவோ தெரியவில்லை படத்துக்கு படம் கமலின் அழகு கூடிக்கொண்டே போகிறது. 'ஐ எம் மேஜர் மன்னார் ஃபிரம் இந்தியன் ஆர்மி' என்று சொல்லும் போதே ஒரு கம்பீரம் முகத்தில் வந்து உட்கார்ந்து விடுகிறது. அவரின் துப்பறிதல் குலுங்கி குலுங்கி சிரிக்க வைத்தாலும் தன் மனைவியை நினைத்து கலங்கும் காட்சிகளில் நம்மையும் கலங்க வைத்து விடுகிறார்.

அடுத்தடுத்து பொய் சொல்ல வேண்டிய கட்டாயம் வரும் போதெல்லாம் உள்மனசு குத்துவதைக் கூட முக பாவனையில் காட்டுவது கூட அசாத்திய நடிப்பு. கமல் மனைவியின் மரண விபத்துக்கு காரணமான த்ரிஷா அவரிடம் மன்னிப்புக் கேட்கும் போது, "நாளைக்கே இனி யுத்தம் இல்லை என்கிற நிலைமை வரும் போது, பாகிஸ்தான் என் உறவாகிவிடும். அது தெரிந்தே போரில் பல பேரை கொன்ற என்னை நானே மன்னிக்கும் போது, அறியாமல் செய்த உன்னை மன்னிக்க மாட்டேனா" என்பது கமல் டச்.

நடிகையாகவே நடிப்பதால் எந்த சிரமமுமின்றி டேக் இட் ஈசியாக வருகிறார் த்ரிஷா. கமல் மனைவி சாவுக்கு தானே காரணம் என்று தெரிந்த பின்னர் மனச்சாட்சி உறுத்த, கமல் மீதான அனுதாப பார்வையிலும் த்ரிஷா ஃப்ரெஷ்சாக இருக்கிறார். முற்றிலும் புதிய கரக்டரில் மாதவன். காதலையும் சந்தேகத்தையும் சம அளவில் வைத்துக் கொண்டு மனம் கொத்தி பறவையாக அலைகிறார்.



கணவனை விவாகரத்து செய்து விட்டு ஆண் வர்க்கத்தையே வெறுப்புடன் பார்க்கும் கரட்டருக்கு சங்கீதா கச்சிதம். தேவிஸ்ரீபிரசாத்தின் இசை கமலின் வார்த்தைகளை அழகு படுத்தியிருக்கிறது. மனுஷ்நந்தனின் ஒளிப்பதிவு கமல், த்ரிஷாவுடன் கப்பலில் ஜாலி டூர் சென்று வந்த உணர்வை ஏற்படுத்துகிறது.

ஒரு நடிகையின் காதலில் ஏற்படும் பிரச்சினையில் ஆரம்பிக்கும் பயணம் கமலின் மனைவி சாவுக்கு காரணமே த்ரிஷா தான் என்ற திருப்பத்தில் யூடர்ன் அடிப்பது, நண்பனின் உயிரை காக்க கமலின் போராட்டம் , த்ரிஷாவுக்கு கமல் மீதான காதல், ஒரு கான்சர் நோயாளியின் போராட்டம் என்று வெவ்வேறு முகம் கொண்ட திரைக்கதையை காமெடி என்ற ஒரே கோட்டில் பயணம் செய்ய வைத்திருக்கும் கமலின் திரைக்கதை யுக்தியை அப்படியே படமாக்கி கொடுத்திருக்கிறார் கே. எஸ். ரவிக்குமார்.

கமலின் வெளிநாட்டு பெண்ணின் காதல் கதையை ஒரு பாட்டில் அதுவும் ரிவர்ஸில் சொல்லியிருப்பது புதுக் கவிதை. எந்தக் கட்டத்திலும் கமலுக்கு த்ரிஷா மீது காதல் வராமல் அந்த கரக்டரின் கண்ணியத்தைக் காப்பாற்றியிருப்பது இயக்குநரின் சாமர்த்தியம்.

# ஏசியாநெட் விருதுபெறும் முதல் தமிழ் நடிகர் விஜய்



மலையாளத்தில் ஆண்டு தோறும் ஏசியாநெட் விருதுகள் வழங்கப்படுகிறது. இதில் முதல் முறையாக தமிழ் நடிகர் விஜய் விருது பெறுகிறார்.


மலையாளத்தில் அண்டுதோறும் ஏசியாநெட் பிலிம் விருதுகள் வழங்கப்படுகிறது. இந்தாண்டு 2010 ஆம் ஆண்டுக்கான விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. அதில் மலையாள சூப்பர்ஸ்டார் மம்முட்டிக்கு சிறந்த நடிகர் விருதும் மற்றொரு மெகாஸ்டார் மோகன்லாலுக்கு கோல்டன் ஸ்டார் விருதும் அறிவிக்கப்பட் டுள்ளது. சிறந்த நடிகைக்கான விருது "பொடிகார்ட்" படத்தில் நடித்ததற்காக நடிகை நயன்தாராவிற்கு அறிவிக் கப்பட்டுள்ளது.

இத்துடன் இந்த விருதுப் பட்டியலில் இளைய தளபதி விஜயும் சேர்ந்துள்ளார். சிறந்த தமிழ் நடிகருக் கான விருது விஜய்க்கு அளிக்கப்படவுள்ளது. ஏசியன்நெட் விருது வரலாற்றில் ஒரு தமிழ் நடிகருக்கு விருது வழங்குவது இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது.

சமீப காலமாக மலையாளத்தில் விஜயின் படங்கள் நல்ல வரவேற்பை பெற்றுள்ளன.

இவர் நடித்த படங்கள் அங்கு ஹிட்டும் ஆகியுள்ளது. மேலும் கேரளாவில் விஜய்க்கு ரசிகர்களின் ஆதரவும் பெருகி வருகிறது.

அதை நிரூபிக்கும் வகையில் சமீபத்தில் விஜய்க்கு சிலை வைத்து தமிழ் ரசிகர்களை மிஞ்சும் வகையில் செய்தனர்.




# டி.ஆரின் இளைய மகன் ஹீரோவாகக் குதிக்கிறார்



தன்னுடைய மூத்தமகன் சிம்புவை கரை சேர்த்த டி.ராஜேந்தர், தற்போது இன்னொரு மகனையும் ஹீரோவாக்கும் கோதாவில் இறக்க முயற்சி எடுத்து வருகிறார். டி.ஆரின் புதிய படமான ஒரு தலைக்காதல் அடுத்தமாதம் தொடங்குகிறது.

இதில் டி.ஆர். நாயகன். இந்தப் படத்தையடுத்து தனது 2ஆவது மகன் குறளரசன் நடிக்கும் படத்தை டி.ஆர். இயக்குகிறார். குறளரசன் பல படங்களில் நடித்திருந்தாலும், அதெல்லாம் குழந்தை நட்சத்திரமாக திரையில் தோன்றியவை தான். இனி டி.ஆர். இயக்கத்தில் நடிப்பது ஹீரோவாக.

# எனது சினிமா வாழ்க்கையில் சிறந்த படம் 'ஆடுகளம்'




சன் பிக்சர்ஸ் கலாநிதி மாறன் வழங்கும் தனுஷின் ஆடுகளம் பொங்கலுக்கு வெளியாகிறது. பொல்லாதவன் படத்தை இயக்கிய வெற்றி மாறனின் படைப்பு என்பதால் அனைத்து தரப்பினரும் படத்தை ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர்.

மதுரை பின்னணியில் இந்தப் படத்தை இயக்கியிருக்கிறார் வெற்றி மாறன். தனுஷுடன் கவிஞர் வஜசா ஜெயபாலன், சம்பத் ஆகியோரும் நடித்துள்ளனர். டில்லி மொடல் டாப்ஸி ஹீரோயினாக அறிமுகமாகிறார்.

ஆடுகளத்தைப் பற்றி தனுஷ் குறிப்பிடுகையில், என்னுடைய சினிமா வாழ்க்கையில் சிறந்த படம் வரும் பொங்கலுக்கு வெளியாகிறது. நல்ல நடிப்பை கொடுத்திருக்கிறேன். படம் பார்க்கும் போது நீங்களும் அதை உணர்ந்துகொள்வீர்கள் என்றார்.



குடாநாட்டில் இடம்பெற்றுவரும் குற்றச்செயல்கள் குறித்து விவாதிக்க பொதுமக்கள் பங்களிப்புடன் பொலிஸ் மாநாடு நேற்று முன்தினம் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. இதில் யாழ். வர்த்தக சங்கத்தலைவர் ஆர்.ஜெயசேகரன் மங்கல விளக்கேற்றுவதையும் யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி நேவின் பத்மதேவ, யாழ்.பொலிஸ் நிலைய தலைமையதிகாரி சமன் சிகேரா ஆகியோர் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- எஸ்.கரன்)

# இலங்கை மீனவர்கள் பத்துப்பேர் கைது

(கொழும்பு)

இந்தியக் கடலோரக் காவல்படை ஹெலிகொப்டர் மூலம் கடந்த 31ஆம் திகதி ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தபோது, இந்தியக் கடல் எல்லைக்குள் 2 இலங்கை படகுகள் மீன்பிடித்து கொண்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இந்தத் தகவல் கடலோரக் காவல்படை அதிகாரிகளுக்கு தெரிவிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, சாராங் என்ற கடலோரக் காவல் படை கப்பலில் அதிகாரிகள் சென்று, 2 இலங்கைப் படகுகளையும் சுற்றி வளைத்து, அதில் இருந்த இலங்கை மீனவர்கள் 10 பேரை கைதுசெய்தனர். மேலும், படகில் இருந்த ஆயிரம் கிலோ மீன்களும் பறிமுதல் செய்யப்பட்டன.

அதனைத் தொடர்ந்து, கைது செய்யப்பட்ட மீனவர்களையும், பறிமுதல் செய்யப்பட்ட 2படகுகளையும் சென்னைக்கு கொண்டு வர முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

ஆனால், கடல் சீற்றம் அதிகமாக இருந்ததாலும் மோசனமான வானிலை காரணமாகவும் 3 நாட்களின் பின்னரே சென்னை காசிமேடு மீன்பிடி துறைமுகத்திற்கு கொண்டு வரப்பட்டது.

கைதுசெய்யப்பட்ட மீனவர்கள் காசிமேடு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர். இலங்கை மீனவர்களிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்ட 2 படகுகளிலும் அதிநவீன தகவல் தொடர்புக் கருவிகள் இருந்தது குறிப்பிடத்தக்கது. (ஶ்ரீ)

# வரகாபொல சம்பவம் குறித்து விசாரணை நடத்துமாறு ஜே.வி.பி.கோரிக்கை

கடந்த மாதம் வரகாபொலவில் இடம்பெற்ற கொள்ளைச்சம்பவம் தொடர்பாக சுயாதீன விசாரணை நடத்துமாறு ஜே.வி.பி. கோரியுள்ளது.

இக்கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனக் கூறப்படும் 7 சந்தேக நபர்களும் பொலிஸாருடனான மோதலின் போது கொல்லப்பட்டதாக பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

எனினும் கிராமவாசிகள் தாம் கைதுசெய்த சந்தேக நபர்கள் இருவரை பொலிஸாரிடம் கையளிக்கும் காட்சிகள் கொண்ட வீடியோவொன்று வெளியானதையடுத்து இதுதொடர்பாக விசாரணை நடத்துமாறு ஜே.வி.பி. வலியுறுத்தியுள்ளது.

சந்தேக நபர்கள் மோதல்களின்போது பலியானதாக பொலிஸார் கூறினாலும், சந்தேகநபர்கள் இரு வரை கிராமவாசிகள் பொலிஸாரிடம் கையளிப்பைத அந்த வீடியோகாட்டுகிறது என ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

வரகாபொலவில் நகை அடகுக்கடையொன்றில் இடம்பெற்ற கொள்ளை தொடர்பாக சந்தேக நபர்களை பொலிஸார் துரத்தி வந்தபோது அம்பேபுஸ்ஸவில் இடம்பெற்ற மோதலில் பொலிஸார் இருவர் கொல்லப்பட்டதுடன் மேலும் இருவர் படுகாயமடைந்தனர்.

அதன்பின் இராணுவ உதவியுடன் தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இருநாட்களில் சந்தேக நபர்கள் அனைவரும் பொலிஸாருடனான மோதல்களின்போது கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

இதேவேளை பொலிஸ் பேச்சாளர் பிரசாந்த ஜயகொடியிடம் இது தொடர்பாக கேட்டபோது, இச்சம்பவங்கள் குறித்து நீதவான் விசாரணைகள் நடைபெற்று நீதிமன்ற தீர்மானமொன்றும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். (ஶ்ரீ-2)

## புலிகளின் கப்பல்கள் சர்வதேச கப்பல் நிறுவனத்தில் பதிவு

### கடற்படைத்தளபதி தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் எட்டு கப்பல்கள் சர்வதேச கப்பல் நிறுவன்த்தில் பதிவுசெய்யப்பட்டே பணிகளில் ஈடுபட்டு வருவதாக கடற்படையினர் கண்டறிந்துள்ளதாக இலங்கை கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல் திஸர சமரசிங்க தெரிவித்துள்ளார்.

வர்த்தக கப்பல்களாக பதிவு செய்யப்பட்டுள்ள இந்தக் கப்பல்கள் குறித்து, பல நாடுகளுக்கு அறிவிக்கப்பட்டது.

எனினும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. கடற்படையினரால் அழிக்கப்பட்ட புலிகளின் கப்பல்களில் சர்வதேச கப்பல் நிறுவனத்தில் பதிவு செய்யப்பட்ட இலக்கங்கள் காணப்பட்டன.

இதற்கான தெளிவான சாட்சியங்கள் இருப்பதாகவும் திஸர சமரசிங்க குறிப்பிட்டுள்ளார். (ஶ்ரீ-2)

# நாட்டை சர்வதேசத்தில் அவதூறுக்கு உட்படுத்த சிலர் முயற்சிக்கின்றனர்

## ஜனாதிபதி குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாட்டில் சர்வாதிகாரஆட்சி நிலவுவதாக பிரசாரங்களை மேற்கொண்டு வரும் சிலர், நாட்டைசர்வதேசத்தின் மத்தியில், அவதூறுக்கு உட்படுத்த முயற்சிப்பதாகவும் இதுகுறித்து மக்கள் நன்கு உணர்ந்து கொள்ளவேண்டும் எனவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கடுவலையில் அமைக்கப்பட்டுள்ள நூலகம் ஒன்றை திறந்து வைக்கும் வைபவத்தில் நேற்று முன்தினம் உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது நாம் நாட்டை அபிவிருத்தி செய்து வருகிறோம். 30 வருடகால யுத்தத்தை முடிவுக்குக்கொண்டு வந்துள்ளோம். கொடூர யுத்தத்தோடு மக்களின் மனங்களை



வென்றெடுக்கும் வேலைத்திட்டங்களையும் நாம் ஆரம்பித்துள்ளோம்.

எமக்கு பலவிதமான அழுத்தங்கள் இருக்கின்றன. இன்று பலவிதமான குற்றச்சாட்டுகள் எம்மீது சுமத்தப்படுகின்றன. நாடு பெற்ற வெற்றியை வேறு விதமாக காட்ட முயற்சிக் கின்றனர். விசேடமாக விடுதலைப்புலிகளுக்கு ஆதரவானவர்களும், டொலர்களுக்கு அடிபணிந்தவர்களும் பாரிய வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளனர்.


சிலர் தம்மை வெளிநாடுகளில் உள்ள மின்சார நாற்காலிக்குக் கொண்டு செல்லத் தயாராகி வருகின்றனர். இலங்கை பெற்ற பெற்றியைத் தரம் தாழ்த்தவே அவர்கள் இப்படியான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தியாவில் இருந்து வந்த சிரேஷ்ட ஊடகவியலாளர் ஒருவர் என்னுடன் பேசினார். இலங்கையில் நடைபெற்ற மனிதாபிமான நடவடிக்கையை தாம் உயர்வான மதிப்பீட்டில் காண்பதாக அவர் கூறினார். பொதுமக்களுக்கு எவ்விதமான இழப்புகளும் ஏற்படாத வகையிலேயே நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

கிழக்கை மீட்கும்போரில் பொதுமக்கள் எவருக்கும் எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை. எனினும் வடக்கை மீட்டது குறித்து வேறு விதமாகப் பார்க்கின்றனர்.

வடக்கில் மேற்கொள்ளப்பட்ட மனிதாபிமான நடவடிக்கையானது உலகில் மிகவும் பயங்கரமான பயங்கரவாதிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையே. வேறு எந்தச் செயற்பாடுகளும் இல்லை எனவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார். (ஶ்ரீ-2)

# போர்க்கால நினைவுச்சின்னமாக மாறியுள்ள நீர்த்தாங்கி



(கிளிநொச்சி)

கடந்த காலபோர் நடவடிக்கையின் போது தகர்க்கப்பட்ட நீர்த்தாங்கிகள் போர்க்கால நினைவுச் சின்னமாக பேணிப்பாது காக்கப்பட்டு வருகின்றது.

கடந்த 1997 இல் கிளிநொச்சி நோக்கி ஆனையிறவில் இருந்து இராணுவத்தினர் மேற்கொண்ட "சத்ஜெய" இராணுவ நடவடிக்கையின் போது விடுதலைப்புலிகள் முதலாவது நீர்த்தாங்கியனை குண்டு வைத்து தகர்த்திருந்தனர். பின்னர் இது உடைத்து அகற்றப்பட்டதுடன், அவ் இடத்தில் 2002 ஆம் ஆண்டு காலப் பகுதியிலே புதிதாக ஒரு நீர்த்தாங்கி அமைக்கப்பட்டிருந்தது. இதனையும் விடுதலைப்புலிகள் அமைப்பினர் 2008 ஆம் ஆண்டு குண்டு வைத்து தகர்த்தனர்.

இவ்வாறு தகர்க்கப்பட்ட நீர்த்தாங்கியினை அம்பாந்தோட்டை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவின் பணிப்பின் பேரில் போர்க்கால நினைவுச் சின்னமாக பேணிப் பாதுகாக்கப்பட்டு வருகின்றது.

இதேவேளை புதிதாக பொருத்தமான ஓர் இடத்தில் நீர்த்தாங்கியினை அமைப்பதற்கான நடவடிக்கையும் மேற் கொள்ளப் படவுள்ளது. (ஶ்ரீ-3-30)

# கவிதைக் கலசம்

## சங்குநாதம்

### தேடிப் பாருங்கள்...

எவருக்கும்
தெரியாமல்
சிலுவையில்
அறையப்பட்டிருக்கின்றான்
ஒரு
தேவகுமாரன்!
தேசக்
கண்ணாடியில்
தெரிகிறது
அவன்
போனயிடம்
ஆனால்
தெரிய வில்லை
அவன்
மாண்டயிடம்
தேடிப்
பாருங்கள்
எவருக்கும் தெரியாமல்
சிலுவையில்
அறையப்பட்டிருக்கின்றான்
ஒரு
தேவகுமாரன்!

உமிரோவியன்

சிறைக்குள்ளே ஏங்கும்
வித்துகளே
இங்கு மாவின் விலைதான்
அதிகம்
மனித உரிமைகள்
மலிவு
யாருக்காக யார்
அழுவது
உனக்காக இங்கு
அழுவது யார்
யாரிடமும் இங்கு கண்ணீர்
இல்லை
அதுதான் ஆறாக ஓடிவிட்டதே!

தே.சிந்துஜா
மானிப்பாய்

### புரிந்துணர்வு

மங்கலமும் அமங்கலமும்
அடையாள அணிவகுப்பிற்குள்
இனங்காணப்பட்டதால்!
மறுவாழ்வும் மறுமலர்ச்சியும்
தமக்குள்
மாலை மாற்றிக் கொண்டது

க.நாகேஸ்வரா
சண்டிலிப்பாய்

## கவிதைத் துளிகள்

### நட்பு

சுகமோ சோகமோ
இரண்டும் முழுமை பெறுவது
நட்பில் மட்டும் தான்

### சோகம்

மனிதன் தன்னை உணர
இறைவன் கொடுக்கும்
சிறு இடை வெளி

### மழை

பூமி படும் வேதனைக்காக
வானம் வழங்கும் கண்ணீர்

செ.கஸ்தூரி
பருத்தித்துறை

### ஆயுள் கைதி...!

நான் முட்கம்பி வேலிகளால்
சூழப்பட்ட சிறைச்சாலையின்
கைதியல்ல...! உன்
இதயக் கூண்டில் மீளமுடியாத
உன்னால் சிறைபிடிக்கப்பட்ட
ஆயுள் கைதி...!

து.திலக்
யாழ்ப்பாணம்

### நிஜம்!

ஆயிரமாயிரம் பாரதி வந்தாலும்
ஆண்டுகள் பல போனாலும்
மறையப்போவதில்லை!
சீதனக் கொடுமை
புதுவரவு ஒன்று
தீண்டல் கொடுமை
நாகரீக உலகில்
கற்புக்கரசி போலிருப்பதை விட
உணர்ச்சிகளற்ற
ஜடம் போலிருப்பது மேல்!

ஸ்ரீ-சுனந்தன்
பொலிகையூர்

### ஏமாற்றி விட்டாயே

அன்று அன்பாய்
இருந்த நீ
இன்று அமைதியாய்
மாறியதேன்...
இது உன்
பழக்க தோஷமா?
இல்லை
என்னுடன்
பழகியது வேஷமா?



அ.புவிதா
முல்லைத்தீவு

### இமயம் தொட...



வயிற்றில் துணியைக்கட்டி
வாழ்வதை விட
வறுமைக்கு எதிர் நின்று
ஏர் பிடித்து வெற்றி கொள்
உழைப்பால் உயர்வாய்
வாழ்வதற்காய் சேமி
சேமிப்பதற்காய் வாழாதே!

மாலை. நா.கஜேந்திரா

### பூஜ்ஜியத்தினுள்ளே...!

எளிதாகச் சொல்லுதல்
இயல்பாகிப் போகின்றன
செயலுக்கு உருவமூட்டும்
செயல்திறனற்ற யாவும்
சோம்பலுக்குள் மூழ்கும்
மேலாதிக்க முனைப்புகளும்
அதிகாரத் தளைகளும்
திறமைகளை நசுக்கி ஆளும்
நிறைவேற்ற முடியாத
தேவைகள் முடிவிலியாய்
பூஜ்ஜியத்துள் வட்டமிடும்

வே.ஜ.வரதராஜன்



## மௌனத்தின் தேடல் -52

### ஏக்கங்களுடன்

அவலங்கள் தந்த
போர்ப் பொழுதுகளை
மனத்திரையில்
மௌனமாய் மீட்டுகிறது
-ஒரு பிஞ்சு
ஏக்கங்களுடன்...

சி.வினோவர்மன்
புளியங்கூடல்

### பாசம்

என் பள்ளித் தோழனே!
பழகினோம் பல நாள்!
தேடினேன் கன நாள்
இன்று கண்டு விட்டேன்
உன் முகத்தை!
பயப்படாதே வெளியேவா
பாலர் நாம்
கூடி விளையாடலாம்

அ.அன்பரசன்
சைவப்பிரகாச வித்தியாலயம்
வரணி

### தனிமை

உதவிக்கு யாரும் வருவாரா -
இல்லை
உயிர் எடுக்க வந்தாரா...?
விழியால் பேசும் பிஞ்சுக்கு
விதியின் பாதை இதுவா?

எஸ்.கே.நிலா
வடமராட்சி

### விடிவிற்காக

பூத்துக் குலுங்கிய பூங்காவனம்
பாலைவனம் ஆகியதால் வெறுத்துப்
போன ஓர் உயிர் விடியலைத்
தேடுகின்றது....

அ.சிவரூபி
பருத்தித்துறை

போரால்!
என் உறவுகளை
இழந்த நான் தனிமையிலே
என்னை உறவாக்கி
எனக்கு உறவாக
யாரோ எவரோ?

ஜெ.திவ்யா
நுணாவில்

### தேடல்

அப்பாவின் தோள் மீதும்
அம்மாவின் மடி மீதும்
சாய்ந்து தூங்கிய – அந்த
தொலைந்து போன
இன்பத்தையா
இந்தக் குடிசையினுள்
தேடுகிறாய்?

த.நிறோ
சுன்னாகம்

மலர்ந்துள்ள புத்தாண்டிலாவது
இந்த ஏழைகளின்
வாழ்வில் வறுமை
என்னும் இருள் நீங்கி
ஒளி வீசிடுமா

சு.ஜெயரூபன்
பருத்தித்துறை

### எதைத் தேடுகிறான்

சிரித்துக் களித்த
சிங்கார முகம் இன்று
வாடிச் சோர்ந்து கிடக்கிறதே
சோகமே உருவான இவன்
ஏக்கம் நிறைந்த விழிகளால்
எதைத் தேடுகிறான்
அழிந்து போன தன் உறவுகளையா?

ஆராதனா
தென் மட்டுவில்

### காத்திருப்பு

போரில் தொலைந்து போன உன்
பெற்றோரையா இல்லையேல்
தடுப்பு முகாமில் இருக்கும் உன்
சகோதரனையா
எதிர்பார்த்துக் காத்திருக்கின்றாய்

ஜெ.கஜேந்திரன்
பருத்தித்துறை

### காத்திருப்பின் சுகம்

வயதறியாத உன்
காத்திருப்பின்
கவலை உனக்கு
மட்டும் தான்
காத்திரு காலம்
உன் பின் ஒரு
நாள் உலாவரும்

இ.தர்சன்
கரவெட்டி

### எதிர்பார்ப்பு

கதவோரம் நின்று நீ
என்ன தான் யோசிக்கின்றாய்?
காணாமல் போன அப்பா
திரும்பி வருவாரா என்றா?

ப.அமிர்தினி
அரசபுரம்

### நம்பிக்கையுடன்

நிலை மாறிய உலகில்
துணையின்றி வாடுகிறேன்
உறவுகள் வருமென்று
காத்திருக்கின்றேன்
நம்பிக்கையாய் தூணருகில்...!

கே.நிவா
கிளிநொச்சி

### எதிர்காலம்

வாடிய வதனத்துடன்
மகிழ்வான வாழ்விற்காய்
ஏங்கிடும் தளிரே
எழுந்திரு துணிந்திடு
எதிர்காலம் உன்வசமாகும்

ஆஷா
யாழ்ப்பாணம்

நீயும் என்னைப் போல
தொலைந்து போன உன்
உறவுகளின் வருகைக்காகவா
ஆவலுடன் எதிர்பார்க்கின்றாய்?

ந.கீதா
யா/நெல்லியடி ம.ம.வி

### தனிமை

உறவுகள் ஏதுமின்றி
தனிமையில் தவிக்கின்றேன்
இது விதியோ?
காலமோ?
நான் செய்த பாவமோ?

சா.தர்சிகா
மருதங்கேணி

## சங்குநாதம் மௌனத்தின் தேடல்- 53



### அன்பு வாசகர்களே !

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகளை

ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 14.01.2011 ஆம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளிற்கே
முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

# கௌரவிப்பு விழாவும் நூல் வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

ஆளுநர் சபை உறுப்பினர்கள் மற்றும் பிரிவுத் தலைவர்களை கௌரவிக்கும் விழாவும் பேராசிரியர் வி.க.கணேசலிங்கம் எழுதிய (Biology of Essential Human Diseases) நூல் வெளியீட்டு விழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கண்டி வீதியில் உள்ள வை. எம்.சி.ஏ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கு.பாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெறும் மேற்படி நிகழ்வில் ஆளுநர் சபை உறுப்பினர்கள் மற்றும் பிரிவுத் தலைவர்கள் பதக்கம் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர்.

நூல் வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராக சிரேஷ்ட அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் எஸ்.ரவிராஜ் கலந்து கொள்ளவுள்ளார். இந் நூலுக்கான ஆய்வுரைகளை இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளை உப தலைவர் டாக்டர்.வை.தியாகராஜா, யாழ். மாவட்ட உலக சுகாதார ஸ்தாபன டாக்டர் என்.சிவராசா, யாழ். மார்புச் சிகிச்சை நிலைய வைத்திய கலாநிதி கே.சி. யமுனாநந்தா ஆகியோர் வழங்கவுள்ளனர். (ஸ்ரீ-4)

# எம்.வி.சன்.சி. கப்பல் பணியாளர்களில் நால்வர் விடுதலைப்புலி உறுப்பினர்கள்

## கனேடிய தூதரகம் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழர்களை கனடாவுக்கு அழைத்துச் சென்ற கப்பல் பணியாளர்களில் நால்வர் விடுதலைப் புலி உறுப்பினர்கள் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக கனேடியா தூதரக தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

குடிவரவு,குடியகல்வு முகாம் ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இவர்களிடம் கனேடிய புலனாய்வுத்துறையினர் விரிவான விசாரணைகளை நடத்தி வருவதாகவும் அந்தத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

இவர்கள் விடுதலைப்புலிகளுடன் இணைந்து பயங்கரவாத செயற்பாடுகளில் ஈடுபட்டனரா என்பதை அறிய கனடாவின் குடியேற்றம் மற்றும் அகதிகள் தொடர்பான சபை தீர்மானித்துள்ளது.

இவர்கள் கனடா மக்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருப்பதால் குடிவரவு , குடியகல்வு முகாம்களில் இருந்து வன்கூவரில் உள்ள சிறைச்சாலைக்கு மாற்ற குடியேற்றம் மற்றும் அகதிகள் தொடர்பான சபை முடிவு செய்துள்ளது.

சந்தேக நபர்கள் கனடாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருக்கலாம் என்பதால் அவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கத் தீர்மானித்துள்ளதாக கனேடிய பாதுகாப்புத்தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

இலங்கையைச் சேர்ந்த 492 பேரை ஏற்றிய எம்.வி.சன்.சி.என்ற கப்பல் தாய்லாந்தில் இருந்து கனடாவுக்குச் சென்றது.

கடந்த ஓகஸ்ட் மாதம் கனடாவுக்குச் சென்ற இந்தக் கப்பலில் இருந்த மேற்படி நபர்கள் கைது செய்யப்பட்டனர். கப்பலில் சென்றவர்களில் அதிகளவானோர் பெண்கள் மற்றும் குழந்தைகள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# புலிகளால் விசேடமாக வடிவமைக்கப்பட்ட துப்பாக்கியை வைத்திருந்தவர் கைது

(கொழும்பு)

யுத்த காலத்தில் விடுதலைப்புலிகளால் பயன்படுத்தப்பட்டதாக கூறப்படும் ரி 56 ரக துப்பாக்கியொன்றை தனது வீட்டில் மறைத்து வைத்திருந்த தபால் ஊழியர் ஒருவர் தெவிநுவர பிரதேசத்தில் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பயணப் பொதியொன்றில் மறைத்து இந்த துப்பாக்கி வைக்கப்பட்டிருந்தாகவும் துப்பாக்கியுடன் 48 தோட்டாக்களையும் தாம் மீட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். சந்தேக நபர் துப்பாக்கியை தென்பகுதியில் இடம்பெற்ற வன்முறைகளுக்கு பயன்படுத்தும் நோக்கில் தலா இரண்டு இலட்சம் ரூபா வாடகைக்கு கொடுத்துள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

விடுதலைப்புலிகள் இந்த துப்பாக்கியை விசேடமான முறையில் வடிவமைத்துள்ளதாகவும் பொலிஸாரோ இராணுவத்தினரோ இவ்வாறான துப்பாக்கியை பயன்படுத்துவதில்லை எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். தெவிநுவர பிரதேசத்தின் மீன் வியாபாரி ஒருவரே தபால் ஊழியருக்கு துப்பாக்கி கொண்டு வந்து கொடுத்துள்ளார்.

இந்த தகவலையடுத்து அந்த வியாபாரியை கைது செய்ய சென்ற வேளையில் அவர் மீன் லொறியை கைவிட்டு தப்பிச் சென்றுள்ளார். லொறியை கங்கதர பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபரான தபால் ஊழியர் தந்திகளை விநியோகிக்கும் பணியில் ஈடுபட்டு வந்தவர் எனவும் பொலிஸார் கூறியுள்ளனர். (ஸ்ரீ)


S.V.R

மதுரை காமராசர் பல்கலைக் கழகத் தொலை நிலைக்கல்வி மூலம்

பட்டப் படிப்பினை பெறுவதற்கான வாய்ப்பு

தற்போது வன்னியில்

✷ சர்வதேச அங்கீகாரம் பெற்ற இப் பல்கலைக்கழகமானது இலங்கைப் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் அங்கீகாரத்தினைப் பெற்ற முதல் தர பல்கலைக்கழகமாகத் திகழ்கிறது.


விண்ணப்பப் படிவங்களையும் கைநூல்களையும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

சட்டவள நிலையம் : கண்டி வீதி, கிளிநொச்சி.

தொலைபேசி:- 0213212682, 0777705963

(ஜீ-2054)


# கிளிநொச்சி தபாலகம் இதுவரை புனரமைப்பு செய்யப்படவில்லை



(கிளிநொச்சி)

போரினால் சேதமடைந்த கிளிநொச்சி தபாலகத்தையே படத்தில் காண்கிறீர்கள். இத் தபாலகம் இதுவரை புனரமைப்புச் செய்யப்படாது இருப்பதுடன் தற்போது தற்காலிகமாக தனியாருக்குச் சொந்தமான கடையொன்றில் மிகுந்த இடர்களிற்கு மத்தியில் இயங்கி வருகின்றது.

இதேவேளை கிளிநொச்சி தபாலகத்திற்கென நிரந்தரமாக தபாலதிபர் நியமிக்கப்படாததுடன் 6 மாத கால தற்காலிக அடிப்படையில் தற்போது தபூலதிபர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

குறுகிய இடப்பரப்புள்ள கடையில் வைத்து கிளிநொச்சி மாவட்டத்திற்கான தபாலகங் களை தரம் பிரிப்பதில் சிரமங்களை எதிர்கொள்வதை அவதானிக்க முடிகின்றது. (ஸ்ரீ-3-30)

# அமைச்சர் சார்பில் சட்டத்தரணியாக ஆஜரான பிரதியமைச்சர்

## நாடாளுமன்றில் கண்டனம்

(கொழும்பு)

கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு வரும் வழக்கொன்றின் பிரதிவாதியான அமைச்சர் ஒருவர் சார்பில் பிரதியமைச்சர் ஒருவர் சட்டத்தரணியாக ஆஜராகியதாக கூறப்படும் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை நடத்துவதாக சபாநாயகர் சமல் ராஜபக்ஷ நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவுக்கு எதிரான வழக்கில் பிரதியமைச்சர் ஒருவர் சட்டத்தரணியாக ஆஜராகியிருந்ததாகவும் நாடாளுமன்ற நடைமுறைகளுக்கு அமைய அமைச்சர்களும் பிரதியமைச்சர்களும் வழக்குகளில் ஆஜராவதில்லை என எதிர்க்கட்சியின் கொறடா ஜோன் அமரதுங்க சபையில் தெரிவித்த பின்னரே சபாநாயகர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

பிரதியமைச்சர் ஒருவர் வழக்கின் சட்டத்தரணியாக ஆஜராவது நீதிமன்றத்திற்கு அழுத்தம் கொடுப்பதாக அமையும் எனவும் அமைச்சர் சார்பில் பிரதியமைச்சர் சட்டத்தரணியாக ஆஜராவது முற்றிலும் தவறான நடவடிக்கை எனவும் ஜோன் அமரதுங்க குறிப்பிட்டுள்ளார்.

நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது மனுதாரர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி பிரதியவாதியான அமைச்சர் சார்பில் பிரதியமைச்சர் ஆஜராவதை எதிர்த்துள்ளதாகவும் எனினும் தாம் சட்டமா அதிபரின் அனுமதியுடனேயே வழக்கில் ஆஜராவதாக பிரதியமைச்சர் கூறியுள்ளதாகவும் அமரதுங்க கூறியுள்ளார். இதனையடுத்து இந்த சம்பவம் குறித்து கலந்துரையாடி விசாரணை நடத்தி தமது முடிவை அறிவிப்பதாக சபாநாயகர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ)



தொட்டிலடி சங்கானையைச் சேர்ந்த சமாதான நீதவானும் சங்கானை மத்தியஸ்த சபையின் தவிசாளருமான வைரமுத்து சிவபாலன் கடந்த 15ஆம் திகதி ஜோன் டீ சில்வா ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்ற அரச பெரு விழாவில் நாடக, வானொலி திரைப்படத்துறையில் சேவையாற்றியமைக்கான கலாபூஷண விருது -2010 வழங்கி கௌரவிக்கப்படுவதை படத்தில் காணலாம்.

# அக்கரைப்பற்று பிரதேச சபை மாநகர சபையாக மாற்றம்

## கபே அமைப்பு கடும் அதிருப்தி

(கொழும்பு)

உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர் ஏ.எல். எம்.அதாவுல்லாவின் தேர்தல் தொகுதியான அக்கரைப்பற்றுப் பிரதேசத்தின் அதிக நிலப்பரப்பைக் கொண்ட பிரதேசங்களை உள்ளடக்கி உரிய வர்த்தமானி அறிவித்தலைக் கூட வெளியிடாது உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் மாநகர சபையாக மாற்றப்பட்டுள்ளமை குறித்து கபே அமைப்பு கடும் அதிருப்தி தெரிவித்துள்ளதுடன் அதற்கு எதிர்ப்பையும் வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பு அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. அக்கரைப்பற்றுப் பிரதேசம் இதுவரை பிரதேச சபையாக மாத்திரமே இயங்கிவந்தது. உள்ளூராட்சித் தேர்தல் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படுவதற்கு சில மணித்தியாலங்களுக்கு முன்னர் 23 வாக்குச் சாவடிகளைக் கொண்ட அந்தப் பிரதேச சபை மாநகர சபையாக தரமுயர்த்தி அமைச்சின் செயலாளர் கடிதமொன்றை வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் அரசாங்க அச்சகத்தில் நேற்று காலை 9.30 வரைகூட அச்சிடப்பட்டிருக்கவில்லை. பிரதேச சபையாக இருந்த ஒரு பிரதேசத்தை மாநகர சபையாக உயர்த்தியமையானது இலங்கை நிர்வாகத்துறை வரலாற்றில் முதன்முறையாகும்.

அரசியல் தேவையின் அடிப்படையில் இந்த தரமுயர்த்தல் மேற்கொள்ளப்பட்டிருப்பதன் மூலம் உள்ளூராட்சி செயற்பாடுகளின் கட்டாயமாக இருக்கவேண்டிய நல்லாட்சி மற்றும் வினைத்திறன் தொடர்பான பரிந்துரைகளும் மீறப்பட்டுள்ளன. பிரதேச சபையொன்றை ஒருபோதும் உடனடியாக மாநகர சபையாக உயர்த்தியமையானது இலங்கையில் இதற்கு முன்னர் இடம்பெற்றிருக்கவில்லை. பிரதேச சபையொன்று நகர சபையாக தரமுயர்த்தப்பட வேண்டும். எனினும் அக்கரைப்பற்று தொடர்பில் இந்த நடைமுறைகளை அமைச்சு கவனத்தில் கொள்ளவில்லை எனவும் கபே அமைப்பு தெரிவித்துள்ளது.

(ஸ்ரீ-4)

# இலங்கை பிரச்சினைக்கு நிரந்தர தீர்வுகாண இந்திய அரசு நடவடிக்கை

## தமிழக காங்கிரஸ் தலைவர் தெரிவிப்பு

இலங்கை பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளை இந்திய அரசு எடுத்து வருவதாக தமிழக காங்கிரஸ் தலைவர் தங்கபாலு தெரிவித்துள்ளார்.

சட்டமன்ற க்ாங்கிரஸ் கட்சி அலுவலகத்தில் காங்கிரஸ் உறுப்பினர்கள் கூட்டம் தமிழக காங்கிரஸ் தலைவர் கே.வி.தங்கபாலு தலைமையில் நடந்தது. இதில் காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்கள் கலந்து கொண்டனர்.கூட்டம் முடிந்ததும் செய் தியாளர்களிடம் பேசிய தங்கபாலு,

இந்திய அரசு இலங்கை பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இலங்கை தமிழர்கள் மறுவாழ்வுக்காகவும் நல்வாழ்வுக்காகவும் பல திட்டங்களை 8 ஆயிரம் கோடி அளவுக்கு இந்திய அரசு செயல்படுத்தி வருகிறது. இலங்கை தமிழர்களுக்கு சமமான வாழ்வாதாரம் கிடைக்கவும் இந்திய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்றார்.

(ஸ்ரீ-4)

# யுத்த வீரர்கள் தற்போது மரக்கறி வியாபாரிகள்

## பொன்சேகா கிண்டல்

தன்னால் யுத்தம் வீரர்களாக ஒப்படைக்கப்பட்ட படையினர் இன்று மரக்கறி வியாபாரிகளாகவும் இராணுவத் தளபதி மரக்கறி முதலாளியாகவும் மாற்றப்பட்டுள்ளனர் என முன்னாள் இராணுவத் தளபதியான சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

வெள்ளைக்கொடி விவகாரம் தொடர்பான வழக்கு நேற்று விசாரணைக்கு வந்த போது சிறைச்சாலை அதிகாரிகளால் அழைத்து வரப்பட்ட அவர் நீதிமன்ற வளாகத்தில் வைத்து இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது இவ்வாறிருக்க கொழும்பின் பல பகுதிகளிலும் நேற்று படையினர் மரக்கறி விற்பனையில் ஈடுபட்டிருந்தனர்.

சுமார் 14 இடங்களில் இந்த மரக்கறி விற்பனை நிலையங்கள் அமைக்கப்பட்டிருந்தன. இராணுவத்தினரின் மரக்கறி விற்பனை நிலையங்களில் மக்கள் கூட்டம் அதிகமாகக் காணப்பட்டன.

(ஸ்ரீ)

# மீள் குடியேற்றப்படாமல் 72 ஆயிரம் பேர் உறவினர் வீடுகளில் தங்கியுள்ளனர்

## பிரதியமைச்சர் முரளிதரன் தெரிவிப்பு

(கொழும்பு)

உரிய முறையில் மீள் குடியேற்றப்படாது தமது உறவினர்களின் வீடுகளில் 72ஆயிரம் பேர் வரை வாழ்ந்து வருவதாகவும் இவர்கள் வடக்கிலுள்ள அதி உயர் பாதுகாப்பு வலயத்தில் குடியேற்றப்பட வேண்டியவர்கள் என மீள் குடியேற்ற அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் கூறியுள்ளார்.

இடம்பெயர்ந்த மக்களில் 18 ஆயிரம் பேர் மெனிக்பாம் முகாமில் இருக்கின்றனர்.

இடம்பெயர்ந்த 52 ஆயிரம் முஸ்லிம்கள் புத்தளத்தில் வாழ்ந்துவருவதாகவும் இவர்களை விரைவில் யாழ்ப்பாணத்தில் குடியேற்ற வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

(ஸ்ரீ-2)

# ஜனாதிபதியின் பாதுகாப்பு உத்தியோகத்தர் எனக்கூறி மோசடி செய்தவர் கைது

(கொழும்பு)

ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவில் பணியாற்றுவதாக கூறிக் கொண்டு அம்பாந்தோடை துறைமுகத்தில் தொழில்வாய்ப்பு பெற்றுத் தருவதாக தெரிவித்து 150 இளைஞர் ,யுவதிகளிடம் பண மோசடி செய்த ஒருவரை நேற்று முன்தினம் நாவலப்பிட்டி பொலிஸார் கைது செய்தனர்.

இவர் மேற்படி இளைஞர், யுவதிகளிடம் சுமார் 60 இலட்சம் ரூபாவை மோசடி செய்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இவரிடமிருந்து மூன்று அடையாள அட்டைகள், இராணுவ சீருடை, ஜனாதிபதி செயலகத்தின் போலி கடிதத் தலைப்பு, இறப்பர் முத்திரைகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

நாவலப்பிட்டி பகுதியைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட இளைஞர், யுவதிகள்தொழில் வாய்ப்புக்காக பொலிஸ் சான்றிதழ் பெற்றுச் சென்றதைத் தொடர்ந்து சந்தேகம் கொண்ட பொலிஸார் விசாரணை நடத்தியதையடுத்தே இந் நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நாவலப்பிட்டி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உதய விக்ரம தலைமையில் விசாரணைகள் நடைபெறுகின்றன.

(ஸ்ரீ)




★ 0475 - பைசண்டைன் பேரரசன் சீனோ அவனது தலைநகரான கொன்ஸ்டண் டீனப்போல் நகரை விட்டுக் கட்டாயமாக வெளியேற்றப்பட்டான்.

★ 1431 - ஜோன் ஒஃப் ஆர்க் மீதான முன் விசாரணைகள் ஆங்கிலேயர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட நீதிமன்றத்தில் ஆரம்பமானது.

★ 1707 - ஸ்கொட்லாந்து மற்றும் இங்கிலாந்து பேரரசுகளை இணைக்க இங்கிலாந்து நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்தது.

★ 1760 - ஆப்கானியர்கள் மரதர்களைத் தோற்கடித்தனர்.

★ 1768 - பிலிப் ஆஸ்ட்லி என்பவர் முதன் முதலாக நவீன சர்க்கஸ் காட்சியை லண்டனில் நடத்தினார்.

★ 1788 - கனெடிகட் 5வது மாநிலமாக ஐக்கிய அமெரிக்காவில் இணைந்தது.

★ 1793 - ஜான் பியர் பிளன்சார் வாயுக் குண்டில் பறந்த முதல் அமெரிக்கர் ஆனார்.

★ 1799 - பிரித்தானியப் பிரதமர் வில்லியம் பிட் நெப்போலியனுக்கெதிரான போருக்கு நிதி சேர்ப்பதற்காக வருமான வரியை அறிமுகப்படுத்தினார்.

★ 1816 - ஹம்பிறி டேவி சுரங்கத் தொழிலாளர்களுக்காக வடிவமைக்கப்பட்ட டேவி விளக்கை வெற்றிகரமாகப் பரிசோதனை செய்தார்.

★ 1857 - கலிபோர்னியாவில் 7.9 ரிக்டர் நிலநடுக்கம் பதியப்பட்டது.

★ 1858 - டெக்சாஸ் குடியரசின் கடைசித் தலைவர் அன்சன் ஜோன்ஸ் தற்கொலை செய்து கொண்டார்.

★ 1861 - அமெரிக்க உள்நாட்டுப் போர் தொடங்க முன்னர் ஐக்கிய அமெரிக்காவில் இருந்து இரண்டாவது மாநிலமாக மிசிசிப்பி பிரிந்தது.

★ 1878 - இத்தாலியின் மன்னனாக முதலாம் உம்பேர்ட்டோ முடி சூடினான்.

★ 1905 - ரஷ்யத் தொழிலாளர் சென் பீட்டர்ஸ்பேர்க்கில் குளிர்கால அரண்மனையை முற்றுகையிட்டனர். சார் மன்னரின் படைகள் பலரைச் சுட்டுக் கொன்றனர் (ஜூலியன் நாட்காட்டியின் படி) இந்நிகழ்வே 1905 ரஷ்யப் புரட்சி ஆரம்பமாவதற்கு வழிகோலியது.

★ 1916 - முதலாம் உலகப் போர்: ஒட்டோமான்களின் வெற்றியுடன் கலிப்பொலி நடவடிக்கை முடிவுக்கு வந்தது.

★ 1921 - புனித ஜோர்ஜ் கோட்டையில் சென்னை சட்டமன்றத்தின் முதலாவது கூட்டம் நடைபெற்றது.

★ 1951 - ஐநாவின் தலைமையகம் நியூயோர்க் நகரில் அதிகாரபூர்வமாகத் திறக்கப்பட்டது.

★ 1964 - மாவீரர் நாள்: பனாமா கால்வாயில் பனாமாவின் தேசியக்கொடியை இளைஞர்கள் ஏற்ற முயன்ற பின்னர் அமெரிக்கப் படைகளுக்கும் பொதுமக்களுக்கும் இடையில் சமர் மூண்டது. 21 பொதுமக்களும் 4 படையினரும் கொல்லப்பட்டனர்.

★ 1972 - ஹொங்கொங்கில் குயீன் எலிசபெத் கப்பல் தீக்கிரையானது.

★ 1974 - யாழ்ப்பாணத்தில் நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு முடிவடைந்தது.

★ 1986 - பொலரொயிட் உடன் காப்புரிமைப் பிரச்சினை முறிவடைந்ததைத் தொடர்ந்து கொடாக் நிறுவனம் உடனடி படம் பிடிகருவி தயாரித்தலை நிறுத்தியது.

★ 1990 - நாசாவின் கொலம்பியா விண்ணோடம் ஏவப்பட்து.

★ 1991 - லித்துவேனியாவின் விடுதலைக் கோரிக்கையை நசுக்குவதற்காக சோவியத் ஒன்றியம் வில்னியூஸ் நகரை முற்றுகையிட்டது.

★ 2001 - சீனாவின் ஷென்சூ 2 விண்கலம் ஏவப்பட்டது.

★ 2005 - சூடான் அரசுக்கும் சூடான் மக்கள் விடுதலை இயக்கத்துக்கும் இடையில் அமைதி ஒப்பந்தம் கென்யாவில் கைச்சாத்திடப்பட்டது.

### பிறப்புகள்

★ 1868 - சோரென்சென், டென்மார்க் வேதியியலாளர் (இ.1939)

★ 1908 - சிமோன் ட பொவார், பிரெஞ்சுப் பெண் எழுத்தாளர்

★ 1913 - ரிச்சர்ட் நிக்சன், ஐக்கிய அமெரிக்க் ஜனாதிபதி (இ.1994)

★ 1922 - ஹார் கோவிந்த கொரானா, நோபல் பரிசு பெற்ற அமெரிக்க இந்தியர்

★ 1927 - துரைசாமி உருத்திரமூர்த்தி, ஈழத்துக் கவிஞர் (இ.1971)

★ 1934 - மகேந்திர கபூர், இந்தித் திரைப்படப் பாடகர் (இ.2008)

★ 1959 - ரிகொபேர்ட்டா மென்ச்சு, நோபல் பரிசு பெற்ற கௌதமாலா எழுத்தாளர்.

★ 1989 - மைக்கல் பீஸ்லி, அமெரிக்க கூடைப் பந்தாட்டக்காரர்.

### இறப்புகள்

★ 1873 - மூன்றாம் நெப்போலியன், பிரெஞ்சு மன்னன் (பி.1808)

★ 1961 - எமிலி பால்ச், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (பி.1867)

★ 1998 - கெனிச்சி ஃபூக்கி, நோபல் பரிசு பெற்ற ஜப்பானிய வேதியியலாளர் (பி.1918)

இலங்கையின் தேசியத் தலைவர் சேர் பொன்னம்பலம் அருணாசலம் இந்நாளில் இறந்தார் (பி.1853)



# எச்.ஏ.வி. பூட் நிறுவனத்தின் ஐ.பி.ஓ. ஜனவரி 12-ல் ஆரம்பம்




எச்.ஏ.வி.பூட்ஸ் லிமிட்டட் நிறுவனமானது பங்கொன்று ரூ.16 வீதம் 19,928,598 மில்லியன் பங்குகளை பொது மக்களுக்கு விநியோகிக்கும் நடவடிக்கையை எதிர்வரும் 12ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளதாக எச்.ஏ.வி. குழுமத் தலைவர் றொகான் பெர்னாண்டோ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நிறுவனமானது பொது வழங்கல் (ஐ.பி.ஓ) ஊடாக 319 மில்லியன் ரூபாயைத் திரட்ட எதிர்பார்த்துள்ளது. ஆரம்ப பொது வழங்கல் எதிர்வரும் 12-ம்திகதி ஆரம்பமாகவுள்ளது.பெப்ரவரி 01ஆம் திகதி முடிபடையவுள்ளது.

இப் பொது வழங்கல் மூலம் திரட்டப்படும் நிதி நிறுவனத்தின் தற்போதைய உற்பத்தி வளங்களை அதிகப்படுத்த பயன்படுத்தப்படும் எனத் தெரிவித்தார்.

எமது Heladiv தேயிலை உலகப் பிரசித்தி பெற்ற ஒரு பிரானட். இது 40 நாடுகளில் பதியப் பெற்றுள்ளது.

நிறுவனத்தின் 30 சதவீத பங்குகள் திரிசவி தளத்தில் பட்டியல் படுத்தப்படவுள்ளன.இதன்படி நிறுவனம் 19,928,598 மில்லியன் சாதாரண வாக்குரிமையுள்ள பங்குகளை பங்கொன்று 16/= வீதம் வழங்கவுள்ளது.இவ்வழங்கலின் போது மிகைக் கேள்வி எழுமாயின் பெப்ரவரி ஆரம்பத்தில் வர்த்தகம் தொடங்கப்படும்.

2010 மார்ச்சில் முடிபடைந்த நிதியாண்டில் நிறுவனம் ரூ.600 மில்லியனை ஏற்றுமதி வருமானமாகப் பெற்றது.ரஷ்யா, கிழக்காசிய நாடுகள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட ஐரோப்பிய சந்தைகளுக்கு எச்ஏவி பூட் ஏற்றுமதி செய்கிறது.

தேயிலைக்கான கேள்வி அதிகரித்து வருகிறது.சீனா, ரஷ்யா மற்றும் இந்தியா என்பன மிகப் பெரும் தேயிலை நுகர்வுச் சந்தைகளாக உள்ளன.இந்த வகையில் விரைவில் இந்திய சந்தையில் நுழையவுள்ளோம் என்றார்.

விண்ணப்பிக்கும் போது குறைந்தது 100 பங்குகளுக்கு அல்லது 100இன் பெருக்கங்களாக விண்ணப்பிக்கமுடியும் எனவும் தெரிவித்தார்.




# சர்வதேச தேயிலை பற்றாக்குறையும்; இலங்கையின் பெருந்தோட்டங்களும்...

நடப்பு 2011ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திற்குள், உலக அளவில் தேயிலை பற்றாக்குறை 13 கோடி கிலோவாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.எனவே சர்வதேச சந்தையில் தேயிலை விலை அதிகரிக்கும் நிலை உருவாகியுள்ளது.சென்ற ஆண்டு செப்ரெம்பர் மாதத்தில், உலகின் தேயிலை பற்றாக்குறை 11 கோடி கிலோவாக இருக்கும் என மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. தற்போதைய மதிப்பீடுகள், பற்றாக்குறை மேலும் அதிகரிக்கும் எனத் தெரிவித்துள்ளன.

இந்நிலைமை இலங்கை போன்ற பெருந்தோட்ட பொருட்களை ஏற்றுமதி செய்யும் நாடுகளுக்கு வாய்ப்பானது.

பெருந்தோட்டத் துறை அமைச்சின் தரவுகளுக்கமைய ஒரு ஹெக்டயரில் பயிரிட்ட தேயிலையின் அளவு ஆயிரத்து 300 கிலோவாகக் காணப்பட்டது.இது 2007-ம் ஆண்டில் 1500 கிலோவாக அதிகரித்துள்ளது.அதிகளவு வருவாயைத் தேடிக்கொள்ளும் வகையில்,மாற்றுப் பயிர்களான ஒயில் பாம் ,மரச்செய்கை ,கராம்பு மற்றும் இதர வாசனைத் திரவியங்கள் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளன .

23 பெருந்தோட்ட கம்பனிகளின் கீழுள்ள பகுதிகளில் மொத்தமாக 20, 832 ஹெக்டயரில் மரச்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இலங்கை தேயிலை ஏற்றுமதியின் மூலம் மட்டும் 2010ஆம் ஆண்டு அண்ணளவாக 1.5 பில்லியன் அமெரிக்க டொலர்களை வெளிநாட்டு நாணய வருமானமாகப் பெற்றுள்ளது.இறப்பர் பயிர்ச் செய்கையும் குறிப்பிடத்தக்க அளவு முன்னேற்றம் கண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படும்நிலையில்,சர்வதேச ரீதியில் இறப்பருக்கு சிறந்த கேள்வி தற்போது நிலவுகிறது.

இலங்கையின் பொருளாதாரத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணியான பெருந்தோட்டத்துறையின் முன்னேற்றத்துக்கு அரசாங்கம் தொடர்ந்து பங்களிப்பை வழங்கும் என தாம் எதிர்பார்ப்பதாக பெருந்தோட்ட முதலாளிமார் சம்மேளனத்தின் தலைவர் லலித் ஒபேசேகர தெரிவித்தார்.

பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கான சம்பள மீளாய்வு குறித்த உடன்படிக்கை கைச்சாத்திடல் இவ்வாண்டின் முற்பகுதியில் இடம் பெறவுள்ள நிலையில் பெருந்தோட்டத்துறையின் தொடர்ச்சியான செயற்பாட்டுக்கு உகந்த வகையில் சம்பள அதிகரிப்பு மேற்கொள்ளப்படவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## என்.டி.பி.வங்கி கடனட்டை அறிமுகம்

என்டிபி வங்கி (NDB Bank) அண்மையில் கடனட்டைகளை அறிமுகம் செய்துள்ளது. வெளிநாடுகளில் பொருட்களை கொள்வனவு செய்ய ,இணையத்தினூடாக கொடுப்பனவுகளைச் செலுத்த என எந்தவொரு தேவைக்குமான் கொடுப்பனவுகளையும் கட்டணங்களையும் செலுத்த என்டிபி கடனட்டைகள் வழிவகுக்கும்.

சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட கடனட்டையாகிய என்டிபி கடனட்டைகளில் சிப் செயற்பாட்டுடனான பாதுகாப்பு அம்சங்கள் அமையப் பெற்றுள்ளதால் பாவனையாளர்கள் எப்போதும் எந்தவிதக் கவலையுமற்ற என்டிபி கடனட்டையைப் பயன்படுத்துவதற்கு வழிவகுக்கின்றது.

அதுமட்டுமல்ல என்டிபி கடனட்டையானது 25 மில்லியனுக்கும் மேற்பட்ட விசா வர்த்தக பங்காளர் நிலையங்களில் ஏற்றுக் கொள்ளப்படுவதோடு உள்நாட்டிலும், சர்வதேச ரீதியிலும் ஏறத்தாழ ஒரு மில்லியன் வங்கி தானியங்கி இயந்திரங்களிலும் (ATM) உபயோகிக்கப்படக்கூடியது.

கடனட்டைகள் கோலட் ,சில்வர் வகைகளில்கிடைப்பதோடு, வங்கியின் சிறப்புரிமை வாடிக்கையாளர்களுக்கு பிறிதொரு அட்டை வழங்கப்படும்.

அத்துடன், முற்பணம் பெறும் வசதியினை எந்தவொரு என்டிபி வங்கி அல்லது உலகளாவிய ரீதியில் உள்ள எந்தவொரு விசா தானியங்கி வங்கி இயந்திரங்களிலிருந்தும் பெற்றுக் கொள்ளும் வசதியை வாடிக்கையாளர்களின் மேலதிக சௌகரியம் கருதி வழங்குகின்றது.

## பங்குச் சந்தை விபரம்

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 6635.87 | 6891.96 ⇧ |
| மிலங்கா விலைச்சுட்டி | 7061.46 | 7286.88 ⇧ |

விலை அசைவுகளின் அடிப்படையில் — புரள்வு (ரூபா.மில்.) 16,936.27

**உயர்வடைந்த பங்குகள்(ரூ.):** சிற்ரஸ் லிசர்(W)(30.80),சிற்ரஸ் லிசர்(W)(26.10),சிற்ரஸ் லிசர்(W)(19.90),சிற்ரஸ் லிசர்(W)(73.70),கொத்மலை ஹோல்டிங்(70.20).

**சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):** மோரிஷன்ஸ்(1301.00), சிலின்ஷிங்(450.00),குட் ஹோப்(455.10),ரீ சிமோல் ஹோல்டர்(218.80), வட்டபொல(800.00)

மேலதிக தகவல்கள்: www.cse.lk

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 110.12 | 111.84 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 169.56 | 173.62 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 142.23 | 146.54 |
| சுவிஸ் பிராங் | 113.23 | 116.85 |
| கனேடிய டொலர் | 109.54 | 113.15 |
| அவுஸ்திரேலிய டொலர் | 108.51 | 112.09 |
| சிங்கப்பூர் டொலர் | 84.38 | 86.94 |
| ஜப்பான் யென் | 1.31 | 1.35 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.45 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 30.17 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

# வர்த்தக செய்தித் துளிகள்

## கச்சா எண்ணெய் விலை குறைவு

கடந்த 2 ஆண்டுகளாக,ஏறுமுகத்தில் இருந்த கச்சா எண்ணெய் விலை தற்போது சிறிதளவு குறைந்துள்ளது.நியூயோர்க்கின் மெயின் கண்ராக்ட்படி,லைட் ஸ்வீட் குரூட் எண்ணெய் பரல் 38 சென்ட்கள் குறைந்து 89 அமெரிக்க டொலர்களும்,பிரெண்ட் நேர்த் சீ குரூட் ஓயில் 49 சென்ட்கள் குறைந்து பரல் 93.04 அமெரிக்க டொலர்களாவும் கடந்த வியாழனன்று காணப்பட்டது.

சர்வதேச அளவில் கச்சா எண்ணெயின் பயன்பாடு குறைந்துள்ளதன் விளைவாகவே, ஆசிய சந்தையில் கச்சா எண்ணெயின் விலை குறைந்துள்ளது. இதேவேளை அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவில் கடும் குளிர் நிலவிவருவதால் எரிபொருட்களின் தேவை பெருமளவு அதிகரிக்கும் எனக் கருதப்படுவதால் மீண்டும் எண்ணெய் விலை அதிகரிக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## சம்சுங் நிறுவன நிகரலாபம் சரிவு

(சியோல்)

சர்வதேச அளவில்,எலெக்ட்ரானிக்ஸ் உபகரணங்கள் தயாரிப்பில் முன்னணியில் உள்ள சாம்சுங் எலெக்ட்ரானிக்ஸ் நிறுவனம் ஒக்டோபர் முதல் டிசம்பர் மாதம் வரையான காலகட்டத்தில் நிறுவன நிகரலாபம் சரிவடைந்துள்ளதாகத் தெரிவித்துள்ளது.நிறுவனம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக,கடந்த ஆண்டின் முற்பகுதியில் கணனிகள், தொலைக்காட்சி உள்ளிட்டவைகளின் விற்பனை சரிவடைந்துள்ளது. இதற்கு மாறாக, இந்தக் காலகட்டத்தில் மைக்ரோசிப் மற்றும் டிஸ்பிளே பொருட்களின் விற்பனை ஏறுமுகத்தில் இருந்தது.இந்த ஆண்டு, மெமரி சிப்களின் விலை மேலும் 60 சதவீத அளவிற்கு குறையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. 2011-ம் ஆண்டில் தங்கள் நிறுவனம் மீண்டும் முன்னணி இடத்தைப் பிடிக்கும் என நம்பிக்கை தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஹீரோ ஹோண்டா விற்பனை 33% உயர்வு

முன்னணி இரு சக்கர வாகனங்கள் தயாரிப்பு நிறுவனமான ஹீரோ ஹோண்டா,டிசம்பர் மாதத்தில் 5 இலட்சம் வாகனங்களை விற்பனை செய்துள்ளது.சென்ற ஆண்டில் இந்நிறுவனத்தின் விற்பனை ஒட்டுமொத்த அளவில் 16.4 சதவீதம் உயர்ந்து 50 லட்சத்திற்கு மேலாக அதிகரித்துள்ளது.வாகனங்கள் விற்பனையைப் பொறுத்தவரை 2010-ம் ஆண்டு நிறுவனத்திற்கு மிகச் சிறப்பாக இருந்தது என நிறுவன உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.ஹீரோ ஹோண்டா நிறுவனம் ஜப்பானிய ஹோண்டா மற்றும் இந்தியாவின் ஹீரோ குழுமத்தின் கூட்டுத் திட்டமாக இருந்தது.கூட்டு நிறுவனத்தில் ஹோண்டா கொண்டிருந்த பங்குகளை ஹீரோ குழுமமே வாங்கிக் கொண்டதையடுத்து கூட்டுத் திட்டம் சமீபத்தில் முடிவுக்கு வந்தமை குறிப்பிடத்தக்கது.

## பஜாஜ் விற்பனை 10% உயர்வு

பஜாஜ் நிறுவனத்தின் விற்பனை கடந்த டிசம்பரில் 10 சதவீதம் அதிகரித்துள்ளது.மோட்டார் பைக் மற்றும் ஆட்டோ விற்பனையில் முன்னணியில் உள்ளது பஜாஜ் நிறுவனம். இதன் பிரபல தயாரிப்பான,பல்சர் மற்றும் டிஸ்கவர் மோட்டார் பைக்குகளுக்கு இளைஞர்களிடையே நல்ல வரவேற்பு உள்ளது.இதன் விற்பனை கடந்த டிசம்ரில் 10 சதவீதம் அதிகரித்துள்ளது. மோட்டார் பைக்குகளைப் பொறுத்தவரையில் கடந்த மாதத்தில் 2 லட்சத்து 52 ஆயிரத்து நான்கு விற்பனையாகியுள்ளன.

## இரு துருவங்களாக பிரிந்த மோட்டரோலா

மொபைல்போன் தயாரிப்பில் தனக்கென தனி இடத்தைப் பிடித்துள்ள, அமெரிக்காவை தலைமையிடமாகக் கொண்டு இயங்கிவரும் மோட்டரோலா நிறுவனம், மோட்டரோலா மோபிலிட்டி, மோட்டரோலா சொல்யூசன்ஸ்என்ற இரு பிரிவுகளாக பிரிக்கப்படுவதாகத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நிர்வாக இயக்குநர்களின் ஒப்புதலுக்குப் பிறகுஇரு பிரிவுகளாக பிரிக்கும்முடிவுஎடுக்கப்பட்டது.இதன்படி மோட்டரோலா மோபிலிட்டி பிரிவு மொபைல்போன்கள் மற்றும் செட் டாப் பொக்ஸ் விற்பனையிலும், மோட்டரோலா சொல்யூசன்ஸ் பிரிவு, பொலிஸ் ரேடியோாஸ் மற்றும் பார் கோட் ஸ்கானர்ஸ் வர்த்தகத்திலும் ஈடுபடவுள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# எங்களவனை அடிக்கும் போது பாயாத சட்டம் சிங்களவனை அடிப்பேன் என்ற போது பாய்கிறதே

ஈழத்து நிகழ்வுகளை நெஞ்சு தகிக்கச் சொல்லும் 'ஆணிவேர்' படத்தின் படப்பிடிப்பு நடந்த நேரம்... 'தன் பிள்ளைகளைப் பறிகொடுத்த தாயின் கண்ணீரை அப்படியே பதிவாக்கினால் ஈழக் கோரத்தை எல்லோருக்கும் புரிய வைக்க முடியும்!' என இயக்குநர் ஜான் சொல்ல... அப்படி ஒரு தாயை அழைத்து வருகிறார்கள். சிங்கள இராணுவத்தின் கோரப் பசிக்கு தன் குழந்தைகளைப் பறிகொடுத்தவள் அந்தத் தாய்.

"அம்மா, நீங்க அழுவதுபோல் படம் எடுக்க வேண்டும். குழந்தைகள் இறந்ததை மறக்கச் சொல்ல வேண்டிய நாங்களே, அதை நினைத்து உங்களை அழச் சொல்லும் சூழலில் இருக்கிறோம். உங்கள் கண்ணீர் இந்த உலகத்தை நிச்சயம் உலுக்கும்!" என விளக்கிச் சொல்கிறார்கள் படப்பிடிப்புக்



குழுவினர். அவர்கள் சொல்லச் சொல்ல.... வெறித்துப்போய் பார்த்த அந்தத்தாய் ஒரு கட்டத்தில் கதறத் தொடங்கினாள். ஆனால், அவள் கண்களில் இருந்து ஒரு சொட்டு நீர் கூட வரவில்லை.

"அழுது அழுது கண்ணீரே வத்திப்போச்சுப்பா... எத்தனை வருடத்துக்குத்தான் எங்களால் அழ முடியும்? நான் மட்டும் இல்லை... எங்கட சனங்கள் எல்லோருடைய கண்ணிலையும் கண்ணீரே இல்லப்பா... இனி பறிகொடுத்து அழறதுக்கு எங்ககிட்ட எதுவுமே இல்லைப்பா...!" என அவர் சொல்ல மொத்தக் குழுவுக்கும் கண்ணீர் கோத்துக்கொண்டது.

கண்ணீர் சுரப்பியே இயங்காமல் போகிற அளவுக்கு இற்றுத் தவிக்கும் இனமாகிவிட்டதாட தம்பி நம் இனம்.... 'பேசினால் குற்றம்... எழுதினால் எதிர்ப்பு...' என்கிற ஆட்சியில் நம்மால் என்ன செய்ய முடியும் என்கிற தயக்கம் தானடா தம்பி நம்மை முறுக்கேறவிடாமல் தடுக்கிறது. நம் இன விடுதலைக்கான போராட்டம் மட்டும்தான் இன்றைக்கு நடக்கவில்லையே தவிர, தினந்தோறும் ஏராளமான போராட்டங்கள் தமிழகத்தில் நடந்து கொண்டுதான்இருக்கின்றன.

இஸ்லாமிய மக்களுக்கு,தாழ்த்தப்பட்டோருக்கு, உழைக்கும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு,பாட்டாளி வர்க்கத்துக்கு, கிறிஸ்தவ சிறுபான்மை மக்களுக்கு, நலிந்த தொழிலாளர்களுக்கு என பல தரப்பட்ட மக்களின் உரிமைகளுக்கான போராட்டங்கள் தொடர்ந்து நடந்து வருகின்றன. தமிழர் தேசிய இன விடுதலை அடைந்ததால்தான் இதர விடுதலைகளை நாம் அடைய முடியும் என்கிற அடிப்படை உண்மை நமக்குப்புரியவில்லை.


**8 சிறை மீண்ட சீமான் எழுதும் 'திருப்பி அடிப்பேன்' அதிரடி அனல் கனல் தொடர்...**

ஐந்து மகன்கள் வாழும் ஒரு குடும்பத்தின் சொத்து அடமானத்தில் இருக்கிறது. 'எனக்கு இவ்வளவு' என ஐந்து பேரும் அடித்துக் கொள்கிறார். அடமானத்தில் இருக்கும் நிலத்தை மீட்டால் தானே பங்குபோட முடியும் என்கிற உண்மை ஒருவருக்கும் புரியவில்லை. அதேபோல் தமிழகத்தின் நிலையும்!

ஈழப் போர் இத்தனை துயரமான முடிபுக்கு வந்த போதும்- முள்வேலி முகாமில் தமிழ் மக்கள் முடக்கப்பட்ட போதும்- ஆயிரக்கணக்கான போராளிகள் சிறுகச் சிறுகச் சிதைக்கப்பட்ட போதும் நாம் அமைதியாக இருந்தது ஏன் தெரியுமா? இனத்தின் மீதான தலையாயப் பற்றுத் தளர்ந்து போனதும், நம்மால் எதுவும் முடியும் என்கிற தன்மானப் பற்று உலர்ந்து போனதும்தான்!

ஈழப் போர் உக்கிரமாகி, இரத்தமும் சதையுமாக ஆயிரமாயிரம் பேர் செத்து வீழ்ந்தபோதும், 'முதல்வர் என்கிற பதவியை வைத்து ஒன்றும் செய்ய முடியாது!' என சப்பைக்கட்டுகட்டினார்களே... தலைவனும் இல்லையா?

ஈழத்துப் போரின்இன்னல் பொறுக்காமல் துடித்து வெடித்த இந்தத் தொப் புள்கொடி உறவுகளுக்கு தமிழ கத்தை ஆளும் தி.மு.க. அரசு துணையாக நிற்காதது வரலாற்றுத் துயரம். அவர்களே இனத்தின் போராட்டத்துக்கு வினையாக நின்றது வரலாற்றுத் துரோகம்!



ஈழத்துக்கு ஆதரவான போராட்டங்கள் பொங்கி வெடித்தபோது, 'மக்களின் உரிமைகளையும் உணர்வுகளையும் மதிக்க வேண்டியவர்கள் நாங்கள். இனியும் தாமதித்தால் தமிழகத்தின் போராட்டங்கள் பன் மடங்காகப் பெருக்கெடுக்கும். அதனால், உடனடியாகப் போரைத் தடுத்து நிறுத்துங்கள்!' என காங்கிரஸ் அரசுக்கு தமிழக அரசு எச்சரிக்கை செய்திருக்க வேண்டும். ஆனால், ஈழத்தில் எத்தனை பேர் செத்தாலும் சரி, இருக்கைக்கு இடைஞ்சல் வந்துவிடக்கூடாது என நினைத்தது தி.மு.க.அரசு.

'எங்களால் என்ன செய்ய முடியும்?' எனக் கேட்டவர்கள் ஏன் எங்களின் போராட்டங்களை முடக்கினார்கள்? தம்பி முத்துக்குமார் தொடர்ந்த இரத்த உறவுகள் உடலையே தீக்குச்சியாக ஏந்திய போதும், அந்த உணர்வு எழுச்சியை எந்த உள்நோக்கத்துக்காக அடக்கினார்கள்? முத்துக்

மீதான பழியைத் தாங்கமுடியாமல் இன்றைக்கும் பரப்புரை செய்கிறீர்களே... காங்கிரஸ் அரசின் உச்சந் தலையை உலுக்கி இருக்க உங்களால் நிச்சயம் முடிந்திருக்கும்! அன்றைய நிலையில் காங்கிரஸ் அரசைத் தாங்கிப்பிடிக்கும் சக்தியாக இருந்தது இந்தத் தாய்த் தமிழகம்தான். நாடாளுமன்ற உறுப்பினர்கள் 40 பேரும் அன்றைக்கு காங்கிரஸ் அரசுக்காக ஆதரவை விலக்கி இருந்தால், காங்கிரஸ் அரசு நிச்சயமாக கவிழ்ந்து இருக்கும். 'இந்திய அரசு கவிழ்ந்தது ஏன்?' என்கிற கேள்வி உலகையே உலுக்கி இருக்கும். உலக ஊடகங்களை ஒரே கணத்தில் தமிழர்கள் பக்கம் திரும்பி இருக்கும். அன்றைய தினத்திலேயே ஈழப் பிரச்சினை உலக அரசியலாக மாறி இருக்கும். சொந்த இனத்தின் பிரச்சினையை சர்வதேச அரசியலாக மாற்றக் கிடைத்த வரலாற்று வாய்ப்பை... கண்முன்னாலேயே

## தமிழர் பிரச்சினையை உலக அரசியலாக்கும் வரலாற்று வாய்ப்பை தி.மு.க. தொலைத்தது

ஒன்றும் செய்ய முடியாதப் பதவியைத் தக்க வைக்கத்தானே இன்றைக்கு கூட்டணியையும் தங்கள் பாதுகாப்பையும் தக்க வைத்துக் கொள்ள அல்லாடுகிறார்கள்? இடையில், 'நாங்கள் தலையிட்டு இருந்தால் போர் நின்று இருக்குமா?' என்கிற துப்பற்ற கேள்வி வேறு... 'நம்மால் செய்திருக்க முடியும்!' என்பதற்கான பட்டியலை இவர்கள் முன்னால் இப்போது வைக்கிறேன். துப்பற்ற கேள்வியைத் துப்பியவர்களால் என் கேள்விக்கு பதில் சொல்ல முடியுமா?

சந்திரசேகரராவ் என்கிற ஒற்றைத் தலைவனின் உண்ணாவிரதம் ஆந்திராவையும் தாண்டி, இந்தியாவை ஆளும் காங்கிரஸின் தலையில் ஆணி அடித்ததே... அவர் கிளப்பிய தனித் தெலுங்கானா கோரிக்கையைத் தணிக்க முடியாமல் மத்திய -மாநில அரசுக்ள் ஸ்தம் பித்து நின்றனவே... மா நிலப் பிரிவுக்கே அந்த அளவுக் குப் போராடிய ஒரு தலை வனைப்போல், இனத்தின் விடி வுக்குப் போராட இங்கே ஒரு

குமாரின் இறுதி ஊர்வலத்தில் திரண்ட மாணவர் கூட்டத்தைப் பார்த்து, அத்தனை கல்லூரிகளுக்கும் விடுதிகளுக்கும் விடுமுறை அறிவித்து மாணவ ஒருங்கிணைப்பை மட்டுப்படுத்திய மர்மம் என்ன? முத்துக்குமாரைத் தொடர்ந்து தங்கள் இன்னுயிரை ஈழத்துக்காக எரியூட்டிய வீரக்கொழுந்துகளைக் குடிகாரர்கள் என்றும் குடும்பப் பிரச்சினை என்றும் சொல்லி, இழவு வீட்டையும் இழிவுபுடுத்தியது எதற்காக? கொதிப்பு அடங்காமல் குவிந்த வழக்கறிஞர்கள் மீது பொலிஸ் அதிகாரிகளை வைத்தே கண்மூடித்தாக்குதல் நடத்தியது. எதற்காக? ஈழம் குறித்த செய்திகளோ படங்களோ எதிலும் வந்துவிடாதபடி தடுத்து ஊடக சர்வாதிகாரம் செய்தது யாருடைய உறுதுணைக்காக?'எங்களால் என்ன செய்ய முடியும்?' எனக் கேட்டுக் கொண்டே எங்களுக்கு எதிராக எல்லாமும் செய்தவர்கள்தானே நீங்கள்? 'நாங் கள் கூட்டணியில் இருந்து விலகி இருந்தால் மட்டும் என்ன நடந்திருக்கும்?' என உங்கள்

தொலைத்தீர்களே... அந்தத்துரோகம் யாரை ஐயா சேரும்? 'நானே அடிமை' என உதடு துடிக்கச் சொன்னீர்களே... ஒரு அடிமை ஐந்து முறை நாடாண்ட அதிசயம் எப்படி ஐயா நடந்தது? மன்னிக்கவே முடியாத வரலாற்றுத் துரோகத்தை செய்துவிட்டு, 'என்னால் முடிந்தது இவ்வளவுதான்... நான் ஈழப்பிரச்சினைக்காக இரண்டு முறை பதவியை இழந்தவன்!' என உதடு பிதுக்கிச் சொல்கிறீர்களே... ஈழத்திற்காக முதல் முறை பதவி இழந்த உங்களை மறுபடியும் பதவியில் அமர்த்தியது யாராம்? அந்த இன்னொரு வாய்ப்பை உங்களுக்கு வழங்கியது எங்களின் தன்மானத் தமிழர்கள் தானே... நீங்கள் நகத்தை இழந்தால் விரலையே இழக்கத் தயாராக இருந்த தமிழ் மக்களை நம்பாமல் போனது ஏன்? இனமானம் இழந்து-தன்மானம் தளர்ந்து இன்னமும் நீங்கள் பாடும் இயலாமைப்பாட்டை கேட்க நாங்கள் ஒன்றும் கிளிப்பேச்சு கேட்பவர்கள் அல்ல... புலிப்பேச்சு கேட்பவர்கள்! (தொடரும்)

# பாகிஸ்தானில் அணு ஆயுதங்களை தீவிரவாதிகள் கைப்பற்றும் அபாயம்

## அமெரிக்கா எச்சரிக்கை

பாகிஸ்தானில் அணு ஆயுதங்களை தீவிரவாதிகள் கைப்பற்றும் அபாயம் இருப்பதாக அமெரிக்கா எச்சரிக்கை விடுத்துள்ளது.

பாகிஸ்தானில் உள்ள பஞ்சாப் மாகாண ஆளுநராக இருந்த சல்மான் தசீர் தனது பாதுகாவலரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இது அமெரிக்காவை அச்சத்தில் ஆழ்த்தியுள்ளது. ஏனெனில் தீவிரவாதிகளின் தூண்டுதலின் பேரில் இது நடந்திருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

பாகிஸ்தானின் அணு ஆயுதக் கிடங்கு இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் உள்ளது. இதன்மூலம் அணு ஆயுதக் கிடங்கு தீவிரவாதிகளின் கையில் கிடைக்காது என்ற நம்பிக்கை இருந்து வந்தது.

தற்போது ஆளுநர் சுட்டுக்கொல்லப்பட்டதன் மூலம் பாதுகாப்புத் துறையிலும் தீவிரவாதிகளின் ஊடுருவல் இருப்பதாக அமெரிக்க சந்தேகப்படுகிறது.

பாகிஸ்தானில் அணு ஆயுத உற்பத்தி தொழிற்சாலைகளில் 70 ஆயிரம் பேர் ஈடுபட்டுள்ளனர்.

அவர்களில் 7 ஆயிரம் முதல் 8 ஆயிரம் பேர் அணு விஞ்ஞானிகள். இவர்களில் 2 ஆயிரம் பேர் அணு விஞ்ஞானத்தில் திறமை பெற்றவர்கள். அணு ஆயுத உற்பத்தியில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களில் தீவிரவாதிகளும் இருக்கலாம்.

அவர்கள் மூலம் அணு ஆயுதங்களைப் கைப்பற்ற தீவிரவாதிகள் திட்டமிட்டிருக்கலாம். ஆயுதங்கள் மட்டுமன்றி அவற்றைத் தயாரிக்க பயன்படுத்தும் பொருட்கள் மற்றும் தொழில்நுட்பங்கள் தீவிரவாதிகளுக்கு கைமாற்றம் செய்யப்படலாம் என்றும் அமெரிக்க அதிகாரிகள் சந்தேகப்படுகின்றனர்.

இதே கருத்தை பாகிஸ்தானில் பணி புரிந்த அமெரிக்க முன்னாள் தூதர் ஆன்னி பாட்டர்சன் கடந்த 2009 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் வெளியிட்டுள் ளார்.

இத் தகவல் விக்கி லீக்ஸ் இணையத்தளம் வெளியிட்டுள்ள இரகசிய ஆவணங்களில் கூறப்பட்டுள்ளது.

எனவே, தீவிரவாதிகளை ஒழிப்பதில் பாகிஸ்தான் தீவிரமாக ஈடுபடவேண்டும் என அமெரிக்கா வலியுறுத்தி உள்ளது. இதுகுறித்து அமெரிக்காவில் உள்ள பாகிஸ்தான் தூதர் உசேன் ஹக்கானி, வெளியுறவுத் துறை மந்திரி ஹிலாரி கிளின்டனுடன் ஆலோசனை நடத்தியுள்ளார். (ஸ்ரீ-4)

# வழுக்கைப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு

## ஆராய்ச்சியாளர்கள் தகவல்

நீண்டகாலமாக தீர்வு காணப்படாத பிரச்சினைகளில் ஒன்று வழுக்கை தலை. உலகம் முழுவதும் இதன்ஆதிக்கம் அதிகம். வழுக்கையால் சிலருக்கு வாழ்க்கையே சூனியமாகி விடுவதுண்டு.

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண பணத்தை தண்ணீராக செலவழிப்பவர்களும் உண்டு. இனி வழுக்கையாளர்கள் வருத்தப்படத் தேவையில்லை. அவர்களின் பிரச்சினைகளைத் தீர்க்கவே பெரும் ஆராய்ச்சி ஒன்று மேற்கொள்ளப்பட்டது. வழுக்கை தலையில் முடிவளரச் செய்ய முடியும் என்று கிடைத்த ஆய்வு முடிவு கோடான கோடி ஆண்களை மகிழ்ச்சியடைய வைத்துள்ளது.

இது தொடர்பாக ஆராய்ச்சியாளர்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

பெரும்பாலும் தீர்வு காணப்படாத வழுக்கைப் பிரச்சினைக்கு தற்போதைய ஆய்வு நிரந்தரத் தீர்வு காணவழிவகுத்துள்ளது. இந்த முயற்சி வெற்றியும் பெற்றுள்ளது. தலையில் உள்ள பாலிக்கிள் செல்களை உசுப்பிவிட்டால் வழுக்கையில் மீண்டும் இயற்கையாகவே முடி முளைப்பது சாத்தியம் என்பதை ஆய்வு உறுதிப்படுத்தி உள்ளது. தலையில் தோலின் அடியில் முடி வளர்வதற்கு காரணமாக ஏராளமான செல்கள் இருக்கின்றன.

இவை ஆரோக்கியம் குறைந்து காணப்படுவதே முடி உதிர்தலுக்கும் மீண்டும் வளராததற்கும் காரணமாகிறது. இதைக் கண்டறிந்து உரிய முறையில் சிகிச்சை அளித்து தூண்டிவிட்டால் செல்கள் மீண்டும் ஆரோக்கியம் பெறும். முடி வளர வகை செய்யும். முடி வளர்வதற்கு ஏதுவாக உள்ள ஜீன்கள் மற்றும் பாலிக்கிள் செல்களைத் தூண்டுவதன் மூலம் இது சாத்தியமாகிறது. ஆராய்ச்சிக்காக எலிகளை வைத்து பரிசோதிக்கப்பட்டதில் இந்த முறையில் முடி வளரச் செய்வது சாத்தியம் என்பது உறுதிப் படுத்தப்பட்டுள்ளது.

அடுத்த கட்டமாக மனிதர்களிடமும் இத்தகைய பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வெற்றி கிடைத்துள்ளது. இறுதிக்கட்ட ஒப்புதலுக்கு காத்திருக்கும் இந்தப்புதிய முறையில் உலகம் முழுவதும் வழுக்கை தலைக்கு எளிதில் தீர்வு கிடைக்கும் என்பது உறுதி என்கின்றனர் ஆராய்ச்சியாளர்கள். (ஸ்ரீ-4)

# அமெரிக்க ஆதிக்கத்தை தடுக்க சீன போர்க் கப்பல்கள் தயார்நிலையில்

(பீஜிங்)

சீனக் கடல் பகுதியில் அமெரிக்கக் கடற்படைகளின் ஆதிக்கம் அதிக ரித்து வருவதைத் தடுக்க, சீனா தனது கடற்படையில் இரண்டு ரோந்துக் கப்பல்களை நேற்று முன்தினம் சேர்த்துள்ளது.

சீனக் கடற்பகுதியில் உள்ள சில தீவுகளின் சொந்தம் குறித்து சீனா, ஜப்பான் மற்றும் அண்டை நாடுகள் மத்தியில் பிரச்சினை நிலவி வருகிறது.

மேலும், ஜப்பானுக்கு உதவும் போக்கில், சீனக் கடற்பகுதியில் அமெரிக்கப் போர்க் கப்பல்களின் ரோந்து அதிகரித்துள் ளது. இந்த இரண்டு பிரச்சினைகளையும் சமாளிக்கும் வகையில், இரண்டு பெரிய ரோந் துக் கப்பல்களை தனது கடற்படையில் சீனா நேற்று முன்தினம் சேர்த்துள்ளது.

மொத்தம் ஆயிரம் மற்றும் ஆயிரத்து 500 தொன் எடை தாங்கும் திறன் கொண்ட இக் கப்பல்கள், சீனக் கடற்பகுதியின் வடபகுதியில் ரோந்து வருவதற்காக பயன்படுத்தப்படவுள்ளன.

இப்பகுதியின் கண்காணிப்புக்காக சீனா, 13 ரோந்துக் கப்பல்களை கடற்படையில் சேர்க்கத் திட்டமிட்டிருந்தது. கடந்த 2005 இல் இத் தொகுப்பில் ஆறு ரோந்துக் கப்பல்கள் தயாரிக்கப்பட்டு கடற்படையில் சேர்க்கப்பட்டன. இந்நிலையில், அடுத்த மூன்று கப்பல்கள் தயாராகியுள்ளன. இந்தாண்டு ஜூன் மாதத்துக்குள் மீதி நான்கு கப்பல்கள் தயாராகி விடும். (ஸ்ரீ-2)




# ஐவரிக்கோஸ்ட்டுக்கு இராணுவத்தை அனுப்ப அமெரிக்கா நடவடிக்கை

(அபிட்ஜான்)

பிரிட்டன் மற்றும் கனடா நாடுகள், ஐவரி கோஸ்ட் ஜனாதிபதி போக்போவால் நியமிக்கப்பட்ட தூதர்களை வெளியேற்றியுள்ளார் பேக்போ.



அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் உள்ள ஐ.நா. தலைமை செயலகக் கட்டடம் முற்றிலும் குண்டு துளைக்காத வகையில் நவீன முறையில் புனரமைக்கப்படவுள்ளது. இதையொட்டி கட்டுமானப் பணிகள் தீவிரமடைந்து வருகின்றன.

அவர் மீதான பிடியை மேலும் இறுக்கும் வகையில், பேக்போவுடன் அமெரிக்கர்கள் எவ்வித வர்த்தகத் தொடர்பும் வைத்துக் கொள்ளக்கூடாது என்று அமெரிக்கா தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

இந்தநிலையில் ஐவரி கோஸ்ட்டுக்கள் இராணுவத்தை அனுப்புவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன், கனடா, ஆபிரிக்க யூனியன், மேற்கு ஆபிரிக்க பொருளாதாரக்குழு(எக்கோவாஸ்) ஆகிய அனைத்தும் ஐவரி பேக்போ ஜனாதிபதியாக அலசான் வட்டாராவை ஏற்றுக்கொண்டுள்ளன. லாரன் பேக்போ பதவியிறங்க வேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றன.

கடந்தாண்டு டிசம்பர் 29ஆம்திகதி கனடாவும் 30 ஆம் திகதி பிரிட்டனும், பேக்போவால் நியமிக்கப்பட்ட தூதர்களை எற்றுக் கொள்ள முடியாது என்று திருப்பி அனுப்பி விட்டன.

இதற்கு பதிலடி கொடுக்கும் விதமாக, ஐவரி கோஸ்டுக்கான அந்நாட்டுத் தூதர்களைத் திருப்பி அனுப்பியுள்ளார் பேக்போ. இதற்கான அறிக்கை நேற்று முன்தினம் வெளியிடப்பட்டது.


ஆனால், பிரிட்டனும் கனடாவும் பேக்போவின் அறிவிப்பை மறுத்து, வட்டாராவின் தூதர்களை மட்டும் ஏற்றுக்கொள்வோம் என்று தெரிவித்துவிட்டன.

இதையடுத்து, பேக்போவுக்கு மேலும் நெருக்கடி கொடுக்கும் வகையில், அவர் மற்றும் அவரது மனைவி சிமோன் மற்றும் பேக்போ அரசின் வெளியுறவு அமைச்சர் அல்சைட் ஜெட்ஜே உள்ளிட்ட மூன்று முக்கிய பிரமுகர்கள் ஆகியோருடன் அமெரிக்கர்கள் எவ்வித வர்த்தக தொடர்பையும் மேற்கொள்ளக்கூடாது என்று அமெரிக்க கருவூலத்துறை தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

இதற்கிடையில், பேக்போவின் பிடிவாதம் மேலும் மேலும் அதிகரித்துக் கொண்டே செல்வதால் அவரை இராணுவப் படையெடுப்பின் மூலம் பதவி இறக்குவதற்கான நடவடிக்கைகளில் "எக்கோவாஸ்" இறங்கியுள்ளது.

ஐ.நா.பாதுகாப்பு சபையின் கோரிக்கையின்படி, ஐவரி கோஸ்டில் அமைதி நடவடிக்கையில் ஈடுபடுவதற்காக மேலும் இரண்டாயிரம் வீரர்களை ஐ.நா. அனுப்பி வைக்க உள்ளது.

" ஐவரி கோஸ்ட் மீது நடத்தப்படும் இராணுவப் படையெடுப்பு, மக்களுக்கு எதிரானது அல்ல. ஆபிரிக்கா மற்றும் தென் அமெரிக்காவில் மக்களால் வெறுக்கப்படும் தலைவர்களை அகற்றுவதற்கு இதுபோன்ற இராணுவ உதவிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன என வட்டாரா விளக்கம் அளித்துள்ளார். (ஸ்ரீ-2)





யாழ்: வைத்தீஸ்வரா சிவன்கோவில் பஜனைக் குழுவின் வருடாந்த மார்கழி பஜனை அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சமூகத்திலகம் செல்வராஜாவுக்கு ஆலயத்தின் கணக்காளர் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதையும் சிவன் கோவில் தர்மகர்த்தா க.வைத்திலிங்கச் செட்டியார் மற்றும் பஜனையில் பங்குபற்றிய மாணவர்களையும் படங்களில் காணலாம்.

# 336 தமிழ் பொலிஸ் கான்ஸ்டபிள்கள் பயிற்சியை முடித்து வெளியேறினர்

(கொழும்பு)

நீண்டகாலத்தின் பின்னர் 18 பெண்கள் உட்பட 336 தமிழ் பொலிஸ் கான்ஸ்டபிள்கள் களுத்துறை பொலிஸ் பயிற்சிக் கலாசாலையில் பயிற்சியை முடித்துக் கொண்டு வெளியேறும் வைபவம் நேற்று முன்தினம் கோலாகலமாக இடம்பெற்றது.

வைபவம் ஆரம்பமாவதற்கு முன்னர் பொலிஸ் வாத்தியக் குழுவினரின் பான்ட் வாத்திய நிகழ்ச்சி இடம்பெற்றது. இங்கு பிரபல தமிழ் சினிமாப் பாடலான "நாளை நமதே" என்ற பாடலும் இசைக்கப்பட்டது.

"நாளை நமதே இந்த நாடும் நமதே..." இந்தப் பாடலை களுத்துறைப் பொலிஸ் பயிற்சிக்கலாசாலையின் வாத்தியக் குழுவினர் இசைத்த போது பயிற்சியை முடித்துக் கொண்ட 336 தமிழ் பொலிஸ் கான்ஸ்டபிள்கள் புளகாங்கிதம் அடைந்து காணப்பட்டனர்.

வடக்கு, கிழக்கிலிருந்து பொலிஸ் சேவைக்கு இணைத்துக்கொள்ளப்பட்டோர் பயிற்சியை முடித்துக்கொண்டு வெளியேறும் நிகழ்வில் பொலிஸ்மா அதிபர் கலாநிதி மகிந்த பாலசூரிய கலந்துகொண்டு உரையாற்றும் போது பொலிஸ் வரலாற்றில் முதற் தடவையாக வடக்கு, கிழக்கில் இருந்து பொலிஸ் சேவைக்கு தெரிவுசெய்யப்பட்டு அதிகளவானோர் ஒரே தடவையில் வெளியேறும் சந்தர்ப்பம் உருவாகும்.

வடக்கு , கிழக்கிலுள்ள பொலிஸ் நிலையங்களில் தமிழ் மொழிமூலம் முறைப்பாடு செய்யப்படமுடியாமை உட்பட மொழி ரீதியான சில பிரச்சினைகளைத் தீர்க்கும் பொருட்டே அப்பிரதேசங்களிலிருந்து தமிழ் மொழி பேசும் 18 பெண்கள் உட்பட 336 பேர் பொலிஸ் சேவைக்கு இணைத்துக்கொள்ளப்பட்டனர்.

எதிர்காலத்தில் மேலும் பலர் இணைத்துக்கொள்ளப்படுவர். தாய்நாட்டுக்காக சேவையாற்றுவதற்கு தங்கள் பிள்ளைகளை இங்கு அனுப்பிவைத்தமைக்கு நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன் என்றார். (ஸ்ரீ-4)

## பழைய மாணவர் சங்க அங்குரார்ப்பண கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கோப்பாய் மகா வித்தியாலய பழைய மாணவர்சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் எஸ்.எஸ்.புஸ்பராசா தலைமையில் நடைபெறும்.

இக்கூட்டத்திற்கு சம்பந்தப்பட்ட அனைவரையும் தவறாது சமுகம் தருமாறு அதிபர் கேட்டுள்ளார். (ஸ்ரீ-2)

## கணனிப் பயிற்சிநெறி

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வி வலய முறைசாராக் கல்விப் பிரிவினரால் புதிய கணனிப் பயிற்சி யாழ். முத்துத்தம்பி மகாவித்தியாலயத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இப்பயிற்சி நெறியில் இணைய விரும்புவோர் எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்பு பாடசாலை அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு இப் பாடசாலையின் அதிபர் கேட்டுள்ளார். (ஸ்ரீ-4)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கோப்பாய் மகாவித்தியாலயத்தின் பாடசாலை அபிவிருத்திச் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் எஸ்.எஸ்.புஸ்பராசா தலைமையில் நடைபெறும்.

இக் கூட்டத்திற்கு சகல உறுப்பினர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு அதிபர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞரை விடுவிப்பதாக கூறி பணம் பெற்றோர் கைது

(கொழும்பு)

கொழும்பில் பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் இளைஞர் ஒருவரை விடுதலை செய்து தருவதாகக் கூறி, அந்த இளைஞனின் உறவினர்களிடம் 10 இலட்சம் ரூபா பணத்தை பெற்றுக்கொண்ட இரண்டு பேரை வவுனியா பொலிஸார் கைது செய்துள்ளனர்.

10 இலட்சத்தை பெற்றுக்கொண்ட பின்னரும்,பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இளைஞர் விடுதலை செய்யப்படாததால், அவரின் உறவினர்கள் தம்மிடம் பணத்தைப் பெற்றுக்கொண்ட நபர்கள் குறித்து வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர்.

எனினும் அவ்வாறு எவரும் பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டிருக்கவில்லை எனவும் சந்தேக நபர்கள் இளைஞனின் குடும்பத்தினரை ஏமாற்றி பணத்தைப் பெற்றுக் கொண்டுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சந்தேக நபர்கள் வவுனி யாப் பிரதேசத்தில் இருக்கும் முக்கியமான மோசடியாளர்கள் என்பது விசாரணைகளில் தெரியவந்திருப்பதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (ஸ்ரீ-4)




## யாழ்.மாநகரசபையின் தீயணைப்பு பிரிவு மேம்படுத்தப்படுமா?

யாழ்.கன்னாதிட்டியில் உள்ள பிரபல தனியார் கல்வி நிறுவனமான "சயன்ஸ் ஹோலுக்கு" அண்மையில் விசமிகளால் தீ மூட்டப்பட்டிருந்தது.

அங்கு ஏற்பட்ட நிலைமையை சீர்ப்படுத்த யாழ்.மாநகரசபை ஊழியர்கள் துரிதமாகச் செயற்பட்டு தீயை அணைத்தனர். இவர்களது பணிபோற்றத் தக்கது.

இது இவ்வாறு இருக்கையில் யாழ்.மாநகரசபைக்கு என சிறந்த நிலையிலுள்ள தீயணைப்பு வாகனம் இல்லை என்பது வேதனை தரும் விடயமாகும்.

மேலும் மாநகர சபையினால் தற்போது பயன்படுத்தப்பட்டு வரும் தீயணைப்பு வாகனம் கடந்த காலங்களில் கனேடிய அரசாங்கத்தினால் 1986 ஆம் ஆண்டு வழங்கப்பட்டது. தற்போது இத் தீயணைப்பு வாகனம் 25 வருடங்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

இதன் இரண்டு நீர்ப்பம்பிகளில் ஒன்று செயலிழந்துள்ளது.

திடீரென ஏற்படுவது தான் விபத்து எதிர்பார்த்து வருவதல்ல. யாழ். மாவட்டத்தில் இரு இடங்களில் ஒரே நேரத்தில் தீ பற்றிவிடின், ஒரு தீயணைப்பு வாகனத்தை சேவையில் ஈடுபடுத்துவதால் தீயினை அணைக்க முடியாது.

இம் மாநகரசபை தீயணைப்பு ஊழியர்கள் தம் உயிர்களைத் தியாகம் செய்து இவ் வேலையில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஆனால் அவர்கள் தீயணைப்புப் பிரிவுக்குரிய அங்கிகள் எதுவும் அணியாது நிற்பதை காணமுடிந்தது.

இத்தனை வருடங்களாக இவ் ஊழியர்களுக்கான உடையினை பெற்றுக்கொடுப்பதில் என்ன சிக்கல் என்பதே புரியாத புதிராக உள்ளது.

25 வருடங்களுக்கு மேல் சேவை வழங்கும் இத் தீயணைப்புப் பிரிவினர்க்கான உடைகள் ஏன் இதுவரைகாலமும் வழங்கப்படவில்லை.

இவை அத்தனைக்கும் ஒரே வார்த்தையில் பதில் கூறிவிட முடியாவிடினும், "கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும்" என்பதுபோல் இதற்கு சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை மேற்கொள்வதால் யாழ்.மாவட்ட தீயணைப்பு பிரிவினரை மேம்படுத்த முடியும்.

எனவே, இதனோடு தொடர்புடையவர்கள் இத் தீயணைப்புப் பிரிவினருக்கான ஒழுங்குகளை மேற்கொள்வார்களா? என்பதே எமது கோரிக்கையாகும்.

ஜனகன், யாழ்ப்பாணம்

## வலிகாமம் வலய விசேட கல்வி அலகில்

# இவ்வருடம் மாற்றுவலுவுள்ள மாணவர்கள் இணைப்பு

வலிகாமம் கல்வி வலய விசேட கல்வி அலகில் இந்த வருடமும் மாற்றுவலுவுள்ள விசேட தேவையுள்ள மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

யா/இராமநாதன் கல்லூரியில் இயங்கி வரும் மேற்படி விசேடகல்வி அலகில் பாடசாலை செல்லும் வயதுக்குட்பட்டவர்கள் இணைக்கப்பட்டு அவர்களுக்கான கற்றல் உதவிகளும் அடிப்படை பயிற்சிகளும் வழங்கப்பட்டு வருவதுடன் தேர்ச்சி பெற்றதும் சாதாரண அரச பாடசாலைகளில் அவர்களை அனுமதிப்பதற்கும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேற்படி விசேட கல்வி அலகில் அனுமதிப்பதற்கான விண்ணப்பங்களை பெற்று எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு விசேடகல்வி ஆசிரிய ஆலோசகர் நி.முருகானந்தன் கேட்டுக்கொண்டுள்ளார்.

விசேட தேவையுள்ள மாணவர்களின் அறிவு, திறன், மனப்பாங்குகளை விருத்தி செய்து அவர்களின் எதிர்கால வாழ்வு ஒளிமயமாக அமைவதற்கும் சமூகத்தில் அவர்கள் உரிய அங்கீகாரத்தை பெறவும் பெற்றோர்கள் உதவிட வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார். (ஸ்ரீ)

# இந்தியா -பாகிஸ்தான் வெளியுறவு செயலர்கள் பூட்டானில் சந்திப்பு



(இஸ்லாமாபாத்) இந்தியா மற்றும் பாகிஸ்தான் வெளியுறவுத்துறைச் செயலர்கள் அடுத்தமாதம் பூட்டானில் சந்தித்துப் பேசவுள்ளனர்.

பூட்டானின் தலைநகர் திம்புவில் அடுத்த மாதம் சார்க் அமைப்பின் அமைச்சர்கள் கூட்டம் நடைபெறவுள்ளது.

அப்போது இருநாட்டு வெளியுறவுச் செயலர்களும் சந்தித்துப் பேச முடிவுசெய்யப் பட்டுள்ளதாக பாகிஸ்தான் அரசு வட்டாரத் தகவல்கள் கூறுகின்றன. வெளியுறவுச் செயலர்களின் சந்திப்புக்குப் பின்னர் பாகிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சர் ஷா மஹ்மூத் குரேஷி இந்தியா வருவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஸ்ரீ)

# பாகிஸ்தானுக்கு கிருஷ்ணா மறைமுக எச்சரிக்கை



(புதுடில்லி) இந்தியாவுக்கு எதிரான எல்லைதாண்டிய பயங்கரவாதத்தை பாகிஸ்தான் தடுத்து நிறுத்தாவிட்டால், அந்நாட்டுக்கு எதிராக அரசியல் மற்றும் பொருளாதார ஆயுதங்கள் பயன்படுத்தப்படும் என்று இந்திய மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் கிருஷ்ணா தெரிவித்துள்ளார்.

இது குறித்து, எஸ்.எம்.கிருஷ்ணா செய்தியாளர்களிடம் கூறியதாவது, பாகிஸ்தானுடனான அனைத்துப் பிரச்சினைகளையும் அமைதிப் பேச்சுவார்த்தைகளின் மூலம் தீர்வு காண, இந்தியா தயாராகவுள்ளது.


அதற்கு முதற்படியாக, இந்தியாவுக்கு எதிரான எல்லைதாண்டிய பயங்கரவாதச் செயல்களில் ஈடுபடும், பயங்கரவாதக் குழுக்களை பாகிஸ்தான் கட்டுப்படுத்த வேண்டும். இதைத்தான் இந்தியா எதிர்பார்க்கிறது.

இதற்கு மாறாக, பயங்கரவாதிகளைக் கட்டுப்படுத்துவதாக வாக்குறுதி மட்டும் அளித்து வருவதில் எந்தப் பயனும் ஏற்படப் போவதில்லை.

மேலும், மும்பைத் தாக்குதலுக்கு உரிய நீதி கிடைக்கவேண்டும்.

அத்தாக்குதலில் ஈடுபட்ட பயங்கர வாதிகள் மீது உரிய நடவடிக்கைகளை பாகிஸ்தான் மேற்கொள்ளவேண்டும். இந்நிலை தொடர்ந்தால், அரசியல் மற்றும் பொருளாதார ஆயுதங்களை இந்தியா பயன்படுத்தும். இவ்வாறு கிருஷ்ணா கூறினார். (ஸ்ரீ)

# தெலுங்கானா பகுதியில் வன்முறை; மாணவர்கள் மீது பொலிஸார் தடியடி



(ஐதராபாத்) ஆந்திராவை பிரிக் கக் கூடாது என்று நீதிபதி ஸ்ரீகிருஷ்ணா தனது அறிக்கையில் தெரிவித்திருந்தார்.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்தும், தனி தெலுங்கானா மாநிலம் வேண்டும் என்று வலியுறுத்தியும் தெலுங்கானாப் பகுதியில் வன்முறை வெடித்தது.

அதன் தொடர்ச்சியாக உஸ்மானியா பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று முன்தினம் கடையடைப்பு நடத்த அழைப்பு விடுத்தனர்.

இதையடுத்து தெலுங்கானா பகுதி முழுவதும் துணை இராணுவத்தினர், பொலிஸார் குவிக் கப்பட்டனர்.

ஆயிரக்கணக்கான மாணவர்கள் பல்கலையில் இருந்து வித்யா நகர் நோக்கி ஊர்வலம் புறப்பட்டனர். அவர்களைப் பாதுகாப்பு வீரர்கள் தடுத்தபோது மோதல் நடந்தது. வீரர்கள் மீது கல்வீச்சு நடந்தது. அத்துடன் அரசு பஸ்களையும் தீவைத்து எரித்தனர். ஸ்ரீகிருஷ்ணா அறிக்கையை கண்டித்து கோஷமெழுப்பினர். நிலைமை கட்டுக் கடங்காமல் போனதால், பொலிஸார் தடியடி நடத்தி மாணவர்களை கலைத்தனர். கண்ணீர்ப்புகை குண்டுகளையும் வீசி கும்பலைக் கலைத்தனர்.

இதுகுறித்து டி.ஜி.பி. அரவிந்தராவ் கூறுகையில், ''நிலைமை பதற்றமாக உள்ளது. எனினும் கட்டுப்பாட்டுக்குள்தான் உள்ளது.

உஸ்மானியாப் பல்கலை மாண வர்கள் மீது பொலிஸார் துப்பாக்கிச்சூடு நடத்தியதாக சமூக விரோதிகள் சிலர் எஸ்.எம். எஸ். இல் வதந்தி பரப்பி வருகின்றனர். துப்பாக்கி சூடு எதுவும் நடக்கவில்லை. கும்ப லைக் கலைக்க கண்ணீர்ப் புகைக் குண்டு தான் வீசப்பட்டது'' என்றார்.

தெலுங்கானாவுக்கு எதிராகச் செயற்படும் ஆந்திரா ஆளுநர் இ.எஸ்.எல். நரசிம்மராவை மத்திய அரசு உடனே வாபஸ் பெற வலியுறுத்தி, தெலுங்கு தேசம் எம்.எல். ஏக்கள் நேற்றுமுன்தினம் ஆளுநர் மாளிகைக்கு வெளியில் தர்ணா போராட்டம் நடத்தினர். வீதி மறியலில் ஈடுபட்டு ஆளும் கட்சிக்கு எதிராக கோஷங்கள் எழுப்பினர். இதையடுத்து 20க்கும் மேற்பட்ட எம்.எல்.ஏக்களை பொலிஸார் கைது செய்து அழைத்துச் சென்றனர்.

தெலுங்கானா பகுதியைச் சேர்ந்த காங்கிரஸ் எம்.பி.க்கள், எம்.எல்.ஏக்கள் கூட்டம் ஐதராபாத்தில் நேற்றுமுன்தினம் நடந்தது. இக்கூட்டத்துக்கு பின் பேட்டியளித்த மாநில அறநிலையத்துறை அமைச்சர் ஜுபாலி கிருஷ்ணாராவ் கூறுகையில், "நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரில் தெலுங்கானா மாநிலம் அமைப்பதற்கான மசோதாவை தாக்கல் செய்யாவிட்டால் எங்கள் பதவிகளை ஒட்டுமொத்தமாக இராஜினாமா செய்ய வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவோம்'' என்றார். (ஸ்ரீ)

# வாழ்க்கையின் வழிகாட்டியாக இருந்து என்னை வழிநடத்தியது திருக்குறள்

## அப்துல்கலாம் தெரிவிப்பு



(இராமேஸ்வரம்) "எனது வாழ்க்கையின் பல்வேறு நிலையில் உறுதுணையாக இருந்து வழிகாட்டியாகத் திகழ்ந்தது திருக்குறள்'' என இந்திய முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாம் தெரிவித்துள்ளார்.

இராமேஸ்வர மண்டப ஒன்றியம் நடுநிலைப்பள்ளிக்கு வந்த அவர் நூலகம், அறிவியல் ஆய்வகம், கணனி அறைகளை திறந்து வைத்தார்.

அவர் அங்கு உரையாற்றுகையில், எனது மனதில் மகிழ்ச்சியான உணர்வு, பூரிப்பை ஏற்படுத்தும் இடம் இராமேஸ்வரம். இப் பள்ளியில் 1937 இல் சேர்ந்து ஆரம்பக் கல்வி முதல் எட்டாவது வரை படித்தேன். உங்களைப் போன்று சிறுவனாக இருந்தபோது மேல்நிலைப் பள்ளிக்கு போக முடியுமா என்ற பயம் மனதில் தோன்றியது. எனது ஆசிரியர் சிவசுப்பிரமணியம் எனக்கு வழிகாட்டியாக இருந்து நல்ல இலட்சியத்தை கற்றுத் தந்த தால்உயர் கல்வி முடித்து விண் வெளி ஆராய்ச்சியில் ஈடுபட் டேன். எனது வாழ்க்கையில் பல்வேறு நிலையில் உறு துணையாக இருந்து வழிகாட்டியாக என்னை வழி நடத்தியது திருக்குறள் தான்.

வாழ்க்கையில் இலட்சியம், அறிவு, கடின உழைப்பு, விடா முயற்சி என நான்கையும் நீங்கள் கடைப்பிடித்தால் எதிர்காலத்தில் மகானாக முடியும். கடந்த 10 ஆண்டுகளில் நாடு முழுவதும் ஒரு கோடிக்கும் மேல் மாணவர்களை சந்தித்துள்ளேன். நாட்டை வளமான வல்லரசாக உருவாக்க வலியுறுத்தி மாணவர்களிடம் பேசியுள்ளேன். அறிவார்ந்த இளைஞர்கள் தங்களது நேரம், அறிவு, ஆற்றலைப் பயன்படுத்தி 2020 க்குள் அனைத்து துறையிலும் நாட்டை முன்னேற்றப் பாதை யில் கொண்டு செல்லமுயற்சிக்க வேண்டும். மனதில் உறுதி இருந்தால் நீங்கள் வெற்றி அடைவீர்கள் என்று தெரிவித்தார். (ஸ்ரீ)

# பாரதச் செய்திகள்

# விஜய் - அஜித் திடீர் சந்திப்பு; அரசியல் பற்றி ஆலோசனை?



நடிகர்கள் விஜய், அஜித் ஆகியோரின் சந்திப்பு புளியந்தோப்பில் உள்ள பின்னி மில்லில் இடம்பெற்றது.

அஜித் மங்காத்தா படப்பிடிப்புக்காக அங்கு முகாமிட்டு இருந்தார். விஜய் அருகிலுள்ளஅரங்கில் வேலாயுதம் படத்தில் நடித்துக் கொண்டிருந்தார்.

படப்பிடிப்பு இடைவேளையில் அவர்கள் இருவரும் திடீரென சந்தித்துப் பேசினர். இருவரையும் அரசியலில் இணைத்து பல்வேறு யூகங்கள் கிளம்பியுள்ள நிலையில் இச்சந்திப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

விஜய் தேர்தலுக்கு முன் அரசியலில் ஈடுபடுவார் என எதிர்பார்ப்புக்கள் நிலவுகிறது. திருச்சியில் நடைபெறும் மாநாட்டில் புது கட்சி ஆரம்பிப்பதா அல்லது ஏதேனும் கட்சிக்கு ஆதரவு தெரிவிப்பதா என்ற முடிவை அறிவிக்கிறார்.

தேர்தல் பிரசாரத்தில் நிச்சயம் குதிப்பார் என நெருக்கமானவர்கள் கூறுகிறார்கள் அ.தி.மு.க பொதுச் செயலாளர் ஜெயலலிதாவை அஜித் சந்தித்துப் பேசினார். இதையடுத்து அவரும் அரசியலில் ஈடுபடப் போவதாக செய்திகள் பரவின

அஜித் அரசியலில் ஈடுபட வலியுறுத்தி ரசிகர்கள் பல்லாவரத்தில் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்தனர். அஜித் எதிர்ப்பால் கடைசி நேரம் இக்கூட்டம் இரத்து செய்யப்பட்டது. சந்திப்பின் போது விஜயும் அஜித்தும் அரசியல் நிலவரங்கள் பற்றி பேசியதாகக் கூறப்படுகிறது.

விஜயின் காவலன் படத்துக்கு ஒத்துழைக்க மாட்டோம் என திரையரங்கு உரிமையாளர்கள் அறிவித்துள்ளனர்.

சுறா படத்துக்கு அவர்கள் நஷ்ட ஈடு கேட்டு வருகிறார்கள். இந்த விடயம் குறித்தும் அவர்கள் ஆலோசித்ததாகத் தெரிகிறது. (ஸ்ரீ-2)

தவறுகளை ஒப்புக் கொள்ளும் துணிவும், திருத்திக் கொள்ள விரும்பும் விருப்பமும்தான் வெற்றி பெறுவதற்கான இரு வழிகள். ~ லெனின்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# ராகுலைத் தொடர்ந்து தமிழக ஆளுநர் பர்னாலா...

இலங்கைத் தமிழர்களின் இன்னல்களைக் களைந்திட இந்திய மத்திய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமெனத் தமிழக ஆளுநர் சுர்ஜித் சிங் பர்னாலா கேட்டுள்ளார்.

நேற்று முன்தினம் தமிழகச் சட்டப் பேரவையின் பதினைந்தாவது கூட்டத் தொடரில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

ஈழத் தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய வகையில், அரசியல் தீர்வை முன்வைப்பதற்கான ஆரம்ப கட்ட முயற்சிகளைக் கூட, அரசாங்கம் முன்னெடுக்கவில்லை எனக் குறிப்பிட்ட ஆளுநர் பர்னாலா, முகாம்களிலிருந்து சொந்த இடங்களுக்கு அனுப்பப்பட்ட தமிழ் மக்களின் மீள் குடியேற்ற நடவடிக்கைகள் முழுமை அடையாமல் இருப்பது தொடர்பிலும் கவலை வெளியிட்டார்.

இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைகள் குறித்துத் தமிழக ஆளுநர் பர்னாலா முன்னர் ஒரு போதும் இவ்வாறு குறிப்பிட்டது கிடையாது. தமிழகத்தின் முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் ஈழத் தமிழர்களுக்காகப் பேசுவதோ அல்லது ஈழத் தமிழர்கள்பால் அன்பு கொண்ட தமிழகத்தின் அரசியல் தலைவர்கள் எங்களுக்காகப் பேசுவது வேறு விடயம். ஆனால் ஆளுநர் பர்னாலாவின் பேச்சை நாம் அது போலக் கருத முடியாது.

ஏனெனில், அவர் இந்திய மத்திய அரசினால் நியமிக்கப்படுபவர். எனவே அவரின் உரையை இந்திய மத்திய அரசின் கருத்தாகவே பார்க்க வேண்டும். ஈழத் தமிழர்களின் யதார்த்த நிலையை முழுமையாக உணர்ந்து கொண்டு பர்னாலா அவர்கள் ஆற்றிய உரையானது ஈழத் தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு இந்திய மத்திய அரசு தலையிட வேண்டும் என்பதை வலியுறுத்துவதாக அமைகின்றது.

திடீரென ஆளுநர் பர்னாலா மேற்கண்டவாறு ஆற்றிய உரை சாதாரணமான விடயம் அன்று. அண்மையில் தமிழகத்துக்கு விஜயம் செய்த இந்தியக் காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளரும், சோனியா காந்தியின் மகனுமான ராகுல் காந்தி தமிழகத்திற்கு வந்திருந்த போது ஈழத் தமிழர்களின் விடயத்தில் நான் நேரடியாகத் தலையிடுவேன் எனப் பகிரங்கமாகக் கூறியிருந்தார்.

ஈழத் தமிழர்களின் துயர் கண்டு தாம் கவலையடைவதாகவும் குறிப்பிட்டுச் சில வாரங்கள் ஆகும் நிலையில் தமிழக ஆளுநர் சுர்ஜித் சிங் பர்னாலா ஈழத் தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணும் அடிப்படை முயற்சிகளைத்தானும் இலங்கை அரசு மேற்கொள்ளவில்லை எனக் கூறியுள்ளார்.

ஆக, இலங்கை இனப் பிரச்சினையில் இந்திய தேசம் நேரடியாகவோ, அன்றி மறைமுகமாகவோ தலையிட உள்ளது என்பது புலனாகின்றது. அதனை உறுதி செய்வதாகவே ஆளுநர் பர்னாலாவின் உரையை நாம் கருத வேண்டும்.

இலங்கைத் தமிழர்களின் பிரச்சினையில் தலையிட்டு ஒரு சுமுகமான தீர்வைக் காணுமாறு இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் கூற வேண்டிய இடத்தில், அதனை ஆளுநர் பர்னாலா கூறியது ஏதோவொரு வகையில் எங்களை ஆற்றுப்படுத்துவதாகும்.

அதாவது ஒரு சிங் கூறாவிட்டாலும் இன்னொரு சிங் கூறியது இலங்கை மீதான இந்தியாவின் பார்வையை வெளிக்காட்டி நிற்பதாகும்.

# ஈரானிடமிருந்து ஆயுதக் கொள்வனவு; இலங்கையின் மறுப்பை அமெ.நம்பவில்லை

## விக்கிலீக்ஸ் இணையத்தளத்தில் தகவல்

(கொழும்பு)

ஈரானிடமிருந்து ஆயுதங்கள் எதையும் கொள்வனவு செய்ய முற்படவில்லை என இலங்கை அரசாங்கம் தெரிவித்திருந்த போதிலும் அதனை அமெரிக்கா முழுமையாக நம்பவில்லை என விக்கிலீக்ஸ் தெரிவித்துள்ளது.

2009ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 21ஆம் திகதியிடப்பட்டு இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் பற்றீசியா புட்னீஸ் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்திற்கு அனுப்பிய தகவல் பரிமாற்றக் குறிப்பின் மூலம் தெரிய வந்துள்ளது.

இத்தகவல் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஈரானிடமிருந்து ஆயுதங்களைக் கொள்வனவு செய்ய முற்படவில்லை என இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளதாகப் பற்றீசியா புட்னீஸ் குறிப்பிட்டுள்ளார்.

வடகொரியா, ஈரான் ஆகிய நாடுகளிடமிருந்து ஆயுதங்களைக் கொள்வனவு செய்ய இலங்கை அரசு முயற்சி செய்வது தொடர்பான தகவல் குறித்து இலங்கையிடமிருந்து காலம் கடந்தே பதில் கிடைத்துள்ளது.

அமெரிக்காவின் கவலையைப் புரிந்து கொள்வதாகவும் இது தொடர்பாக அரசாங்கம் ஆராய்வதாகவும் இலங்கை வெளிவிவகார அமைச்சின் அமெரிக்கப் பிரிவிற்கான பணிப்பாளர் நாயகம் கிசேனுகா செனிவிரத்ன கடந்த 16ஆம் திகதி தெரிவித்தார்.

ஈரானிடமிருந்து ஆயுதங்களைக் கொள்வனவு செய்ய முயற்சித்தமை தொடர்பான குற்றச்சாட்டை நிராகரித்துள்ள கிசேனுகா செனவிரத்ன வடகொரியாவிடமிருந்து ஆயுதங்களைக் கொள்வனவு செய்ய முயற்சிப்பது குறித்து எதனையும் தெரிவிக்கவில்லை என இத்தகவல் பரிமாற்றக் குறிப்பில் பற்றீசியா புட்னீஸ் தெரிவித்துள்ளார்.

அதேவேளை இலங்கை அரசாங்கத்தின் மறுப்புத் தொடர்பாகத் தமது கருத்தையும் இத்தகவல் பரிமாற்றக் குறிப்பில் பற்றீசியா இணைத்துள்ளார். இது குறித்து இத்தகவல் பரிமாற்றக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஈரானிடமிருந்து ஆயுதங்களைக் கொள்வனவு செய்ய முயற்சித்தமை தொடர்பான குற்றச்சாட்டை இலங்கை அரசாங்கம் நிராகரித்துள்ள போதிலும் இவ்விரு நாடுகளுக்கும் இடையிலான அண்மைய தொடர்புகள் சந்தேகங்களைத் தோற்றுவிக்கின்றன.

2009ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 6ஆம் திகதி இலங்கையின் படைத்தளபதி ஈரானியப் படைத்துறை ஆலோசகர் அஸ்காரி நெக்கை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

ஈரானியப் படைத் தளபதி பிரிகேடியர் முகமட் அமினி ரஞ்ஜபார் தலைமையிலான படை அதிகாரிகள் குழுவொன்று இலங்கைக்கு வரவுள்ளது.

இதன்போது இவ்விரு நாடுகளுக்கும் இடையில் எதிர்காலத்தில் படைத்தரப்பு உறவுகளை அதிகரிப்பது குறித்துப் பேச்சுவார்த்தை நடத்துவது தொடர்பாக இலங்கையின் படைத்தளபதியும் ஈரானியப் படைத்துறை ஆலோசகர் அஸ்காரி நெக்கும் சந்தித்துப் பேசியுள்ளனர்.

அதேவேளை ஜப்பானியத் தூதரகத்தின் அரசியல் பணியகத்தில் நடந்த சந்திப்பு ஒன்றில், ஆயுதங்கள் மற்றும் அணுசக்தி தொழில் நுட்பங்களைக் கொள்வனவு செய்வது தொடர்பாக ஈரானியக் குழுவுடன் இலங்கை அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்தும் வாய்ப்புக்கள் உள்ளதாக ஜப்பானியப் படைத்துறை ஆலோசகர் கவலையுடன் கலந்துரையாடி இருந்தார் என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் பற்றீசியா புட்னீஸ் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்திற்கு அனுப்பிய தகவல் பரிமாற்றக் குறிப்பில் தெரிவித்துள்ளார். (ந-5)

# இலங்கை இளைஞரை நாடு கடத்துவதை தடுக்கக் கோரி பிரி. எம்.பியிடம் மகஜர்

பிரிட்டனில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கைத் தமிழ் இளைஞர் ஒருவரை நாடு கடத்துவதற்கு எதிராக அவரின் நண்பர்கள் பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் உதவியை நாடியுள்ளனர்.

26 வயதான சிவராஜா சுகந்தன் என்னும் இந்த இளைஞர் 1999ஆம் ஆண்டு தனது 15வது வயதில் பிரிட்டனுக்குச் சென்றார். 2003ஆம் ஆண்டு அவரின் புகலிடக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. 2004ஆம் ஆண்டு அவரின் மேன்முறையீடும் நிராகரிக்கப்பட்டது.

தற்போது தடுப்பு முகாம் ஒன்றில் வைக்கப்பட்டுள்ள அவர் பிரித்தானியாவிலிருந்து நாடு கடத்தப்படும் நிலையை எதிர்நோக்குகிறார். பிரித்தானியாவில் இரு பிள்ளைகளுடன் உள்ள சுகந்தனுக்குப் பிணை வழங்குவது தொடர்பான விசாரணை முறையாக நடைபெறவில்லை என அவரின் ஆதரவாளர்கள் கூறுகின்றனர்.

பிரித்தானிய உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு முன்வைத்த வாதங்களின் பிரதி சுகந்தனுக்கு வழங்கப்படவில்லை எனவும் அவருக்குச் சட்டத்தரணி ஒருவர் வழங்கப்படவில்லை எனவும் அவரின் ஆதரவாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் சிவராஜா சுகந்தனின் விடுதலையை வலியுறுத்தி 800 பேர் கையெழுத்திட்ட மகஜர் ஒன்று பிரிஸ்டல் மேற்குத் தொகுதி லிபரல் ஜனநாயகக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்டீபன் வில்லியமிடம் கையளிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக ஸ்டீபன் வில்லியம் எம்.பி கூறுகையில்,

இவ்விடயம் குறித்து ஏற்கெனவே குடிவரவு அமைச்சர் டேமியன் கிறீனின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளதாகவும் மீண்டும்தான் அதைச் செய்யவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். சுகந்தன் பிரித்தானியாவில் இரு பிள்ளைகளுடன் உள்ளதால் அவர் குறிப்பிடத்தக்க காலம் அங்கு தங்கியிருப்பது கவனத்திற் கொள்ளப்பட வேண்டும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்டீபன் வில்லியம் தெரிவித்துள்ளார். (ந-5)

# புதுவாழ்வின் அடையாளமே திருமுழுக்கு

கிறிஸ்து ஆண்டவரை தலைவராக ஏற்று, அவருடைய போதனைகளை வாழ்வாக்கி அவரால் ஏற்படுத்தப்பட்ட சட்ட திட்டங்களுக்கமைவாக வாழ்வோரின் கூட்டமே திருச்சபை ஆகும். பாவ இருளில் இருந்து மக்களை விடுவித்து அவர்களை ஒளியின் பாதையில் நடத்திச் சென்று, புதுவாழ்வை அவர்களுக்கு தொடங்கி வைக்க, கிறிஸ்துவுக்கு சொந்த மானவர்கள் எனும் முத்திரையை அவர்களுக்குக் கொடுக்க திருச்சபை வழங்கும் ஓர் அடையாளமே திருமுழுக்கு ஆகும். உலகின் பாவங்களைப் போக்கும் கடவுளின் செம்மறியாக இவ்வுலகிற்கு வந்த இறைமகன் இயேசு தன்னுடைய பாடுகள், மரணம் என்பவற்றின் மூலம் மனுக்குலத்தின் பாவங்களைப் போக்கி தன்னுடைய உயிர்ப்பின் மூலம் மக்களுக்கு புதுவாழ்வு தந்தார். எனவே ஒருவன் கிறிஸ்துவோடு பாவத்துக்கு இறந்து, தன்னுடைய பழைய மனித இயல்பை அடக்கம் செய்துவிட்டு, கிறிஸ்துவோடு புதுவாழ்வுக்கு உயிர்த்தெழுவதே (உரோ 6:3-5) உண்மையான திருமுழுக்காகும்.

கடவுள் தன்மையில் விளங்கிய கிறிஸ்து தன்னை மிகவும் தாழ்த்தி மனிதனாகப் பிறந்தது மட்டுமல்ல பாவம் தவிர்ந்த மற்றும் அனைத்திலும் மனிதரோடு ஒன்றித்த வாழ்வின் மூலமாகவே மனிதகுலத்தை மீட்டார் என்பதை அவருடைய திருமுழுக்கு காட்டுகிறது. மனிதர்களின் இன்ப துன்ப போராட்டங்களில் எதிர்கொள்ளும் தளர்வுகளை,தடைகளை அனுபவிக்க வேண்டும். பசி, தாகம், தனிமை , எதிர்ப்பு , புரிந்துகொள்ளப்படாமை , ஒதுக்கப்படுதல், இடப்பெயர்வு, அகதி வாழ்க்கை போன்ற எதிர்மறை அனுபவங்களின் பாதிப்பையும் விளங்கிக் கொள்ள வேண்டும். இவ்வாறு மானிட வடிவம் பெற்ற ஒவ்வொரு மனிதனும் அனுபவிக்கும் மண்ணக வாழ்வின் பரிணாமத்தை தானும் அனுபவிக்கப் போவதன் அடையாளமாகத் தான் மக்கள் பெற்ற அதே திருமுழுக்கை இறைமகன் இயேசுவும் பெற்றார். இதன்மூலம் மண்ணில் மக்களை வழிநடத்தும் தலைவர்களுக்கும், மறை வழிகாட்டிகளுக்கும் முன்னுதாரணமாகத் திகழ்கின்றார்.

திருமுழுக்கின் விளைவாக நாம் கடவுளின் மக்களென அழைக்கப்படுகிறோம்.

## பரமபிதா காட்டிய பாதை

கடவுளின் மக்களாகவே இருக்கி றோம். (யோவா 3:1) அவ்வாறிருக்க ஊனியல்பின் செயல்களுக்கு நாம் இடம்கொடுக்கலாமா? எமது வாழ்வில் பரத்தமை, கெட்ட நடத்தை ,காமவெறி, பகைமை , பொறாமை, கோபம், பிரிவினை, பொய், வன்முறை எண்ணங்கள், அநீதிக்குத் துணைபோதல், பிறரின் பெயரைக் கெடுத்தல் போன்ற தீய செயல்களை நம்அனுமதிக்கலாமா? ஆனல் இன்று நாம் எதைப் பற்றிக்



கொள்கிறோம்... எமது வாழ்வே விடை பகரும். வாழ்வின் பொருள் மறந்து உலகின் மாயைகளுக்குள் தம்மை அழித்துக்கொள்ளும் மக்களுக்கு எம் வாழ்வின் மூலமாக நல்வழியைக் காட்டுவோம்.பின் நவீனத்துவம் என்ற போர்வையினுள் சிக்கி எமது கலாசாரத்தையும் பண்பாட்டையும் சின்னாபின்ன மாக்கி குறிக்கோளற்ற வாழ்வில் தம் வாழ்வை அழிக்கும் உள்ளங் களை எமது அன்பாலும் இறை வேண் டலாலும் திசை மாற்றுவோம்.

தன்னையே அழித்து உலகிற்கு புத்துயிரளித்த இயேசுவைப் பின்பற்றி எமது வாழ்வின் மூலம் உலகில் மறு கிறிஸ்துவாக திகழ்வோம்.

அருட்சகோ.றமேஸ் அ.ம.தி

# இந்தியாவிலிருந்து இலங்கைக்கு மின்சார விநியோகம்
# போராட்டம் வெடிக்கும் என தமிழகத்தில் எச்சரிக்கை

இலங்கையில் போர் முடிந்ததன் பின்னர் அந்த நாட்டுடன் பல்வேறு ஒப்பந்தங்களை போட்டுக் கொண்டிருக்கும் இந்திய அரசு, தற்போது தமிழகம் வழியாக இலங்கைக்கு மின்சாரம் கொண்டு செல்லும் திட்டத்தை செயற்படுத்தும் நடவடிக்கையில் இறங்கியிருப்பது கண்டு தமிழர் அமைப்புகளும் மீனவர் அமைப்புகளும் கொதித்துப் போயிருக்கின்றன.

இந்திய மின்தொகுப்பு கழகமும்(பவர் கிறிட் கோப்பரேஷன் ஒஃப் இந்தியா) இலங்கை மின்சார சபையும் இணைந்து, தமிழகத்திலுள்ள இராமேஸ்வரத்திலிருந்து இலங்கையின் தலைமன்னாருக்கு கடலுக்கடியில் மின்கேபிள்கள் மூலம் மின் இணைப்பு வழங்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அதற்கான அகழாய்வு பணிகளை ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளன.

இது குறித்து தெரிவித்துள்ள இலங்கை மின்சார சபையின் தலைவர் வித்ய அமரபால, "அரசின் ஒப்புதல் கிடைத்ததும் விரைவில் இந்தப் பணி தொடங்கும்" என்றார். இந்த திட்டத்தை கண்டித்து ஆர்ப் பாட்டம் நடத்தியிருக்கிறது பா.ம.க மற்றும் இந்து மக்கள் கட்சி.

இந்து மக்கள் கட்சியின் மாநில அமைப்பாளர் கண்ணன், "இலங்கைக்கு இந்தியா வழங்க வுள்ள இந்த மின் திட்டத்திற்கான மொத்த தூரம் 125 கிலோ மீற்றர். இதில் கடலுக்கடியில் மட்டும் 50 கிலோமீற்றருக்கு மின்சார கேபிள்கள் அமைக்கப்படவுள்ளன. இதன் திட்டச் செலவு 4 ஆயிரம் கோடி ரூபாய்.

இதில் ஒரு கோடி ரூபாய் செலவில் கடலுக்கடியில் மின் கேபிள்கள் அமைப்பதற்கான ஆய்வுகள் செய்ய மத்திய அரசின் மின்தொகுப்பு கழகம் முடிவு செய்திருக்கிறது.

இந்தத் திட்டம் செயற்படுத்தப்படும் போது இலங்கைக்கு 1000 மெகாவோட் மின்சாரத்தை இந்தியா வழங்கும்.

தமிழகத்தின் தொப்புள்கொடி உறவுகளான ஈழத்தமிழர்களை வகைதொகையாக படுகொலை செய்த இலங்கைக்கு மின்சாரம் வழங்க இந்தியா முடிவு செய்திருப்பது கண்டு நெஞ்சு பொறுக்கவில்லை.

நீதிமன்றத்தின் மூலம் இதனை தடுத்து நிறுத்துவதற்கு வழி உண்டா என்று சட்ட நிபுணர்களுடன் கலந்தாலோசித்துக் கொண்டிருக்கிறோம். தமிழர்களுக்கு தொடர்ந்து துரோகம் செய்து வரும் காங்கிரஸை வேரறுக்க தமிழர்களுக்கு ரோஷம் வரவேண்டும்.



அப்போதுதான் தமிழர்களுக்கு எதிராக சிந்திப்பதை காங்கிரஸ் தலைமை நிறுத்தும்" என்கிறார் ஆவேசமாக.

இந்திய அரசின் இந்த திட்டத்தை அறிந்து பதற்றமடைந்திருக்கிறார்கள் தமிழக மீனவர்கள் சங்கத்தினர். இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த இந்திய மீனவர் பேரவை நிறுவனத் தலைவர் ஆவின்பாபு, தமிழ்நாடு மீனவர் முன்னேற்ற சங்கத்தின் தலைவர் கோசு மணி, தென்னிந்திய மீனவர் நலச்சங்கத்தின் தலைவர் கு.பாரதி, "160 கிலோ மீற்றர் பரந்து விரிந்துள்ள மன்னார் வளைகுடா பகுதியில் 3600 க்கும் மேற்பட்ட அரிய வகையிலான கடல்வாழ் உயிரினங்களும் பவளப் பாறை களும் உள்ளன. இதனை 'தேசிய கடல்வாழ் உயிரின பூங்கா' என்று தமிழக அரசு பராமரித்து வருகிறது.

இந்தச் சூழலில், கடல் வழியாக இலங்கைக்கு மின்சாரம் வழங்க மேற்கொள்ளப்படும் ஆய்வு பணிகளால் அரியவகை கடல்வாழ் உயிரினங்களும் தாவரங்களும் பவளப்பாறைகளும் அழிந்து விடும் அபாயம் உள்ளது. மேலும் மீனவர்களின் வாழ்வாதாரமும் பெரிதும் பாதிக்கப்படும். தவிர மின் கேபிள்கள் அமைக்கப்பட்டு மின் இணைப்பின் போது ஏதேனும் சிறிய தவறு ஏற்பட்டாலும் ஜீரணிக்க முடியாத விளைவுகளும் ஏற்பட்டு விடும். எல்லாவற்றுக்கும் மேல் மின் பற்றாக்குறையால் தமிழகமே தத்தளிக்கும் போது... ஈழத்தமிழர்களுக்கு தீர்வு வழங்காத இலங்கைக்கு மின்சாரம் தருவதை ஏற்கவே முடியாது. போராட்டம் பெரியளவில் வெடிக்கும்" என்கின்றனர்.


இந்த மின்சார திட்டத்திற்கு எதிராக பிரசாரம் செய்து தமிழர்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தி வரும் தமிழர் தேசிய விடுதலை இயக்கத்தின் தலைவர் தோழர் தியாகு,"யுத்தம் என்கிற பேரில் ஈழத்தில் தமிழினப் படுகொலை செய்தது இலங்கை அரசு" உலகின் பல்வேறு நாடுகள்," இனப்படுகொலை செய்த நாடு இலங்கை என்று பதிவு செய்து கொண்டு வருகின்றன. ஐ.நா.மன்றமும் இலங்கையின் போர்க்குற்றங்களை விசாரிக்க உத்தரவிட்டிருக்கிறது. இதனையெல்லாம் சிறிதும் மதிக்காமல் போரின் போது இலங்கைக்கு ஆதரவாக எப் படிப்பட்ட உதவிகளெல்லாம் செய்து ஒட்டுமொத்த தமிழி னத்திற்கும் இந்தியா துரோகம் செய்ததோ... அப்படியே போருக்கு பின்னரும் செய்து கொண்டு வருகிறது.

அந்த வகையில் தமிழகம் வழி யாக இலங்கைக்கு மின்சாரம் என்பது தமிழகத்திற்கும் தமிழர்களுக்கும் இந்தியா செய்கிற ஜீரணிக்க முடியாத பெரிய துரோகம். முளையிலேயே இதனை கிள்ளி எறிய தமிழர்கள் ஒன்று திரள வேண்டும். இல்லையேல் தமிழர்களுக்கு எதிரான காங்கிரஸின் நடவடிக்கைகள் அதிகரிக்கவே செய்யும் என்கிறார். தமிழக வழியாக மின்சாரம் என்பதால் தமிழகத்திற்கான மின் ஒதுக்கீட்டில் இருந்து இலங்கைக்கு மின்சாரம் வழங்கப்படும் என்கிற சந்தேகம் பலருக்கும் இருப்பதால் இது குறித்து தமிழ் நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் தலைவர் கபிலனிடம் கேட்டபோது,'இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் அனைத்தும் மின் தொகுப்புக்குள் கொண்டுவரப்பட்டு....மின் தொகுப்பில் இருந்து தான் ஒவ்வொரு மாநிலத்திற்கும் எவ்வளவு மின்சாரம் வழங்குவது என முடிபு செய்யப்பட்டு அதற்கேற்ப வழங்கப்பட்டுவருகிறது.

இலங்கைக்கு மின்சாரம் வழங்குவது தொடர்பாக இந்திய மின் தொகுப்புக்கழகம் இந்த மாதிரியான செயல் முறைகளை கையாளுகிறது என்பது எங்களுக்குத் தெரியாது. ஆனால் தமிழகத்திற்கான மின்ஒதுக்கீட்டில் இருந்து இலங்கைக்கு மின்சாரம் வழங்கப்படாது என்பதை மட்டும் உறுதியாக தெரிவிக்க முடியும்.அதனால் அந்த சந்தேகம் யாருக்கும் வேண்டாம்' என்கின்றார்.

**நக்கீரன்**



வலி. கிழக்கு சைவசமய அருள்நெறி மன்ற முதலாவது ஆண்டு விழாவையொட்டி வெளியிடப்பட்ட அருள் அமுதம் மலர் வெளியீட்டுரையை யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரீகத்துறை பேராசிரியர் மா.வேதநாதன் நிகழ்த்துவதையும் மேடையில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரியர் சுவாமிகள் , யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கன்,மன்றத்தலைவர் சிவசிறி சோ.இ.பிரணதார்த்திஹரக் குருக்கள்,கோப்பாய் ஆசிரியர் கலாசாலை பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் நிகழ்வில் கௌரவிக்கப்பட்ட கலைஞர்களுடன் விருந்தினர்கள் நிற்பதையும் படங்களில் காணலாம்.

# பண மழையில் ஐ.பி.எல். வீரர்கள்

# காம்பீர் 26 கோடி ரூபாய்க்கு ஏலம்

## இன்றும் பல கோடி ரூபாய்கள் புரளும்



(பெங்களூர்)

இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்.) அமைப்பின் நான்காவது இருபது-20 கிரிக்கெட் தொடருக்கான அணி வீரர்கள் நேற்றைய முதல் நாள் ஏலத்தில் பல கோடி ரூபாய் பெறுமதியில் வாங்கப்பட்டனர்.

இதில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி, இந்திய வீரர் கௌதம் காம்பீரை 26.6 கோடி இலங்கை ரூபாய்க்கு வாங்கியது.

இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையால் (பி.பி.சி.ஐ) ஆரம்பிக்கப்பட்ட இந்தியன் பிரிமியர் லீக் அமைப்பின் (ஐ.பி.எல்) எட்டு அணிகள் மோதிய இருபது-20 கிரிக்கெட் தொடர் கடந்த மூன்று ஆண்டுகளாக நடைபெற்றது.

இதனடிப்படையில் கடந்த மூன்று ஆண்டுகளுடன் வீரர்களின் ஒப்பந்தம் முடிபடைந்த நிலையில் இவ்வாண்டு ஏப்ரலில் ஆரம்பமாகவுள்ள நான்காவது ஐ.பி.எல் தொடருக்கான புதிய வீரர்களுக்கான ஏலம் நேற்றும் இன்றும் பெங்களூரில் நடைபெறுகிறது.

இம்முறை கொச்சி, புனே அணிகள் புதிதாக இணைத்துக் கொள்ளப்படுகின்றன. இவ்விரு அணிகளும் வீரர்களை முழுமையாக ஏலத்தில் எடுக்கின்றன.

மொத்தம் 350 வீரர்கள் பங்கேற்கும் இவ்வேலத்தில் ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் செலவிடப்படுகிறது.

இந்நிலையில் நேற்றைய ஏலத்தில் இந்திய வீரர் கௌதம் காம்பீரைக் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி 26.6 கோடி இலங்கை ரூபாய்க்கு ஏலத்தில் எடுத்தது.

இலங்கை வீரர் மஹேல ஜெயவர்த்தனாவை 16.6 கோடி இலங்கை ரூபாய்க்கு கொச்சி அணி ஏலத்தில் வாங்கியது. ஐ.பி.எல் இன் நேற்றைய முதல் நாள் ஏலத்தில் வீரர்கள் என்ன விலைக்கு (இலங்கை ரூபாய்ப் பெறுமதியில்) போயினர் என்ற முழு விபரம் வருமாறு,

கௌதம் காம்பீர் (கொல்கத்தா நைட் ரைடர்ஸ்) - 26.6 கோடி ரூபாய், யூசுப் பதான் (கொல்கத்தா நைட் ரைடர்ஸ்) - 23.2 கோடி ரூபாய்.

றொபின் உத்தப்பா (புனே) - 23.2 கோடி ரூபாய், ரோகித் சர்மா (மும்பை இந்தியன்ஸ்) - 22.1 கோடி ரூபாய், இர்பான் பதான் (டில்லி டேர் டெவில்ஸ்) - 21 கோடி ரூபாய்.

யுவராஜ் சிங் (புனே) - 19.9 கோடி ரூபாய், சௌரவ் திவாரி (பெங்களூர் ரோயல் சலஞ்ஜர்ஸ்) - 17.7 கோடி ரூபாய், மஹேல ஜெயவர்த்தன (கொச்சி) - 16.6 கோடி ரூபாய்.

டேவிட் ஹசி (கிங்ஸ் லெவின் பஞ்ஜாப்) - 15.5 கோடி ரூபாய், ஏ.பி.டி.வில்லியர்ஸ் (பெங்களூர் ரோயல் சலஞ்ஜர்ஸ்) - 12.1 கோடி ரூபாய், கமரூன் வைற் (டெக்கான் சார்ஜர்ஸ்) - 12.1 கோடி ரூபாய்.

ஜக்கலிஸ் (கொல்கத்தா நைட் ரைடர்ஸ்) - 12.1 கோடி ரூபாய், ரோஸ் ரெய்லர் (ராஜஸ்தான் ரோயல்ஸ்) - 11கோடி ரூபாய், ரவீந்திர ஜடேஜா (கொச்சி) - 10.5 கோடி ரூபாய்.

ஜொகான் போத்தா (ராஜஸ்தான் ரோயல்ஸ்) - 10.5 கோடி ரூபாய், தினேஷ் கார்த்திக் (கிங்ஸ் லெவின் பஞ்ஜாப்) - 9.9 கோடி ரூபாய், சிறிசாந்த் (கொச்சி) - 9.9 கோடி ரூபாய், அடம் கில்கிறிஸ்ட் (கிங்ஸ் லெவின் பஞ்ஜாப்) - 9.9 கோடி ரூபாய்.

சகீர் கான் (பெங்களூர் ரோயல்ஸ் சலஞ்ஜர்ஸ்) - 9.9கோடி ரூபாய், அன்ரூ சைமன்ஸ் (மும்பை இந்தியன்ஸ்) - 9.4 கோடி ரூபாய், டேவிட் வோர்னர் (டில்லி டேர் டெவில்ஸ்) - 8.3 கோடி ரூபாய்.

குமார் சங்கக்கார (டெக்கன் சார்ஜர்ஸ்) - 7.7 கோடி ரூபாய், திலகரட்ண டில்சான் (பெங்களூர் ரோயல் சலஞ்ஜர்ஸ்) - 7.2 கோடி ரூபாய்.

கெவின் பீற்றர்சன் (டெக்கன் சார்ஜர்ஸ்) - 7.2 கோடி ரூபாய், டானியல் விக்டோரி (பெங்களூர் ரோயல் சலஞ்ஜர்ஸ்) - 6 கோடி ரூபாய், ராகுல்டிராவிட் (ராஜஸ்தான் ரோயல்ஸ்) - 5.5 கோடி ரூபாய்.

கிரேம் சிமித் (புனே) - 5.5கோடி ரூபாய், ஆர்.பி.சிங் (கொச்சி) - 5.5 கோடி ரூபாய், பிரண்டன் மக்குலம் (கொச்சி) - 5.2கோடி ரூபாய், சகீப் அல் ஹசன் (கொல்கத்தா நைட் ரைடர்ஸ்) - 4.7கோடி ரூபாய்.

மைக்கல் ஹசி (சென்னை சுப்பர் கிங்ஸ்) - 4.7 கோடி ரூபாய், ஸ்ருவர்ட் பிரோட் (கிங்ஸ் லெவின் பஞ்ஜாப்) - 4.4 கோடி ரூபாய், வி.வி.எஸ்.லக்ஸ்மன் (கொச்சி) - 4.4கோடி ரூபாய்.

ஜேம்ஸ் ஹோப்ஸ் (டில்லி டேர் டெவில்ஸ்) - 3.8கோடி ரூபாய், பிரட் ஹடின் (கொல்கத்தா நைட் ரைடர்ஸ்) - 3.6 கோடி ரூபாய், சிக்கார் டாவான் (டெக்கன் சார்ஜர்ஸ்) - 3.3 கோடி ரூபாய், ஜே.பி.டுமினி (டெக்கன் சார்ஜர்ஸ்) - 3.3 கோடி ரூபாய், பார்திவ் பட்டேல் (கொச்சி) - 3.2 கோடி ரூபாய், நாமன் ஓஜா (டில்லி டேர் டெவில்ஸ்) - 2.9 கோடி ரூபாய்.

ரிம் பெய்ன் (புனே) - 2.9 கோடி ரூபாய், டேவி ஜேக்கப்ஸ் (மும்பை இந்தியன்ஸ்) - 2.1 கோடி ரூபாய், வைரிட்டிமான் சகா (சென்னை சுப்பர் கிங்ஸ்) - 1.1 கோடி ரூபாய்.

அத்துடன் நேற்று ஏலத்தில் வாங்கப்படாத வீரர்களாக லூக் ரைட், மாற் பிறிர், மார்க் பௌச்சர், கிரேம் மனோ, பிரைன் லாரா, கேர்ஷல் கிப்ஸ், ஜசி ரைடர், சௌரவ் கங்குலி மற்றும் கிறிஸ் ஹயில் ஆகியோர் காத்திருக்கின்றனர்.

**வீரர்கள் தக்கவைப்பு**

ஐ.பி.எல் அமைப்பின் புதிய விதியின் பிரகாரம் ஒவ்வொரு அணியும் தமது பழைய வீரர்களில் நால்வரைத் தக்க வைத்துக் கொள்ள முடியும். இதனடிப்படையில்,



**சென்னை சுப்பர் கிங்ஸ் அணி:-**

தோனி; ரெய்னா, முரளி விஜய், அல்பி மோர்கல் ஆகிய நான்கு வீரர்களையும்

**மும்பை இந்தியன்ஸ் அணி:-**

டெண்டுல்கர், ஹர்பஜன் சிங், பொல்லாட், மலிங்க ஆகிய நான்கு வீரர்களையும்

**இராஜஸ்தான் ரோயல்ஸ்:-**

ஷேன் வோர்ன், வோட்சன் ஆகிய இருவரையும்

**பெங்களூர் ரோயல் சலஞ்ஜர்ஸ்:-**

விராத் ஹோலி மாத்திரமும்

**டில்லி டேர் டெவில்ஸ்:-**

சேவாக்கை மாத்திரமும் தக்கவைத்துள்ளது.

கொல்கத்தா நைட் ரைடர்ஸ், டெக்கன் சார்ஜர்ஸ், கிங்ஸ் லெவின் பஞ்ஜாப் ஆகிய அணிகள் தமது முழு வீரர்களையும் விடுவித்துள்ள நிலையில் அனைத்து வீரர்களையும் ஏலத்தில் வாங்க வேண்டும்.

# சாபிக், மிஸ்பா நிதானம்; பாகிஸ்தான் அணி பலம்



(ஹமில்டன்)

அசாட் சாபிக், மிஸ்பா உல் ஹக் ஜோடியின் பொறுப்பான இணைப்பாட்டத்தின் மூலம் பாகிஸ்தான் அணி நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டநேர முடிபில் அதன் முதலாவது இன்னிங்ஸில் 4 விக்கெட்டுக்களையிழந்து 235 ஓட்டங்களை எடுத்தது.

நியூசிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணி மூன்று இருபது-20, 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் இருபது- 20 தொடரில் நியூசிலாந்து அணி 2:1 என்ற கணக்கில் வெற்றிபெற்ற நிலையில் முதலாவது டெஸ்ட் நேற்று முன்தினம் ஹமில்டனில் ஆரம்பமானது.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணித்தலைவர் மிஸ்பா உல் ஹக் முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தார்.

இதன் அடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 275 ஓட்டங்களை எடுத்தது.

இதில் மக்குலம், சௌத்தி தலா 56 ஓட்டங்களையும் குப்தில், வில்லியம்சன் ஆகியோர் தலா 50 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் தான்வீ அகமெட் 04 விக்கெட்டுக்களையும் அப்துர் றீமான் 03 விக்கெட்டுக்களையும் உமர்குல் 02 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டநேர முடிபில் அதன் முதலாவது இன்னிங்ஸில் 04 விக்கெட்டுக்களை இழந்து 235 ஓட்டங்களை எடுத்தது.

இதில் அசாட் சாபிக் 74 ஓட்டங்களையும் அணித்தலைவர் மிஸ்பா உல் ஹக் 50 ஓட்டங்களையும் எடுத்து ஆட்டமிழக்காமல் களத்தில் உள்ளதுடன் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் தௌபிக் உமர் 54 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

பந்துவீச்சில் மார்டீன், ஆர்னெல் ஆகியோர் தலா 02 விக்கெட்டுக்களை சாய்த்தனர்.

இப் போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டம் இன்றாகும்.

# ஒரே ஒரு இருபது-20 போட்டியில் இன்று தென்னாபிரிக்கா-இந்தியா மோதல்

(டர்பன்)

தென்னாபிரிக்க - இந்திய அணிகள் மோதும் ஒரேயொரு இருபது-20 இன்று டர்பனில் நடைபெறுகிறது. இந்தியக் கிரிக்கெட் அணி தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப் பயணம் செய்து விளையாடி வருகிறது. இரு அணிகளுக்கிடையிலான மூன்று டெஸ்ட் கொண்ட தொடர் 1:1 என்ற கணக்கில் சமனிலையில் முடிந்தது.

இந்நிலையில் இரு அணிகளுக்கிடையிலான ஒரேயொரு இருபது-20 போட்டி டர்பனில் இன்று நடைபெறுகிறது.

தென்னாபிரிக்க அணித் தலைவர் சிமித் காயமடைந்து உள்ளதால் இன்று விளையாட மாட்டார் எனத் தெரிகிறது. போத்தா அணித் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். டெண்டுல்கர் ஐ.பி.எல். போட்டியில் மட்டுமே இருபது-20 ஆட்டத்தில் விளையாடி வருகிறார்.

இதனால் அவர் ஆட மாட்டார். இரு அணிகளும் இருபது-20 போட்டியில் இதுவரை நான்கு முறை மோதியுள்ளன. இதில் இந்தியா மூன்று ஆட்டத்தில் வெற்றி பெற்றது. தென்னாபிரிக்கா ஒரு ஆட்டத்தில் வெற்றி பெற்றது. இந்தப் போட்டி இலங்கை நேரப்படி மாலை ஆறு மணிக்கு நடக்கிறது.

இரு அணி வீரர்களின் விபரம் வருமாறு:

இந்தியா: தோனி (அணித் தலைவர்), சேவாக், காம்பீர், விராட் ஹோலி, ரெய்னா, யுவராஜ் சிங், யூசுப் பதான், ஹர்பஜன் சிங், சகீர்கான், நெகரா, சிறிசாந்த், முனாப் பட்டேல், டெண்டுல்கர், அஸ்வின், பியூஸ் சாவ்லா, பிரவீன் குமார்

தென்னாபிரிக்கா: போத்தா (அணித் தலைவர், அம்லா, டி.வில்லியர்ஸ், டுமினி, இங்ராம், மில்லர், பீற்றர்சன், நிற்னி, பர்னல், தெரான், ரிசொற் சோபே.

## ஜெயசூர்யா, வாஸிற்கு வாய்ப்பு மறுப்பு

உலகக் கிண்ணச் சுற்றுப் போட்டிக்கான இலங்கைக் கிரிக்கெட் அணியிலிருந்து சனத் ஜெயசூர்யா, சமிந்தவாஸ் ஆகியோர் நீக்கப்பட்டு உள்ளனர். அடுத்த மாதம் ஆரம்பமாகும் இச்சுற்றுப் போட்டிக்கான 15 பேர் கொண்ட இலங்கை அணி நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது. இவ்வணியில் சனத் ஜெயசூர்யா, சமிந்தவாஸ் இருவரும் இடம்பெறவில்லை. அணி விபரம் பின்வருமாறு:

குமார் சங்கக்கார (தலைவர்), மஹேல ஜெயவர்த்தன (உப தலைவர்), உபுல் தரங்க, திலகரட்ண டில்ஷான், திலான் சமரவீர, சாமரசில்வா, சாமர கப்புகெதர, அஞ்சலோ மத்தியூஸ், திசேர பெரேரா, நுவன் குலசேகர, லசித் மலிங்க, தில்ஹார பெர்னாண்டோ, முத்தையா முரளிதரன், அஜந்த மெண்டிஸ், ரங்கன ஹேரத்.

# இனப்பிரச்சினைக்கான தீர்வில் ஜனாதிபதி அக்கறை கொள்ளாதவர்

## அமெ.யிடம் சொல்ஹெய்ம் எடுத்துரைத்தார்

(கொழும்பு)

இலங்கையில் நிலவும் இனப்பிரச்சினை குறித்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சிறிதும் அக்கறை காண்பிக்கவில்லை.

அது தொடர்பில் அவரிடம் சரியான அறிவும் இருக்கவில்லை என நோர்வேயின் அமைச்சரும் இலங்கைக்கான முன்னாள் சமாதான அனுசரணையாளருமான எரிக் சொல்ஹெய்ம் நோர்வேயின் தலைநகரில் உள்ள அமெரிக்க தூதுவரிடம் தெரிவித்ததாக ஒஸ்லோ பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

விக்கிலீக்ஸ் வெளியிட்டுள்ள ஆவணங்களிலேயே இந்த உரையாடல் காணப்பட்டதாக தெரிவித்துள்ள அந்த பத்திரிகை, 2006 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இலங்கை வந்த சொல்ஹெய்ம் விடுதலைப் புலிகள் தொடர்பில் மகிந்தவின் கருத்துக்களை அறியமுற்பட்டிருந்தார்.

ஆனால் இனப்பிரச்சினை தொடர்பில் பூரண அறிவற்றவராக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ காணப்பட்டதுடன் சமாதான முயற்சிகளை எவ்வாறு முன்னகர்த்துவது என்பது தொடர்பில் அவருக்கு அதிக ஆலோசனைகள் தேவையானது என சொல்ஹெய்ம் அமெரிக்க தூதுவரிடம் தெரிவித்ததாக அது மேலும் தெரிவித்துள்ளது. (ந-5)

# லசந்த விக்கிரமதுங்க படுகொலை விசாரணைகளுக்கு அரசு தடை

## ஊடகவியலாளர் ஒன்றியம் கண்டனம்

சிரேஷ்ட ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலை விசாரணைகளை அரசாங்கம் தடைசெய்து வைத்துள்ளதாக பிரான்ஸை தளமாகக் கொண்ட எல்லைகளற்ற ஊடகவியலாளர்கள் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

லசந்த விக்கிரமதுங்கவின் இரண்டு ஆண்டுகள் நினைவு தினத்தை முன்னிட்டு எல்லைகளற்ற ஊடகவியலாளர்கள் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிரேஷ்ட ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலை குறித்த விசாரணைகளை மேற்கொள்ள அரசாங்கம் முனைப்புக் காட்டவில்லை எனவும் இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் மிகவும் பிரபலமான ஊடகவியலாளரும் பத்திரிகை ஆசிரியரும் வழக்கறிஞருமான லசந்த விக்கிரமதுங்க சண்டே லீடர் பத்திரிகை மற்றும் மோனிங் லீடர் என்ற ஆங்கில இதழ்களின் ஆசிரியராக இருந்துவந்தார்.

1995ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் லசந்த விக்கிரமதுங்க அவரது வாகனத்திற்குள் வைத்து தாக்கப்பட்டார். 2005ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதத்திலும் 2007ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திலும் சண்டே லீடர் பத்திரிகை அலுவலகம் தீ வைத்து எரிக்கப்பட்டது.

2009ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8-ம் திகதி கொழும்பு கல்கிசையில் உள்ள அவரது அலுவலகத்திற்கு சென்றுகொண்டிருந்த பொழுது இனந்தெரியாத நபர்களால் லசந்த விக்கிரமதுங்க சுட்டுக் கொல்லப்பட்டார்.

அரசாங்கத்தின் அடக்கு முறைகளையும் சிறுபான்மை இனங்கள் மீதான ஒடுக்குமுறையையும் தொடர்ந்து விமர்சித்து வந்த லசந்த விக்கிரமதுங்க தன் மரணம் குறித்து, தனது மரணத்திற்கு முன்பாக எழுதிய மரணத்தின் பாதையை நான் அறிவேன் என்ற ஆசிரியர் தலையங்கம் பின்னர் வெளியானது.

லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலை தொடர்பில் கொலையாளிகள் தொடர்பான தகவல்கள் யாவும் புலனாய்வுப் பிரிவினரால் பெறப்பட்டு விசாரணைகள் முழுமைபெறும் நிலையில் அரசாங்கத்தினதும் பாதுகாப்பு அமைச்சினதும் அழுத்தங்கள் காரணமாக விசாரணைகள் கைவிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது என இவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

## உள்ளூராட்சி...

(தமிழரசுக் கட்சி) போட்டியிடும் என கூறியுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா, தேர்தலுக்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் கட்சியினால் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இதேவேளை ஐக்கிய தேசியக் கட்சியும், மக்கள் விடுதலை முன்னணியும் (ஜே.வி.பி.) எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் அனைத்து மாவட்டங்களிலும் தனித்தப் போட்டியிடவுள்ளன. (ந-5)

## புலிகளின்...

இத்துப்பாக்கியையும் ரவைகளையும் வழங்கியுள்ளதாக தபாலக ஊழியர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

அந்த மீனவரைப் பொலிஸார் தேடிச் சென்றபோது அவர் மீன் லொறியில் பயணம் செய்து கொண்டிருந்ததாகவும் தம்மைக் கண்டுவிட்டு தப்பிச்சென்றுவிட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

தென்னிலங்கையில் இடம்பெற்று வந்த பெரும்பாலான கொலை,கொள்ளைகளில் ஈடுபட்டு வருவோருக்கு இந்த ஆயுதத்தையும் தோட்டாக்களையும் இவர் இரண்டு இலட்சம் ரூபாய் வீதம் வாடகைக்குக் கொடுத்து வந்ததாகவும் வாடகையால் கிடைக்கும் பணத்தை மீனவரும் தானும் பகிர்ந்து கொள்வதாகவும் சந்தேக நபர் பொலிஸ் விசாரணையில் தெரிவித்துள்ளார்.

இந்த நவீன ரக ரி-56 துப்பாக்கியை படையினரோ பொலிஸாரோ பயன்படுத்துவதில்லை என தென் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் நீல் தளுவத்த தெரிவித்தார்.

38 வயதான சந்தேகநபரை பொலிஸார் தடுத்துவைத்து விசாரணை செய்து வருகின்றனர். அத்துடன் தப்பியோடிய மீனவரைக் கைது செய்ய பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர். (ந-5)

## அமெரிக்க...

கலந்துரையாடல்களை மேற்கொள்ளவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இதற்கு முன்னர் அமெரிக்க ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை இலங்கைக்கு கிடைக்காமல் போயிருந்தது. எனினும் இந்த முறை இந்த வரிச்சலுகை இலங்கைக்கு கிடைக்கும் என அரசாங்கம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது. (ந-5)

## பல்கலை. மாணவருக்கு...

ஊடகங்களுக்கு தெளிவுபடுத்துவதற்காக ஒன்றியம் கொழும்பு மருதானை சியச மண்டபத்தில் ஊடகவியலாளர் சந்திப்பொன்றைநடத்தியது.

பல்கலைக்கழக மாணவர்களுக்கு இராணுவ முகாம்களில் பயிற்சிகளை வழங்குவதானது. அரசாங்கம் இராணுவ ஆட்சியை நோக்கிச் செல்லும் முதல் கட்ட நடவடிக்கையாகும்.

இலட்சக்கணக்கானவர்களை சிறைப்படுத்தும் சிறைச்சாலைகளை நிர்மாணிக்கவுள்ளதுடன் பாதுகாப்புச் செலவு, யுத்தம் நடைபெற்ற காலத்தைவிட 30 பில்லியன் ரூபாயினால் இம்முறை அதிகரிக்கப்பட்டுள்ளது.

அரச நிறுவனங்கள் பலவற்றில் ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரிகள் நியமிக்கப்படுவதானது இராணுவ ஆட்சியை நோக்கி செல்லும் மற்றும் ஒரு கட்டமாகும்.

ஹிட்லர் போன்ற சர்வாதிகாரிகள் பல்கலைக்கழக மாணவர்களுக்கு மாத்திரமல்ல பாடசாலை மாணவர்களுக்கும் இராணுவப் பயிற்சிகளை வழங்கினர்.

அரசாங்கத்தின் இந்த செயல்பாடு பாடசாலை வரை நீடிக்கு காலம் வெகுதொலைவில் இல்லையென பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் உதுல் பிரேமரத்ன தெரிவித்துள்ளார்.

இராணுவ முகாம்களில் பிள்ளைகள் மீது பாலியல் துஷ்பிரயோகம் மேற்கொள்ளப்படலாம். இதனால் நாட்டிலுள்ள பெற்றோர் ஒரே வயதிலான தமது பிள்ளைகளை பல்கலைக்கழகங்களுக்கு அனுப்புவார்களா?

அரசாங்கம் யுத்த வெற்றியைக் காட்டியே சகல வெற்றிகளையும் பெற்றது. இதனால் அரசாங்கம் சகலவற்றையும் இராணுவ அறிவோடு பார்க்கிறது. இதன் மூலம் எதிர்கால சந்ததியினரை அழிக்கத் தயாராகி வருகிறது எனவும் உதுல் பிரேமரத்ன குறிப்பிட்டுள்ளார். (ந-5)

## புலிகளை தோற்கடித்...

இந்த மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு 60 நாடுகளைச் சேர்ந்த இராணுவ அதிகாரிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 30 ஆண்டுகளாக தமிழீழ விடுதலைப்புலிகளை தோற்கடிப்பதற்கு பாதுகாப்புத்தரப்பினர் எடுத்த முயற்சிகள்குறித்து இந்த மாநாட்டில் விளக்கமளிக்கப்படவுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளை தோற்கடிப்பதற்காக இலங்கை அரசாங்கம் பயன்படுத்திய தந்திரோபாயங்கள் குறித்து அறிந்து கொள்ள பல நாடுகள் ஆர்வம் காட்டி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகள் பயன்படுத்திய வெளிநாட்டு ஆயுதங்கள் தொடர்பிலும் இந்த மாநாட்டின்போது அம்பலப்படுத்தப்படும்.

சில நாடுகளின் ஆயுத உற்பத்திகள் எவ்வாறு புலிகளின் கைகளுக்கு கிட்டியது என்பது தொடர்பிலும் இங்கு விளக்கம் கொடுக்கப்படும்.

வன்னியில் நடந்த யுத்தத்தின்போது இடம்பெற்ற போர்க் குற்றங்கள் தொடர்பில் சர்வதேச ஊடகங்கள் புதுப்புதுத் தகவல்களை வெளியிட்டுவரும் இவ் வேளையிலும், ஐ.நா. சபை இலங்கையில் நடந்த போர்க்குற்றங்கள் குறித்த விசாரணைகளை நடத்த தீவிரம்காட்டி வருகின்ற நேரத்திலும் இலங்கை அரசு விடுதலைப் புலிகளை தோற்கடித்த விதம் குறித்து சர்வதேச மாநாட்டை நடத்த விருப்பது குறிப்பிடத்தக்கது. (ந-5)

## இனப்பிரச்...

பின் சார்பில் அதன் தலைவர் இரா.சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, எம். சுமந்திரன், சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நாளை நடைபெறவுள்ள இக் கூட்டத்தில் இருதய சுகவீனம் காரணமாக இந்தியாவில் சிகிச்சை பெற்று வருவதால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கலந்து கொள்ளமாட்டார். (ந-5)


CALL SERVICE
T.P : 021-222 4459, 0774192275
Computer,(Laptop, Desktop) Mobile Phone, TV, DVD Player, Monitor (LCD, CRT) Power Supply, UPS, Printer, உட்பட இலத்திரனியல் பொருட்கள் உங்கள் இருப்பிடங்களுக்கு வந்து உத்தரவாதத்துடன் பழுது பார்த்துக் கொடுக்கப்படும்.
STR COMPUTER SYSTEM
384, Navalar Road, Nallur, Jaffna.

STR COMPUTER SYSTEM
384, Navalar Road, Nallur, Jaffna.
Tel: 222 4459, 0774192275, Fax :222 4460.
CERTIFICATE IN HARDWARE TECHNOLOGY
Computer Assembling, Repairing, Maintenance, Software Installation, Internet Connection, என்பன ஆரம்பத்தில் இருந்து கற்பிக்கப்படும்.
8 Students in a Batch
உங்கள் கணனிகளில் ஏற்படும் பழுதுகளை நீங்களே சரிசெய்து கொள்ளலாம். ஆண்கள், பெண்கள், பாடசாலை மாணவர்கள், தொழில் புரிபவர்களுக்கென விஷேட வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளன.
DURATION 1 MONTH, RS. 2000/-
(கைலச பிள்ளையார் கோவிலுக்கு அருகில்)

நாம் இணைவது உங்கள் சிறந்த பெறுபேறுக்கே...
கணக்கீடு: R.சுகிர்தன் (B.Com)
பொருளியல்: K.பிரதீபன் (B.B.A)
வணிககல்வி: P.கோகிலன்
A/L 2013 நாளை மாலை 4 மணி
AAC அரியாலை
(ஸ்ரான்லி கல்லூரிக்கு அண்மையில்)
(3387)

A/L DAY CLASS
கலை, வர்த்தகப் பிரிவு
(திங்கள் முதல் வெள்ளி வரை)
புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன
NEC பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

LOGIC
குறியீட்டு அளவையியல்
A/L 2012
பிரிவு III
ஆரம்பம்: 10/01/2011 (Mon 3.15 PM)
(Mon,Wed 3.15-5.00 P.M)
P.கமல்தாசன்
(C-2119)
NEC பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

பௌதிகவியல்
A/L 2013 ஆரம்பம் 11/01/2011 (Tue 5.00 PM)
(Tue,Fri 5.00 -6.00 P.M)
A/L 2011 புலங்கள்
(Mon,Thur 5.00 -6.00 P.M)
K.Kajan
NEC பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

HOTEL VACANCIES
A well established star class hotel situated in Jaffna is looking for Dynamic,Self motivated and 02 to 03 years well experienced persons for the following categories,
Secretary to the Managing Director (Female)-(English speaking)
Receptionist(Male/Female)-(English speaking)
Telephonist -(English speaking& written)
Barman
Waiters
Room boys
Kitchen Helpers


Please send the CV with the contact details of two non related referees within 05 days. write the post Appliying in the Left Corner in the Envelope
The Managing Director
Tilko Jaffna City Hotel
70/6,K.K.S.Road, Jaffna.
E-Mail:Citystarkb@gmail.com
(3389)

O/L மாணவர்களுக்கு நேரடி கட்டணக் கழிவு
Direct Offer
இம்முறை சாதாரணதர பரீட்சை (2010) எழுதிய மாணவர்கள் Direct Offer மூலமாக நேரடியாக இணைந்து 75% வரையிலான ஸ்கொலர்ஷிப்பை பெற்றுக்கொள்ளலாம். ஒவ்வொரு வாரமும் புதிய பிரிவுகள் ஆரம்பம்
ASIAN COMPUTERS
யாழ்.நகர் : 2G , ஸ்ரான்லி வீதி, 021-2225677
நெல்லியடி : கொடிகாமம் வீதி, 021-2262399
சாவகச்சேரி : 230, 1ம் மாடி, கண்டி வீதி, 021-2270267


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.01.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.